# தொழிலாளர் பாதை

இலங்கையில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது

இலங்கையில் வெளியாகும் ஒரே சோசலிஸ்ட் தமிழ் பத்திரிகை

மாத இதழ் 491 | 1998 அக்டோபர் | ரூபா 8.00

UNIVERSITY OF JAFFNA LIBRARY 17 NOV 1998 PERIODICALS DIVISION

உள்ளே

■ வடக்கு-கிழக்கில் மக்கள் பட்டினி நிலைமைக்கு முகம் கொடுக்கும் ஆபத்து .... 2
■ ரூஷ்ய மார்க்சிச வரலாற்றாசிரியர் மாஸ்கோவில் மரணம் .... 3
■ இனவாதக் குண்டர்கள் தொழிலாளர் வீடுகளுக்கு தீமூட்டினர் .... 4
■ இனவாத யுத்தத்துக்கு 25 வருடங்கள் .... 6-7
■ தோட்டத் தொழிலாளர்கள் மீது மிருகத்தனமான சித்திரவதை .... 11
■ பொன்னில் ஆட்சி அதிகாரத்தில் மாற்றம் 12
■ இஸ்லாமியமயமாக்கத்தின் மூலம் ஷெரீப் அரசாங்கம் அடக்குமுறை ஆயுதத்தை தூக்க முயற்சி .... 13

**சோ.ச.க. அங்கத்தவர்களை விடுதலைப் புலிகளின் கைதில் இருந்து விடுதலை செய்யும் அனைத்துலகப் பிரச்சாரம்**

— 8-11 பக்கம்

# சோ.ச.க. அங்கத்தவர்களை விடுதலைப் புலிகள் விடுதலை செய்ததை ஊர்ஜிதம் செய்விப்போம்!

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பினால் கிளிநொச்சி பகுதியில் கைது செய்யப்பட்ட சோசலிச சமத்துவக் கட்சியின் நான்கு அங்கத்தவர்களும் விடுதலை செய்யப்பட்டதாக அவர்களினால் அனுப்பப்பட்ட கடிதங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்த சோ.ச.க. அங்கத்தவர்களான இராஜேந்திரம் சுதர்சன் திருஞானசம்பந்தனால் செப்டம்பர் 14ம் திகதி எழுதப்பட்டு 19ம் திகதி கட்சி தலைமையகத்திற்கு கிடைத்த இரண்டு கடிதங்களின்படி இவர்கள் இருவரும் அத்தோடு காசிநாதன் நகுலேஸ்வரன் என்ற மற்றொரு தோழரும் செப்டம்பர் 13ம் திகதி நிபந்தனையின்றி விடுதலை செய்யப்பட்டுள்ளனர். செப்டம்பர் 24ம் திகதி கிடைத்த சுதர்சனின் மற்றொரு கடிதத்தின்படி மற்றொரு சோ.ச.க. அங்கத்தவரான இராஜரத்தினம் இராஜவேல் செப்டம்பர் 16ம் திகதி விடுதலைப் புலிகளால் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

விடுதலை செய்யப்பட்ட சோ.ச.க. அங்கத்தவர்கள் நால்வரும் நற்சுகத்துடன் இருப்பதாகவும் அவர்கள் தடுத்து வைக்கப்பட்டு இருந்த போது எதுவிதமான உடல, உள வதைகளுக்கு உள்ளாகவில்லை எனவும் அந்தக் கடிதங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த விதத்தில் சோ.ச.க. அங்கத்தவர்கள் விடுதலை செய்யப்பட்டமையானது சோசலிச சமத்துவக் கட்சியும் நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவும் உலக சோசலிச வெப் நிலையமும் கடந்த இரண்டு மாதங்களாக முன்னெடுத்த அனைத்துலக பிரச்சார இயக்கத்தின் பெறுபேறாகக் கிடைத்த ஒரு வெற்றியாகும்.

கிளிநொச்சியில் இருந்து கிடைத்த இந்தக் கடிதங்கள் சுட்டிக் காட்டும் இன்னொரு விடயம் என்னவெனில் விடுதலைப் புலிகள் கைது செய்த சோ.ச.க. அங்கத்தவர்கள் தொகை ஐவர் அல்ல.

நால்வரே. இருந்த போதிலும் சோ.ச.க. அங்கத்தவர்கள் நால்வரும் விடுதலை செய்யப்பட்டது பற்றிய இந்தத் தகவல் மேலும் ஊர்ஜிதம் செய்யப்பட வேண்டியுள்ளது.

ஆதலால் சோ.ச.க. அங்கத்தவர்கள் விடுதலை செய்யப்பட்டதை பகிரங்கமாக ஊர்சிதம் செய்யும்படியும் விடுதலை செய்யப்பட்ட அங்கத்தவர்களின் நிலைமையையும் அவர்களின் உடல்நிலையையும் ஊர்சிதம் செய்யும் பொருட்டு அவர்களுடன் திட்டவட்டமான தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ளும் வகையில் சோ.ச.க. அங்கத்தவர்களுக்கு வாய்ப்பு அளிக்கும்படியும் அதாவது சோ.ச.க.பிரதிநிதி ஒருவர் கிளிநொச்சிக்கு விஜயம் செய்யவோ அல்லது விடுதலை செய்யப்பட்டவர்கள் கொழும்புக்கு வருகை தருவதற்கு இடமளிக்கும்படியும் சோ.ச.க. விடுதலைப் புலிகளிடம் வேண்டுகின்றது. அவ்வாறே எதிர்வரும் காலத்தில் வன்னியில் சோ.ச.க. அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு எந்தவிதமான தடையும் இருக்கமாட்டாது என்பதை ஊர்ஜிதம் செய்யும்படியும் நாம் விடுதலைப் புலிகளை வேண்டுகின்றோம்.

ஆறுமாதங்களுக்கு மேற்பட்ட காலம் தடுத்துவைக்கப்பட்டதன் பின்னர் சுதர்சனும் சம்பந்தனும் நகுலேஸ்வரனும் விடுதலைப் புலிகளால் விடுதலை செய்யப்பட்டதை அறிவிக்கும் பொருட்டு சோ.ச.க. செப்டம்பர் 22ம் திகதி மாலை கொழும்பு குரு மதுர மண்டபத்தில் பத்திரிகையாளர் மகாநாட்டை நடாத்தியது. இதில் றொயிட்டர், ஐ.ரி.என். ரூபவாஹினி, ஐலன்ட், வீரகேசரி, தினக்குரல், மிட்வீக் மிரர் முதலான வெகுஜனத் தொடர்புச் சாதனங்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். அதில் சோ.ச.க.பொதுச் செயலாளர் விஜே டயஸ் பின்வருமாறு குறிப்பிட்டார்: இதை மிகவும் உற்சாகமளிக்கும் ஒரு அபிவிருத்தியாக சோ.ச.க. கொள்கின்றது. அந்தக் கடிதங்களில் குறிப்பிடப்படும் விடயங்கள் உண்மையாக இருக்குமானால் சிங்கள சோவினிஸ்டுகளுக்கும் 15 வருட கால இனவாத யுத்தத்துக்கும் எதிரான போராட்டத்தில் முன்னணியில்

# இனவாத யுத்தத்துக்கு ஒரு சதமும் கொடுக்காதே!

இனவாத யுத்தத்தின் பேரில் தொழிலாளர்களிடம் இருந்து ஒரு கிழமை சம்பளத்தை வெட்டிக் கொள்ளும்படி பொதுஜன முன்னணி அரசாங்கம் செய்துள்ள சிபார்சை அடியோடு நிராகரிக்கும்படி சோசலிச சமத்துவக் கட்சி முழுத் தொழிலாளர் வர்க்கத்தையும் வேண்டிக் கொள்கின்றது.

கடந்த வாரத்தில் பொதுஜன முன்னணி அரசாங்கம் யுத்த செலவினங்களுக்காக அரசாங்க வருமானத்தில் இருந்து மற்றுமொரு பெரும் தொகையை ஒதுக்கிக் கொண்டுள்ளது. இது இராணுவ பொலிஸ் ஒடுக்குமுறை இயந்திரத்தை மேலும் மேலும் பலப்படுத்துவதையும் இனவாத யுத்தத்தை உக்கிரமாக்குவதையும் மட்டுமல்லாது இனவாத யுத்தத்தில் அரசாங்கம் எந்த விதத்தில் மாட்டிக் கொண்டுள்ளது என்பதையும் எடுத்துக் காட்டுகின்றது. யுத்த செலவினங்களை மேலும் அதிகரிப்பதோடு கட்டாய இராணுவ சேவையைத் திணிக்கும் ஆபத்து புதுப்பிக்கப்பட்டுள்ளது. தொழிலாளர் வர்க்கத்தின் சம்பளத்தில் இருந்து இந்த யுத்தத்தின் பேரில் ஒரு தொகை பணத்தை கொள்ளையடிக்கவும் அரசாங்கம் இந்நாட்களில் திட்டமிட்டு வருகின்றது.

செப்டம்பர் 23ம் திகதி அரசாங்கம் யுத்த செலவினத்தின் பேரில் 1212 கோடி ரூபாக்களை மேலதிக மதிப்பீடாக ஒதுக்கிக் கொள்ள பாராளுமன்றத்தில் பிரேரணை நிறைவேற்றிக் கொண்டது. இது 1998ம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கிக் கொண்ட யுத்த செலவினங்களை மேலும் நூற்றுக்கு 30 வீதத்தினால் அதிகரிப்பதாகும். முன்னர் ஒதுக்கிக் கொண்டிருந்த தொகை 4400 கோடி ரூபாக்களாகும். இப்போது இந்த அதிகரிப்பு மூலம் அது 5700 கோடி ரூபாக்களாக உயர்ந்துள்ளது. 1998ம் ஆண்டு முடிவடைவதற்கு இன்னமும் மூன்று மாதம் இருக்கையிலேயே மேலதிக நிதி ஒதுக்கிக் கொள்ளப்பட்டுள்ளது. இந்த விதத்தில் பார்க்கையில் யுத்தச் செலவினங்கள் அரசாங்கத்தின் வருமானத்தில் நூற்றுக்கு 25 வீதத்தை தாண்டிச் செல்கின்றது. பாராளுமன்ற மோசடிகள் ஊடாக இந்த விதத்தில் பலாத்காரமான முறையில் யுத்தத்துக்கு கொள்ளையடிக்கப்பட்டு இருப்பது பொதுஜன நலனுக்காக செலவிடப்பட வேண்டியிருந்த ஒரு பெருந்தொகை பணமாகும். கல்வி, சுகாதார சேவை என்ற இரண்டுக்கும் அரசாங்க வரவுசெலவுத் திட்டத்தில் ஒதுக்கிக் கொண்டுள்ள நிதியைக் காட்டிலும் அதிகமான தொகை இப்போது யுத்தத்துக்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்த நிலைமையினுள் தொழிலாளர்களின் சம்பளத்தில் நாலில் ஒரு பங்கை யுத்தச் செலவினத்துக்காக நேரடியாக கொள்ளையடிக்க அரசாங்கம் திட்டமிடுகிறது. கடந்த மே மாதத்தில் ஜனாதிபதி தலைமையில் கூடிய "தேசிய பாதுகாப்பு நிதி" நிர்வாகக் கமிட்டிக் கூட்டத்தில் எடுத்துக் கொள்ளப்பட்ட தீர்மானம் இப்போது பத்திரிகை அறிக்கைகளாகவும் சுற்றறிக்கைகளாகவும் சகல அரசாங்க, தனியார் நிறுவனங்களிலும் விநியோகிக்கப்பட்டு வருகின்றது

அது பின்வருமாறு குறிப்பிடுகின்றது :

"புலி பயங்கரவாதிகளுடன் நடாத்தும் யுத்தத்தை உரிய காலப் பகுதியினுள் முடிவுக்குக் கொணர பாதுகாப்பு படைகளில் இப்போது இருந்து கொண்டுள்ள படையாட்களின் எண்ணிக்கை பற்றாக்குறையானது என்பதை அரசாங்கம் புரிந்து கொண்டுள்ளது. நாட்டு மக்களை கட்டாய இராணுவ சேவைக்கு சேர்த்துக் கொள்ள அரசாங்கம் கொள்கை ரீதியில் விருப்பம்

15ம் பக்கம் பார்க்க

**இனவாத யுத்தம் வேண்டாம்!**
**சிங்கள- தமிழ் தொழிலாளர் ஐக்கியத்தைக் கட்டியெழுப்புவோம்!**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழிலாளர் பாதை
இலங்கையில் வெளியாகும் ஒரே சோசலிச தமிழ் பத்திரிகை

ஆசிரியர்: கே. ரத்னாயக்க
துணை ஆசிரியர்: எஸ். இராசேந்திரன்
பதிப்பாளர்: தீபால் ஜயசேகர
சோசலிச சமத்துவக் கட்சியின் பொதுச் செயலாளர்: விஜே டயஸ்
அலுவலகம்:
90, 1 வது மாளிகாகந்த
ஒழுங்கை
கொழும்பு - 10.
தொலைபேசி: 682220

# வடக்கு-கிழக்கில் மக்கள் பட்டினி நிலைமைக்கு முகம் கொடுக்கும் ஆபத்து

பொதுஜன முன்னணி அரசாங்கத்தின் இனவாத யுத்தத்தினால் காட்டுமிராண்டி நிலைமைகளுக்கு முகம் கொடுத்து அகதிகளான இலட்சக் கணக்கான தமிழ் ஒடுக்கப்படும் மக்களுக்கு அரசாங்கம் இதுவரை காலமும் வழங்கிவந்த உணவு பங்கீடு உட்பட்ட உதவி மானியங்களை வெட்டியுள்ளதால் வடக்கு கிழக்கு மாகாணங்களில் பட்டினி நிலைமை தோன்றியுள்ளது.

இது தமிழ் ஒடுக்கப்படும் மக்களுக்கு எதிரான இனவாத யுத்தத்தின் அட்டூழியங்களில் பொதுஜன முன்னணி புதிதாகச் சேர்ந்துக் கொண்டுள்ள ஒன்றாகும்.

இலங்கையில் வாழும் முழுத் தமிழ் சனத்தொகையில் இனவாத யுத்தத்தின் இரத்தக் களரிக்கு முகம் கொடுத்த பெருவாரியானோர் அகதி முகாம்களில் தங்கியுள்ளனர். இலங்கையின் 18 மில்லியன் சனத்தொகையில் ஒவ்வொரு 22.5பேருக்கு ஒருவர் அகதியாக உள்ளனர். புனர்வாழ்வு ஆணையாளர் நாயகத்தின் புள்ளிவிபரங்களின்படி இந்த ஆண்டு எப்பிரல் மாதம் அளவில் வடக்கு கிழக்கு மாகாணங்களில் அகதிகளான குடும்ப எண்ணிக்கை 195195. இக்குடும்ப அங்கத்தவர்களின் எண்ணிக்கை 800845. இவர்களில் 796079 பேர் பல மாவட்டங்களிலும் உள்ள 15 நலன்புரி நிலையங்களில் உள்ளனர் மற்றொரு 4766 குடும்பங்கள் அவர்களின் உறவினர்கள், நண்பர்களோடு வாழ்கிறார்கள்.

இந்த அகதிகளுக்கு வழங்கப்பட்டு வந்த உலர் உணவு பொருட்களை ஜூலை 1ம் திகதி தொடக்கம் நிறுத்திவிடும்படி அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகம் அலுவலகம் கட்டளையிட்டுள்ளது. இதனால் வடக்கு கிழக்கு மாகாணங்களில் உள்ள பெரும்பான்மையான அகதிகள் குடும்பங்கள் தமது உயிரைக் காக்கும் பிரச்சினைக்கு முகம் கொடுத்து உள்ளார்கள்.

உலர் உணவு பொருள் விநியோகத்தை வெட்ட வேண்டாம் எனக் கேட்டு யாழ்ப்பாண ஆயர் சௌந்தரநாயகமும் மன்னார் ஆயர் இராசப்பு ஜோசப்பும் ஜனாதிபதிக்கு விடுத்த ஒரு வேண்டுகோளில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது. :

"மேற் குறிப்பிட்ட உலர் உணவு பங்கீடு வெட்டு வன்னி மாவட்டத்தின் மக்களை மரணத்தின் விளிம்புக்கு கொணரும். அங்கு பட்டினி மரணங்கள் எற்படுவதைத் தடுக்க வேண்டுமானால் அதற்கு முன்னதாக உதவி மானியம் வழங்கப்பட வேண்டும்." (வீரகேசரி செப்டம்பர் 02.1998)

யாழ்ப்பாண அரசாங்க அதிபர் கே.சண்முகநாதன் ஜூலை 18 19 வீக்கென்ட் எக்ஸ்பிரஸ் பத்திரிகைக்கு வழங்கிய ஒரு பேட்டியில் "அடுத்துவரும் 9 மாதங்களுள் மேலும் 29000 குடும்பங்கள்(தனியாட்கள் அல்ல) யாழ்ப்பாணத்துக்கு மீண்டும் வரும் என எதிர்பார்த்துள்ள ஒரு நிலைமையில் இந்த வெட்டை விதிக்கும் தீர்மானம் நெருக்கடியை உக்கிரமாக்கும்." என்றுள்ளார்.

## உதவிமானியம் வெட்டு

ஐக்கிய இராஜ்ஜியத்தை தலைமையகமாகக் கொண்ட பிரித்தானிய அகதிகள் கவுன்சிலின் இலங்கை மொனிடர் என்ற வெளியீடு ஜூன் மாதத்தில் வெளியிட்டுள்ள அறிக்கை மூலம் அரசாங்கம் ஜூலை 1ம் திகதி தொடக்கம் உணவு மானியத்தை வெட்டுவதற்கு எடுத்துள்ள முடிவு பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது. உதவிமானியம் வெட்டும் இந்தத் தீர்மானம் உயர்மட்டத்தில் எடுக்கப்பட்ட ஒன்றாகும். அகதிகள் கவுன்சிலின் அறிக்கையின்படி இந்த முடிவு ஜனாதிபதி, அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகத்துடன் நடாத்திய பேச்சுவார்த்தைகளைத் தொடர்ந்தே எடுக்கப்பட்டுள்ளது. இந்த உதவி மானிய வெட்டு யாழ்ப்பாண மாவட்டத்தில் நூற்றுக்கு 40 வீதமும் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் 20 வீதமும் மன்னார், வவுனியா மாவட்டஙகளில் நூற்றுக்கு 15வீதமும் இடம்பெற உள்ளது. அரசாங்கம் முகம் கொடுத்துள்ள நிதி நெருக்கடியினால் மாதாந்தம் 240 மில்லியன் ரூபாக்களை அகதிகளுக்கான உதவிமானியமாக வழங்க முடியாது எனவும் அதனால் இம்முடிவு எடுக்கப்பட்டதாகவும் அந்த அறிக்கையில தெரிவிக்கப்பட்டுள்ளது. அரசாங்கத்தின் நிதி நெருக்கடி என்னவாக இருந்த போதிலும் 1998 வரவு செலவுத் திட்டத்தில் பொது ஜன முன்னணி அரசாங்கம் இனவாத யுத்தத்துககு ஒதுக்கிய நிதி ரூபா.40000 மில்லியன்களாகும். அத்துடன் திருப்தி காணாத அரசாங்கம் கடந்த ஆகஸ்டு மாதத்தில் மேலும் 800 கோடி ரூபாக்களை மேலதிகமாக ஒதுக்கியது. இனவாத யுத்தத்தை அபிவிருத்தி செய்ததோடு அதன் ஒரு ஆயுதமாக அகதிகளை தமிழ் மக்களைப் பட்டினி போடுவது இலங்கையில் ஏகாதிபத்தியச் சார்பு ஆளும் வர்க்கத்தின் காட்டுமிராண்டி வேலைத்திட்டமாகும் என்பதை மூடி மறைக்க முடியாது போயுள்ளது.

இந்த வெட்டுக்களின் பின்னர் யாழ்ப்பாணத்தில் உணவு உதவி மானியம் பெறுவோர் குடும்பங்களின் எண்ணிக்கை 81000ல் இருந்து 55000 ஆக வெட்டிக் குறைக்கப்பட்டுள்ளது. யாழ்ப்பாணத்தில் அகதிகளானவர்களுக்கு உதவிமானியம் வழங்க செலவிடப்படும் பணம் 70 மில்லியன் ரூபாக்களில் இருந்து 55 மில்லியன் ரூபாக்களாக (மாதாந்தம்) வெட்டப்பட்டுள்ளது. வவுனியாவில் இந்த உதவி மானியம் பெறும் குடும்பங்களின் எண்ணிக்கை 77000ல் இருந்து 32200 ஆகக் குறைக்கப்பட்டுள்ளது.

இனவாத யுத்த நடவடிக்கைகளாலும் விடுதலைப் புலிகளின் நெருக்குவாரத்தினாலும் வசிப்பிடங்களை இழந்து அகதிகளானவர்களில் பெரும்பாலானோர் வன்னி மாட்டத்திலேயே அடைபட்டுக் கிடக்கின்றனர். யாழ்ப்பாணத்தில் இருந்து தப்பி வந்த 3 இலட்சம் மக்களுடன் சுமார் 4 இலட்சம் பேரைத் தாண்டியுள்ள வன்னியில் அகதிகளான சகலருக்கும் ஒரு போதும் தொடர்ந்து உணவு மானியமோ மற்றும் உதவிகளோ கிடைத்தது கிடையாது. இந்த ஆண்டின் ஜூலை 1ம் திகதிக்கு முன்பிருந்தே வன்னி மாவட்டத்தில் உள்ள அகதிகளின் உணவுப் பங்கீடு வெட்டப்பட்டுள்ளது. 1996 எப்பிரல் மாத ரிவிரச 11 இராணுவ நடவடிக்கையினால் யாழ்ப்பாணத்தில் இருந்து வன்னிக்கு வந்த 60000 அகதிகளுககு உணவு பங்கீட்டு விநியோகம் நிறுத்தப்பட்டுள்ளது. 1997 மே மாதத்தில் வன்னி மாவட்டத்தில் உணவுப் பங்கீடு கிடைப்போரின் எண்ணிக்கை 420000ல் இருந்து 185000ஆக குறைக்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டு மே மாதமளவில் அத்தியாவசிய சேவைகள் ஆணையாளரினாலும் கூட்டுறவுச் சங்கங்களாலும் வன்னி மாவட்டத்துக்கு பங்கீடு செய்யப்பட்டுள்ள உணவு தொகை இதற்கு முந்திய மாதங்களில் வழங்கப்பட்ட உணவுத் தொகையைக் காட்டிலும் 808 தொன்கள் குறைவாக வழங்கப்பட்டுள்ளது.

## மக்கள் எதிர்ப்பு

இந்த உணவுப் பங்கீட்டு வெட்டுககு எதிராகக் கிளர்ந்த பொதுமக்கள் எதிர்ப்புக் காரணமாக கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் அரசாங்க அலுவலகங்களை இழுத்து மூட நேரிட்டதாக அறிக்கைகள் வெளியாகின. இந்த மக்கள் பிரச்சாரத்தின் மத்தியில் மன்னார், யாழ்ப்பாணத்தில் அமுலுக்குக் கொணரப்பட்ட உணவு பங்கீடு வெட்டினை இரத்துச் செய்வதாக அரசாங்கம் கூறிய போதிலும் அது அமுல் செய்யப்படும் வரை அதில் நம்பிக்கை கொள்ள முடியாது. இந்த வெட்டுக் காரணமாக மக்கள் கடந்த மூன்று மாதங்களாக பட்டினி நிலைமைக்குள் தள்ளப்பட்டுள்ளனர். அவர்களுக்கு கிடைத்து வந்த உணவுப் பங்கீடும் கூட மக்களை பட்டினி போடுவதாகவே இருந்து வந்தது.

15ம் பக்கம் பார்க்க

# கிளிநொச்சி இராணுவ முகாமின் வீழ்ச்சியும் மாங்குளத்தை கைப்பற்றியமையும்

செப்டம்பர் 27ம் திகதி கிளிநொச்சி இராணுவ முகாமுக்கு தொடுக்கப்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகளின் தாக்குதலினால் பெருமளவிலான இராணுவத்தினர் இறந்ததோடு முகாமும் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டுள்ளது. கிளிநொச்சிகரு சமீபமாக உள்ள பரந்தன் இராணுவ முகாமையும் அந்த பிராந்தியத்தைச் சூழவும் பல நாட்களாக இராணுவத்திற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே இடம்பெற்றுவந்த மோதுதல்கள் இன்னமும் தொடர்வதாக தெரிகின்றது.

இதற்கிடையே நீண்டகாலமாக அரசாங்க படைகளால் கைப்பற்ற முடியாது இருந்துவந்ததும் வன்னியில் விடுதலைப் புலிகளின் முக்கிய கோட்டைகளில் ஒன்றாக கொள்ளப்பட்டதுமான மாங்குளம் செப்டம்பர் 30ம் திகதி அரசாங்கப் படைகளால் கைப்பற்றப்பட்டுள்ளதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

செப்டம்பர் 27ம் திகதி கிளிநொச்சி இராணுவ முகாம் மீது விடுதலைப் புலிகள் நடாத்திய தாக்குதலினால் சுமார் ஆயிரம் இராணுவத்தினர் கொல்லப்பட்டதோடு அதே தொகையினர் காயம் அடைந்துள்ளதாகவும் நம்பப்படுகின்றது. தாம் 800 அரசாங்கப் படைகளை கொன்றுள்ளதாக விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர். அமைச்சரவை பத்திரிகையாளர் மகாநாட்டில் பேசிய இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சுனில் தென்னக்கோன் விடுதலைப் புலிகள் இராணுவ படையாட்களின் 600 சடலங்களை சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் ஊடாகக் கையளிக்க ஆயத்தமான போதிலும் அதில் 400ஐ "அடையாளங்கண்டு" பொறுப்பேற்றதாகவும் கூறினார். கொழும்பு தேசிய ஆஸ்பத்திரி, களுபோவிலை, ராகமை பெரிய ஆஸ்பத்திரிகளும் அநுராதபுரம் ஆஸ்பத்திரியும் காயம் அடைந்த இராணுவத்தினரால் நிறைந்து போயுள்ளது.

இன்னும் 500 அரசாங்கப் படையாட்கள் "காணாமல்" போயுள்ளதாக சொல்லப்படுகின்றது.

கிளநொச்சியைக் கைப்பற்றும் தாக்குதலில் விடுதலைப் புலிகளில் 520 பேர் கொல்லப்பட்டதாகவும் இன்னும் பெரும் தொகையானோர் காயமடைந்துள்ளதாகவும் இந்த பிரிகேடியர் மேலும் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி இராணுவ முகாமில் இருந்த வெடி மருந்துகளும் மற்றும் இராணுவ ஆயுதங்களும் கருவிகளும் அழிந்து போயுள்ளதாயும் ஒரு பகுதி விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டுள்ளதாகவும் நம்பப்படுகின்றது.

ஜயசிக்குறு இராணுவ நடவடிக்கை ஆரம்பமாகியதன் பின்னர் இராணுவத்துக்கு தொடுக்கப்பட்ட பெரும் தாக்குதல் இதுவாகும் என இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் தென்னக்கோன் ஒப்புக்கொண்டதோடு முல்லைத்தீவு முகாம் மீது தொடுக்கப்பட்ட தாக்குதலை விட

## அனைத்துலக குழுவின் பகுதிகளின் இன்டர்நெட்

**World Socialist Web Site**
**http://www.wsws.com**

* அமெரிக்கா:
**http://www.socialequality.com**

* அவுஸ்திரேலியா:
**http:www.workersnews.flex.com.au**

* பிரித்தானியா:
**http:/www.socialequality.org.uk**

* கனடா:
**http://www.egalitesociale.com**


* ஜேர்மன்:
**http://gleichheit.de**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*வடிம் றொகோவின்: 1937-1998*

# ரூஷ்ய மார்க்சிச வரலாற்றாசிரியர் மாஸ்கோவில் மரணம்

**டேவிட் நோர்த்**



வடிம் றொகோவின்

ரூஷ்ய மார்க்சிச வரலாற்றாசிரியரும் சமூகவியலாளரும் அத்தோடு சோவியத் யூனியனின் உள்ளே ஸ்டாலினிச அதிகாரத்துவத்தின் எழுச்சிக்கு எதிரான ட்ரொட்ஸ்கிச இடதுசாரி எதிர்ப்பு பற்றிய ஆறு ஆராய்ச்சி தொகுப்புக்களின் ஆசிரியருமான வடிம் ஷக்காரோப் றொகோவின் செப்டம்பர் 17ம் திகதி இரவு மாஸ்கோவில் காலமானார்.

தத்துவ விஞ்ஞானக் கலாநிதியும் மாஸ்கோவில் உள்ள ரூஷ்ய விஞ்ஞான அக்கடமியின் சமூகவியல் நிறுவனத்தின் முன்னணி ஆராய்ச்சியாளருமான றொகோவின் சோவியத் யூனியனின் பெரும் புகழ்பெற்ற சமூகவியலாளருமாவார்.

எவ்வாறெனினும் தமது கல்விசார் சகாக்களில் இருந்து முற்றிலும் முரண்பட்ட முறையில் றொகோவின் பெரொஸ்ரொய்கா காலப்பகுதியிலும் சோவியத் யூனியனின் வீழ்ச்சியின் பின்னரும் தமது மார்க்சிச . சோசலிச ஆதரவைக் கைநழுவவிட்டாரில்லை.

அதற்குப் பதிலாக றொகோவின் தாம் ஒரு ட்ரொட்ஸ்கிச ஆதரவாளர் எனப் பகிரங்கமாகக் கூறி தமது வாழ்க்கையின் இறுதி தசாப்த காலத்தில் புத்திஜீவி நடவடிக்கைகளில் ஈடுபட்டார். அதாவது, 1923 40 இடைப்பட்ட காலத்தில் சோவியத் யூனியனின் உள்ளே ஸ்டாலினிசத்துக்கு எதிரான மார்க்சிச இடதுசாரி எதிர்ப்பின் வரலாற்றை எழுதினார்.

ஒரு மாற்றீடு இருந்ததா? என்ற தலைப்பில் முதலாவது தொகுதியை 1992ல் வெளியிட்டார். ஒரு ஆண்டுக்குப் பின்னர் அதிகாரமும் எதிர்ப்பும் என்ற இரண்டாவது தொகுதி வெளியானது.

போல்ஷிவிக் புரட்சியின் சமத்துவக் கொள்கைகள் நிராகரிக்கப்பட்டு வந்த ஒரு நிலைமையினுள் ஸ்டாலினிச அதிகாரத்துவத்தினை ஒழித்துக்கட்ட இடம்பெற்ற தயாரிப்பை கணக்கில் கொண்டு "ஸ்டாலினின் புதிய பொருளாதாரக் கொள்கை" என்ற பெயரிலான மூன்றாவது தொகுதியை எழுதிக் கொண்டு இருக்கையில் றொகோவின் 1994 மே மாதத்தில் புற்றுநோய் சத்திரசிகிச்சைக்கு உள்ளானார். இன்னுமொரு வருடம் உயிர் வாழ்ந்தால் அது அதிர்ஷ்டவசமானது என எச்சரித்து இருந்தனர்.

இந்த ஆபத்து பற்றிய எச்சரிக்கைக்கு இடையேயும் தமது புத்திஜீவி ஈடுபாடுகளை தீவிரமாக்கிய றொகோவின் மூன்றாவது தொகுதியை பூர்த்தி செய்து தமது திட்டத்தை விஸ்தரிக்க முடிவு செய்தார். ஆரம்பத்தில் வரலாற்று ஆய்வினை நான்கு தொகுதிகளுடன் பூர்த்தி செய்ய அவர் திட்டமிட்டிருந்தார். ஆனால் முன்னர் பூட்டப்பட்டுக் கிடந்த ரூஷ்ய சுவடிகள் காப்பகத்தின் தஸ்தாவேசுக்களை எட்டும் வாய்ப்புக் கிடைத்ததால் புதிய ஒரு தொகை தஸ்தாவேசுக்களை பெற்றுக் கொள்ள முடிந்ததால் தமது நூலை ஏழு தொகுதிகளுக்கு குறைவாக எழுதி முடிக்க இயலாது என றொகோவின் முடிவு செய்தார்.

பெரும் உடல் நெருக்கடிகளுக்கு மத்தியிலும் திட்டமிட்ட ஏழு தொகுதிகளில் ஆறு தொகுதிகளை அவர் எழுதி முடித்தார். 1996ல் '1937: ஸ்டாலினின் பயங்கரத்தின் ஆண்டு' என்ற நூல் வெளியாகியது. 1997ல் 'அலுகோசுவின் கட்சி' என்ற ஐந்தாவது தொகுதி வெளிவந்தது. 'உலக யுத்தமும் உலகப் புரட்சியும்' என்ற ஆறாவது தொகுதி ஒரு சில கிழமைகளுக்கு முன்னரேயே வெளிவந்தது. இறக்கும்போது றொகோவின் ஏழாவது தொகுதியின் அத்தியாயங்கள் தயாரிப்பு வேலைகளில் ஈடுபட்டிருந்தார்.

றொகோவினின் நடவடிக்கைகள் ஆய்வுகளுடனும் எழுத்துக்களுடனும் மட்டும் கட்டுப்பட்டு நின்றுவிடவில்லை. 1993ல் நான்காம் அகிலத்தின் அனைத்துலக குழுவுடன் தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்ட அவர் நெருக்கமான அரசியல், புத்திஜீவி உறவுகளை அபிவிருத்தி செய்யும் விதத்தில் அனைத்துலகக் குழுவின் வேலைத்திட்டத்துடன் தோழமை உறவுகளை பகிரங்கமாக்கினார். 1995 1998க்கும் இடையே அவர் அமெரிக்கா, பிரித்தானியா, ஜேர்மனி, அவுஸ்திரேலியா ஆகிய இடங்களில் அனைத்துலகக் குழு ஒழுங்கு செய்த விரிவுரைகளை நிகழ்த்தினார்.

வடிம் றொகோவின் தமது மனைவியான கெரினா வரியுஷெனிவை பிரிந்து சென்றுள்ளார்.

*சென்னை*

# வெல்-நிட் தொழிலாளர் வேட்டைக்கு சோ.ச.க.பொதுச் செயலாளர் எதிர்ப்பு

கடந்த ஆகஸ்ட் மாதத் தொடக்கத்தில் சென்னை வெல் நிட் பக்டரி தொழிலாளர்கள் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி(மார்க்சிஸ்ட்)யின்( ) தொழிற்சங்கத் தலைவர்களால் தாக்கப்பட்டதோடு பொய்க் குற்றச்சாட்டின் பேரில் பொலிஸ் அடக்கு முறைகளுக்கும் உள்ளாகியுள்ளனர். சென்னை ஆடைக் கைத்தொழிலாளர்கள் தாக்கப்பட்டதை எதிர்த்தும் சுமத்தப்பட்டுள்ள பொய்க் குற்றச்சாட்டை நீக்கும்படியும் கோரி இந்திய சோசலிசத் தொழிலாளர் கழகம் ( ) அனைத்துலகத் தொழிலாளர் வர்க்கத்தின் ஆதரவைத் திரட்டும் பிரச்சாரத்தில் ஈடுபட்டுள்ளது. சோ.தொ.க. நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவுடன் ஐக்கியம் பூண்ட இந்திய அமைப்பாகும்.

சோ.தொ.க. ஆரம்பித்துள்ள இந்த பிரச்சாரத்துடன் இணைந்து கொண்டுள்ள இலங்கை சோசலிச சமத்துவக் கட்சியின் பொதுச் செயலாளர் விஜே டயஸ் தொழிலாளர்களுக்கு எதிரான தாக்குதல்களைக் கண்டித்தும் பொய்க் குற்றச்சாட்டை வாபஸ்பெறும்படி கோரியும் சென்னை தாம்பரம் பொலிசாருக்கு அனுப்பிய கடிதம் இத்துடன் வெளியாகின்றது.

பொலிஸ் அதிகாரி சுகுமாரன்,
தாம்பரம் பொலிஸ் நிலையம்,
தாம்பரம்,
சென்னை, இந்தியா.

சீ.ஐ.ரீ.யூ.தலைமையின் தூண்டுதலின் பேரில் பொலிசார் ஐந்து தொழிலாளர்களை கைது செய்து பொய்க் குற்றச்சாட்டு சுமத்துவதை நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் இலங்கை பகுதியான சோசலிச சமத்துவக் கட்சி வன்மையாகக் கண்டனம் செய்கின்றது.

சீ.ஐ.ரீ.யூ..அதிகாரிகள் செய்து கொண்ட பொய் முறைப்பாட்டின் பேரில் இப்போது குற்றச்சாட்டுக்கு உள்ளாகியுள்ள ஐவர் உட்பட்ட தொழிலாளர் குழுவினர் கடந்த மே மாதம் இடம்பெற இருந்த தொழிற்சங்க தேர்தலை நடாத்தும்படி கோரும் நியாயமான கோரிக்கையை முன்வைக்கும் பொருட்டு சீ.ஐ.ரீ.யூ..அலுவலகத்துக்கு சென்றதாக எனக்கு நம்பகமான தகவல் கிடைத்துள்ளது. தேர்தல் நடாத்துவதாயின் தலைக்கு ரூபா.125 வீதம் கிடைக்க வேண்டும் என இந்த தொழிற்சங்க அதிகாரிகள் கூறியுள்ளனர். இது தொழிற்சங்க அதிகாரிகளின் தகிடுதத்தங்களைக் காட்டிக் கொண்டுள்ளது. இத்துடன் நின்றுவிடாது சிவகுமாரின் தலைமையிலான தொழிற்சங்க அதிகாரிகள் கும்பல் தொழிலாளர்கள் தமது தொழிற் சங்கத்துக்கு கோரிக்கைகள் முன்வைக்க உள்ள அடிப்படை ஜனநாயக உரிமைகளை மீறி அவர்களை அடித்துக் கலைத்துள்ளது.

இரண்டு நாட்களின் பின்னர் இந்த சிவகுமார் தொழிலாளர்களை மாட்டி வைக்கும் பொருட்டு கலாட்டாவை உருவாக்கும் ஆத்திரமூட்டலில் இறங்கியுள்ளார். ஈ.ராமதாஸ், எச்.ஆனந்தன், ஜே.சிற்நிவாசன், லீலா நந்த பூஷணம், கே.பால்ராஜ் முதலான ஐந்து தொழிலாளர்களுக்கு எதிராக கொலை, களவு முயற்சி குற்றச்சாட்டு சீ.ஐ.ரீ.யூ.அதிகாரிகளால் சுமத்தப்பட்டுள்ளதாக நம்பகமான தகவல் எனக்குக் கிடைத்துள்ளது. தாம் அங்கம் வகிக்கும் தொழிற் சங்கத்தின் தேர்தலை நடாத்துமாறு கோரும் நியாயமான உரிமையை பிரயோகித்ததால் தொழிலாளர்களுக்கு எதிரான வன்முறை தாக்குதலில் ஈடுபட்ட தொழிற்சங்க அதிகாரிகள் சுமத்தும் அநியாயமான ஒரு குற்றச்சாட்டாக இதைக் கொள்ள வேண்டியுள்ளது.

இத்தொழிலாளர்கள் கடந்த வருடம் இடம்பெற்ற வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டதால் வெல் நிட் கம்பனியின் நிர்வாகத்தினால் வேட்டைக்கு இலக்கானவர்கள். தமது தொழிலைக் காக்கும் பொருட்டு அவர்கள் முன்னெடுத்த போராட்டத்தினை சீ.ஐ.ரீ.யு. அதிகாரிகள் கடுமையாக எதிர்த்தனர். அவர்களுக்கு எதிரான பொய்க் குற்றச்சாட்டுக்களுக்கான பின்னணி இதுதான்.

ஆதலால் இந்த அப்பாவித் தொழிலாளர்களுக்கு எதிராக பொலிசார் முறையற்ற விதத்தில் செயற்படுவதை வன்மையாகக் கண்டனம் செய்யும் நாம் அவர்களுக்கு எதிரான சகல குற்றச்சாட்டுக்களையும் வாபஸ் பெறும்படி வேண்டுகின்றோம்.

இப்படிக்கு,
உண்மையுள்ள,
விஜே டயஸ்,
பொதுச் செயலாளர்,
சோசலிச சமத்துவக் கட்சி.

---

பாரியதாகவும் கொள்ளப்படுகின்றது.

கிளிநொச்சி முகாம் வீழ்ச்சி கண்ட இரண்டு நாட்களின் பின்னர் அரசாங்கப் படைகள் விடுதலைப் புலிகளின் முக்கிய கோட்டைகளில் ஒன்றாகக் கருதப்பட்ட மாங்குளத்தை கைப்பற்றிக் கொண்டுள்ளது. மாங்குளத்தை கைப்பற்றிக் கொள்கையில் நூற்றுக்கும் அதிகமான விடுதலைப் புலிகள் கொல்லப்பட்டதாகவும் 26 புலிகள் சரணடைந்ததாகவும் பெரும் தொகையானோர் காயமடைந்ததாகவும் இராணுவப் பேச்சாளர் தெரிவித்துள்ளார். அரசாங்கப் படைகளில் 92 பேர் மாங்குளத்தை கைப்பற்ற நடைபெற்ற சண்டையில் கொல்லப்பட்டுள்ளனர்.யுத்தம் உக்கிரம் அடைந்ததைத் தொடர்ந்து அயல் பிராந்தியங்களில் வசித்துவந்த அப்பாவி தமிழ் மக்கள் உயிர்தப்பும் பொருட்டு ஆயிரக்கணக்கில் வேறு பிராந்தியங்களுக்கு தப்பிச் சென்றுள்ளதாகச் சொல்லப்படுகிறது. அரசாங்கம் கைப்பற்றிக் கொண்டுள்ள மாங்குளம் முக்கியமானதா அல்லது விடுதலைப் புலிகள் கைப்பற்றிக் கொண்டுள்ள கிளநொச்சி முக்கியமானதா என்ற

வாதத்தை அரசாங்கம் ஆரம்பித்துள்ளது. பெரும் அதிர்ச்சிக்கு உள்ளாகியுள்ள அரசாங்கமும் இராணுவ பெரும் புள்ளிகளும் இனவாத யுத்தத்தின் மூலம் தமது இராணுவ ஆளுமையை நிலைநாட்டிக் கொள்ள கொலைகளிலும் பேரழிவுகளிலும் மேலும் மேலும் ஈடுபடும்.

பொதுஜன முன்னணி அரசாங்கத்தின் யுத்த "வெற்றி" தோல்வி இரண்டும் வடக்கு கிழக்கிலும் தெற்கிலும் உள்ள தமிழ் சிங்கள தேசிய இனங்களின் மக்களுக்கு வழங்கியுள்ளது [illegible] இராணுவ [illegible] நிலைமைகளை உருவாக்குவதும் வாழ்க்கை நிலைமைகளை நாசமாக்குவதுமே.

கிளிநொச்சியைக் கைப்பற்றிக் கொண்டது பற்றிய வாயடிப்புக்கள் மூலம் தமது இராணுவ பின்னடைவுகளை மூடி மறைக்கவும் பிற்போக்கு தேசியவாத நிலைப்பாடுகளை தூக்கி பிடிக்கவும் விடுதலைப் புலிகள் தலைமை முயற்சிக்கலாம். "மாங்குளத்தை என்ன முயற்சி செய்தாலும் மீண்டும் கைப்பற்றிக் கொள்வதாக" பிரபாகரன் கூறியதாகவும் கிளிநொச்சி தாக்குதலை பிரபாகரன் வழிநடாத்தியதாகவும் விடுதலைப் புலிகளின் வானொலியை மேற்கோள் காட்டி பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளன.

ஆனால் இந்த இரத்தம் தோய்ந்த இராணுவ இயக்கத்துக்கு மத்தியிலும் விடுதலைப் புலிகள் பேரம் பேசுவது தமிழ் [illegible] வசதிவாய்ப்புக்கள் நிறைந்த தனிநாட்டுக்கு அல்லது சமரசம் எனக் கூறப்படுவதற்கு ஆகும். தமது பிரிவினை இயக்கத்தை "பலப்படுத்தும்" பொருட்டு தமிழ் மக்களின் உயிர்களைக் கணக்கில் எடுக்காது செயற்படும் விதம் இந்தப் போராட்டம் வெடித்த நாட்களில் மீண்டும் பிரத்தியட்சமாகியது. செப்டம்பர் 30ம் திகதி விடுதலைப் புலிகள் யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்புக்கு பொதுமக்களை கொண்டு வந்த விமானத்தை யாழ்ப்பாணத்தில் சுட்டு நாசமாக்கினர். விமானம் கடலில் வீழ்ந்ததன் மூலம் 20 பெண்கள், இரண்டு குழந்தைகள், 26 ஆண்கள் உட்பட்ட தமிழ் தேசிய இனத்தவர் 48 பேரும் விமான சேவை ஊழியர் 6 பேரும் இறந்துள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*இரத்தினபுரி-அலு பொல தோட்டம்*

# இனவாதக் குண்டர்கள் தொழிலாளர் வீடுகளுக்கு தீமூட்டினர்

**விஜித சில்வா, டீ.என், மதவத்த**

செப்டம்பர் 9ம் திகதி இரத்தினபுரி அலுபொல தோட்டத்தைச் சேர்ந்த வேவல்வத்த லயின்களைச் சேர்ந்த 520 தமிழ் குடும்பங்கள் வசித்த நூற்றுக்கணக்கான வீடுகள் ஆயுதம் தாங்கிய சிங்கள இனவாதக் குண்டர்களால் தீமூட்டப்பட்டு சாம்பலாகியுள்ளது. சபுகஸ்தன்ன பிளான்டேசன் கம்பனிக்குச் சொந்தமான அலுபொல தோட்டத்தின் மூன்று டிவிசன்களைச் சேர்ந்த தொழிலாளர்கள் வசித்த வீடுகளும் பாவனைப் பொருட்களும் இனவாதக் குண்டர்களால் தீக்கிரையாகியுள்ளது . இதனால் தோட்டத் தொழிலாளர் குடும்பங்களைச் சேர்ந்த 1100க்கும் அதிகமானோர் அகதிகளாகியுள்ளனர்.

இந்தத் தீவைப்புக்களுக்கு வேவல்வத்தைக்கு சமீபமாக உள்ள கலபொட தெஹின்கந்தையில் வசித்த ஸ்டாலினிச கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த 'பிரகத்தி' தொழிற்சங்கத்தின் தலைவரான பந்துசேனவும் அப்பகுதியைச் சேர்ந்த இளைஞரான அஜிதவும் செப்டம்பர் 8ம் திகதி வெட்டிக் கொலை செய்யப்பட்டது சாட்டாகியுள்ளது. இந்தக்கொலைகள் வேவல்வத்தவைச் சேர்ந்த இரண்டு தமிழ் தோட்ட இளைஞர்களால் செய்யப்பட்டதாக பிரச்சாரம் செய்யப்பட்டுள்ளது. உண்மையில் இந்த இருவரதும் கொலைக்கான நிஜக் காரணம் என்ன என்பது இன்னமும் அம்பலமாகவில்லை.

ஆனால் வேவல்வத்த தமிழ்த் தோட்டத் தொழிலாளர்களுக்கு எதிரான சிங்கள இனவாத ஆத்திரமூட்டல்கள் இதற்கு முன்பிருந்தே இடம்பெற்று வந்துள்ளது என்பது தொழிலாளர்களின் தகவல்களில் இருந்து தெரிய வருகின்றது. இனவாதக் குண்டர் கும்பல் பாய்ந்து விழுந்து வேவல்வத்த தமிழ் தோட்டத் தொழிலாளர்களின் வீடுகளைத் தீக்கிரையாக்கிய முதல் தடவை இதுவல்ல. இதற்கு இரண்டு வருடங்களுக்கு முன்னர் 1996 அக்டோபர் 10ம் திகதி ஆயுதம் தாங்கிய குண்டர்கள் ஊடுருவி 111 லயின் அறைகளை தீமூட்டி சாம்பராக்கியுள்ளனர். அந்தத் தீவைப்புக்கும் கூட இம்முறை கொலை செய்யப்பட்ட அஜித் என்பவரின் சகோதரரான கசிப்பு முதலாளிக்கும் வேவல்வத்த தமிழ்த் தோட்ட இளைஞருக்கும் இடையேயான மோதுதலே காரணமாக இருந்துள்ளது. அன்றும் பொலிசார் வீடுகளுக்கு தீமூட்டியவர்களைக் கைது செய்து , தண்டனை வழங்க நடவடிக்கை எடுக்கவில்லை. லயின் அறைகளை எரித்து நாசமாக்கியதற்கு எதிராக நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கின் தீர்ப்பு என்ன என்பதை தொழிலாளர்கள் இன்னமும் அறியார்கள். வீடுகளைத் திருப்பிக் கட்டிக் கொள்ளத் தருவதாக வாக்குறுதியளித்த ரூபா.2000 அழிந்து போன 111 லயன் அறைகளில் 56 லயன்களில் வசித்தவர்களுக்கு மட்டுமே கிடைத்தது.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் நடைபெற்றதைப் போலவே பந்துசேனவினதும் அஜிதவினதும் கொலைகளை சாட்டாகக் கொண்டு இத்தடவையும் சிங்கள இனவாதக் குண்டர்கள் தாக்குதலில் இறங்குவார்கள் எனப் பயந்த 746 தமிழ் தோட்டத் தொழிலாளர்கள் உயிரைக் காக்கும் பொருட்டு வசிப்பிடங்களை விட்டுத் தப்பி ஓடி அலுபொல தோட்டத்துக்குச் சொந்தமான தேயிலைக் களஞ்சியசாலையில் நுழைந்து கொண்டிருந்தனர். இந்தக் களஞ்சியத்துக்கு இராணுவ, பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டு இருந்தது. பொலிசாரும் இராணுவத்தினரும் காடையர்கள் லயின் அறைகளைத் தீவைத்து நாசமாக்குவார்கள் என்பதை அறிந்திருந்த போதிலும் அதைத் தடுக்க எதுவும் செய்யவில்லை.

## இனவாத ஆத்திரமூட்டல்

இந்த ஆயுதம் தாங்கிய குண்டர்களின் காட்டுமிராண்டி தாக்குதல்கள், தமிழ்த் தோட்டத் தொழிலாளர்களுக்கு எதிரான சிங்கள இனவாத இயக்கத்தின் தன்மையைக் கொண்டிருந்தது. இந்த இனவாதத் தாக்குதல்களுக்கு அப்பிரதேச அரசாங்கக் கட்சி அரசியல் பிரமுகர்களே பொறுப்பாக இருந்துள்ளனர். கொலை செய்யப்பட்ட பந்துசேன தலைவராக விளங்கிய பிரகத்தி தொழிற்சங்கம் இதற்கு ஒரு ஆண்டுக்கு முன்னர் டீ.எம்.எ.செனவிரத்ன என்ற பொதுஜன முன்னணி பாராளுமன்ற உறுப்பினரின் தலைமையில் அமைக்கப்பட்டது. அந்தத் தொழிற் சங்கத்தின் தலைவர் கொலை செய்யப்பட்டதற்கு எதிரான பழிவாங்கலாக வீடுகளுக்கு தீவைப்பும் வேவல்வத்த தோட்டத் தொழிலாளர்களுக்கு எதிரான ஒடுக்குமுறையும் கட்டவிழ்க்கப்பட்டுள்ளதாக தொழிலாளர்கள் நம்புகின்றனர்.

380 தோட்டத் தொழிலாளர் குடும்பங்கள் இந்த தாக்குதலின் எதிரில் தமது வசிப்பிடம், உடுபிடவை, வீட்டு உபகரணங்கள், மிச்சசொச்சங்கள் சகலதையும் இழந்து அகதிகளாகியுள்ளனர். பயமுறுத்தல்கள் இன்னமும் தணிந்ததாக தெரியவில்லை. ஆதலால் தொழிலுக்காக வெளியேறுவது ஆபத்தானது என்பதே தொழிலாளர்களின் கருத்தாக உள்ளது. செப்டம்பர் 14ம் திகதி வரையும் தோட்டக் களஞ்சியத்தில் அடைந்து போய்க் கிடந்த தொழிலாளர் குடும்பங்களை தோட்ட சுப்பிரின்டென்ட் தோட்டக் கோவிலுக்கு அனுப்பி வைத்துள்ளார். தோட்ட நிர்வாகம் இரண்டு நாட்களுக்கு உணவு விநியோகித்துள்ள அதே வேளையில் இரத்தினபுரி மாவட்ட செயலகம் உணவு விநியோகித்து வருகின்றது.



இனவாதிகளின் தீயினால் கருகிப் போன தொழிலாளர் லயின்கள்



கோவிலில் அகதிகளாகியுள்ள தோட்ட பெண் தொழிலாளர்களும் குழந்தைகளும்

நாசமாக்கப்பட்ட லயன் அறைகளை மீண்டும் கட்டுவதற்கு தோட்ட நிர்வாகி இன்னமும் நடவடிக்கை எடுக்கவில்லை. தோட்ட வீடுகளை வேய்வதற்கான 500 தகடுகளை மட்டும் தம்மால் வழங்க முடியும் எனவும் தொழிலாளர்கள் தமது சொந்தச் செலவில் வீடுகளைக் கட்டிக் கொள்ள வேண்டும் எனவும் தோட்ட நிர்வாகம் அறிவித்துள்ளது. சகலதையும் இழந்து நிர்க்கதியாகியுள்ள நாம் வீடுகளை சொந்தத்தில் கட்டிக் கொள்வது எப்படி என்ற கேள்வியை தொழிலாளர்கள் எழுப்புகின்றனர்.

1990ல் அலுபொல தோட்டம் தனியார்மயமாக்கப்பட்டதோடு தொழிலாளர்களின் வேலை இரண்டு மடங்காகியது. அத்தோடு இருந்துவந்த அற்பசொற்ப வசதிகளும் கூட வெட்டித் தள்ளப்பட்டுள்ளது. இந்த வேவல்வத்த தோட்ட லயன் அறைகளில் வசிக்கும் தொழிலாளர் பயன்படுத்தக் கூடிய நிலையில் எந்த ஒரு மலசல கூடமும் கிடையாது. இற்றைக்கு 30 ஆண்டுகளுக்கு முன்னர் அமைக்கப்பட்ட இந்த மலசல கூடங்கள் பாவிக்க முடியாத நிலையில் உடைந்து தகர்ந்து போயுள்ளன. ஆற்றில் இருந்து குடிநீராகப் பெறும் தண்ணீர் பாவனைக்கு உதவாததாக உள்ளது. இந்தத் தோட்டத்தில் இருந்த 6 சுகாதார ஊழியர்கள் இப்போது சேவையில் இல்லை. தண்ணீர் வழிந்தோடும் கால்வாயினால் சூழல் மாசுபடுகின்றது. இத்தகைய கஷ்டமான நிலையில்



அகதிகளான தொழிலாளர் உணவு கியூவில் நின்று கொண்டுள்ளனர்



வேவல்வத்தை தொழிலாளர்கள் சோ.ச.க. அங்கத்தவர்களோடு பேசுகின்றனர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க்கையை நடாத்தும் தொழிலாளர்களையே சொந்தத்தில் வீடுகளை கட்டிக் கொள்ளும்படி நிர்வாகம் கேட்டுக் கொண்டுள்ளது.

### தொழிற்சங்க நடவடிக்கையின் இலட்சணம்

அலுபொல தோட்டத்தின் முக்கிய தொழிற்சங்கமான தொண்டமானின் இ.தொ.கா.தொழிலாளர்களுக்கு எதிரான தாக்குதலையிட்டு எதுவும் செய்யவில்லை. தோட்டத் தொழிலாளர்களின் வீடுகளைக் கட்டிக் கொள்வது சம்பந்தமாகவும் அவர்களிடம் எதுவிதமான திட்டமும் கிடையாது. வேவல்வத்த இ.தொ.கா. தொழிற்சங்கத் தலைவரான எம். இராமச்சந்திரன், தொழிலாளர்களுக்கு காலை உணவும் உடுபுடவையும் வழங்கியுள்ளதாகவும் செப்டம்பர் 17ம் திகதி தோட்ட நிர்வாகத்துடன் நடாத்தும் பேச்சுவார்த்தையின் பின்னர் அவர்களுக்கு என்ன செய்ய முடியும் என்பதை அறிவிப்பதாகவும் கூறியுள்ளார்.

இந்த மோதுதலில் சம்பந்தப்பட்டதாக சந்தேகிக்கப்படும் பிரகத்தி தொழிற்சங்கம் வசிப்பிடங்களை இழந்த தனது அங்கத்தவர்களின் சார்பில் எதுவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. அகதிகளாக உள்ளவர்களில் 85 பேர் இந்தத் தொழிற்சங்கத்தின் அங்கத்தவர்கள். இருப்பினும் அவர்களை பற்றி ஆராய்ந்து பார்ப்பதையும் அவர்கள் கைவிட்டுள்ளதாகத் தொழிலாளர்கள் தெரிவித்தனர்.

வீடுகள் தீவைக்கப்பட்டு ஒரு கிழமை கழிந்ததன் பின்னர் பிரதேசத்தில் சமாதானத்தையும் மக்கள் வாழ்க்கையையும் காக்க நடவடிக்கை எடுப்பதாகக் கூறிப் பிக்குகள், பொதுஜன முன்னணியின் பிரதேச சபை அங்கத்தவர்கள், பொலிஸ், இராணுவ அதிகாரிகள், அலுபொலவத்த தோட்டத்துக்கு அருகே வசிக்கும் சிங்கள மக்கள், சில தமிழ்த் தோட்டத் தொழிலாளர்கள் ஆகியோர் கலந்து கொண்ட ஒரு கூட்டம் வேவல்வத்த விஜிதாராம விகாரையில் நடைபெற்றது. இடம்பெற்ற இரண்டு கொலைகளும் விடுதலைப் புலிகளின் கீழ் பயிற்சி பெற்ற தமிழ் தோட்டத் தொழிலாளர் இளைஞர்களால் செய்யப்பட்டு இருக்கலாம் என்று சந்தேகிக்க இடம் இருப்பதாக இக்கூட்டத்தைக் கூட்டிய அரசாங்க பிரதிநிதிகள் தெரிவித்தனர். இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்ட எந்த ஒரு தமிழ்த் தொழிலாளியும் பேசுவதற்கு வாய்ப்பளிக்கப்படவில்லை. இந்தக் கூட்டத்தில் ஒரு கிழமைக்குள் வேவல்வத்தையில் தற்காலிக காவல் நிலையம் அமைக்கவும் பொறுப்புள்ள ஒரு பாதுகாப்பு கமிட்டி அமைக்கவும் முடிவு எடுக்கப்பட்டதாக தெரிகின்றது. இந்தக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் படியும் வெளியிடப்பட்ட கருத்துக்களின் படியும் தமிழ்த் தோட்டத் தொழிலாளர்களுக்கு எதிராக படுமோசமான இனவாதத்தை தூண்டிவிடவும் அரச ஒடுக்குமுறையைக் கட்டவிழ்த்து விடவும் இனவாதிகளும் அரச படைகளும் முதலாளித்துவக் கட்சிகளும் திட்டமிடுவது தெரிகின்றது. இதற்காகவே கொலை நடவடிக்கையில் ஈடுபட்டதாக சந்தேகிக்கப்படும் இளைஞர்களை விடுதலைப் புலி அங்கத்தவர்கள் என குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

கடந்த சில மாதங்களாக இலங்கையின் பல மாகாணங்களிலும் தமிழ்த் தோட்டத் தொழிலாளர்கள் விடுதலைப் புலி சந்தேக நபர்களாகக் 'கைது செய்யப்பட்டனர். தோட்டத் துறையில் இனவாதத்தை தூண்டிவிடுவதற்கான வாய்ப்பை உருவாக்க அரசாங்கம் முயற்சிக்கின்றது. தோட்டத்துறையில் ஆயுதம் தாங்கிய குண்டர் குழுக்களை இறக்குவதும் பொலிஸ் இராணுவ முகாம்களை அமைப்பதும் படுமோசமான நெருக்கடிக்குள் தள்ளப்பட்டுள்ள ஆளும் வர்க்கம் இராணுவ பொலிஸ் சர்வாதிகாரத் தயாரிப்பில் ஈடுபட்டுள்ளதைக் காட்டுகின்றது.

## பண்டாரவளை எஸ்லொப் தோட்டம்:

# இலாப கொடுப்பனவு கேட்டு வேலைநிறுத்தம்

மல்வத்தை பெருந்தோட்டக் கம்பனிக்குச் சொந்தமான சென்ஜேம்ஸ், தெலுவ, ஊவா ஹைலன்ட், எஸ்லொப் தோட்டங்களின் தொழிலாளர்கள் இலாபக் கொடுப்பனவு முழுமையாக வழங்கப்படாததை எதிர்த்து செப்டம்பர் 7ம் திகதி தொடக்கம் வேலை நிறுத்தம், சட்டப்படி வேலை இயக்கங்களில் ஈடுபட்டுள்ளனர்.

இந்த போராட்டத்தில் உடனடியாகத் தலையிட்ட தொழிற்சங்கத் தலைவர்கள் காட்டிக்கொடுப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டு 17ம் திகதியுடன் தொழிலாளர்களின் பிரச்சார இயக்கத்திற்கு முடிவுகட்டினர். பல தோட்டங்களில தொழிலாளர் இந்தத் தலைமைகளின் நடவடிக்கைகளையிட்டு ஆத்திரம் கொண்டுள்ளனர். அத்தோடு இந்தத் தலைமைகளின் தொழிற்சங்கங்களில் இருந்து விலகப் போவதாகவும் தெரிவித்துள்ளனர்.

போராட்டம் வெடித்த சமயத்தில் தலையிட்ட சோசலிச சமத்துவக் கட்சித் தலைவர்களிடம் தொழிலாளர்கள் தமது துரோகத் தொழிற்சங்கத் தலைவர்களையிட்டு பின்வருமாறு தெரிவித்தனர் ஊவா ஹைலண்ட் தோட்ட தொழிலாளி ஒருவர் பின்வருமாறு குறிப்பிட்டார்: "திங்களன்று சட்டப்படி வேலை செய்தேன். அன்றுதான் சந்திரசேகரன், தொண்டமான், யூ.என்.பி. தலைமைகள் "பணம் தரப்படும் வேலைக்கு போங்கள்" என்றனர். இப்படித்தான் காட்டிக் கொடுத்தனர். எமக்கு ரூபா.1610 மட்டுமே வழங்கினர். சென்.ஜேம்ஸ் தோட்டத்தில் வேலைநிறுத்தம் செய்து ரூபா.2500 கொடுத்த பின்னரே நாம் சட்டப்படி வேலைசெய்யும் போராட்டத்தை ஆரம்பித்தோம்." என்றார்.

"பணத்தைக் குறைத்தாலும் வேலையைக் குறைக்கவில்லை. முன்பு 16 கிலோ கொழுந்து பறித்தால் பெயர் போடுவார்கள். இப்போது கொழுந்து முற்றல் எனக்கூறி 20 கிலோ பறிக்கச் சொல்கிறார்கள். முன்பு காலை 7.30மணிக்கு வேலை தொடங்கியது. ஆனால் இப்போது வேலை 7மணிக்கே தொடங்கிவிடுகின்றது.

"வேலைநிறுத்தம் செய்தாலும் பணம் கொடுக்கப் பணம் இல்லை என ஜனாதிபதி கூறியதாக சங்கத் தலைவர்கள் கூறுகின்றார்கள். நாம் அறிந்த மட்டில் கம்பனிக்கு இலாபமாக 40 கோடி ரூபாக்கள் கிடைத்துள்ளது. எம்மை வருத்தி வருத்தி வேலை வாங்கியதுரை யப்பானுக்கு சவாரி போக வாய்ப்புக் கிடைத்துள்ளது. இதனால் அதிக இலாபம் அடைந்தவர்கள் அந்த துரைமார்தான்.

"தொழிற்சங்கத் தலைவர்களும் அரசாங்கமும் கம்பனியும் கூறுவது எல்லாம் பொய். எதுவும் செய்ய முடியாதென தொழிற்சங்கத் தலைவர்கள் கூறிக்கொள்கின்றார்கள். எல்லாரும் சேர்ந்தால் வெற்றிகொள்ள முடியும் என நான் நினைக்கின்றேன்."

எஸ்லொப் தோட்டம்: "எமக்கு ரூபா.1443 தான் கிடைத்தது. இவர்கள் ஒரு ரூபாவைத் தன்னும் வெட்டத் தான் பார்ப்பார்கள். சம்பளம் கையில் கிடைக்கும்போது எவ்வளவை வெட்டி உள்ளார்கள் என்பது எமக்குத் தெரியாது. இதைக் கேட்க ஆளில்லை. இந்த துரைமார் சொல்வதை எம்மைக் கொண்டு செய்விக்கவே சங்கத் தலைவர்கள் இருக்கிறார்கள். எந்த ஒரு தலைவராலும் எமக்கு பயன் இல்லை. நாம் புதிய தலைவர்களை நியமனம் செய்தோம். புதுத் தலைவர்கள் தான் எம்மிடம் வந்து வேலைக்குப் போகச் சொல்கிறார்கள்."

குருக்குந்தே தோட்டம்:

"எந்த ஒரு தலைவராலும் எமக்கு பயன் இல்லை. நீங்கள்(சோ.ச.க.) மட்டும்தான் போஸ்டர் ஒன்றாவது ஒட்டினீர்கள். எந்த நேரமும் சந்திக்க வருவீர்கள். எமக்கு உண்மையை விளக்கி கூறுவீர்கள். எமது பிரச்சினை பற்றிப் பேசுவீர்கள். நாங்கள் சகலரும் பணம் தரும் வரை வேலைக்கு திரும்பப் போவதில்லை." என்றார்.

"கைக்காசுக்கு வேலை செய்யும் (தற்காலிக) தொழிலாளர் குழு ஒன்றை நிறுத்தப் போவதாக அறிந்து நாம் ஆத்திரம் அடைந்துள்ளோம். நாமோ கைக்காசு தொழிலாளரோ ஒரு நாள் வேலை செய்தால் கம்பனியின் பணம் சரி. வேலை செய்யாவிட்டால்(நாம் யாராவது) கம்பனிக்கு பணம் கிடையாது. அப்படிச் செய்தால் எமக்கு பணம் கிடைக்கும்.

"இலாபம் தரும்போது கம்பனி கோரும் நாட் கணக்கில் ஒன்று குறைந்தால் கூட ஒரு வாரம் இல்லாமல் போகும். அடுத்த வீட்டுக்காரர் கஞ்சிகுடிக்க நாம் சோறு சாப்பிட முடியாது. நாம் எல்லோரும் சோறு சாப்பிடுவதாயின் சோறு சாப்பிட வேண்டும். கஞ்சிகுடிப்பதாயின் கஞ்சி குடிக்க வேண்டும். அடுத்தவீட்டுக்காரரது கஷ்டம் எமக்குத் தெரியும். தோட்டப்புற பெரியவர்களுக்கு இது விளங்காது."

எமது தலைவர்களிடமிருந்து எந்த விடயமாவது கேட்டு தெளிவு பெற முடியாது. அவர்களுக்கு வாய்க்கரிசி கிடைக்கின்றது. எமக்கு சார்பாகப் பேசினால் அவர்களுக்கு நட்டமல்லவா. "அந்த டிவிசனில் வேலை செய்கிறார்கள். இந்த டிவிசனில் வேலை செய்கிறார்கள்" எனக் கூறி எல்லா டிவிசனிலும் போய்ப்போய் இந்தத் தலைவர்களே கூறியுள்ளனர். ஒன்றிணைந்து போராட வேண்டும் என்பது இப்போது எமக்குப் புரிகின்றது."

# தோட்டத்துறையில் இராணுவ முகாம்கள்

பொதுஜன முன்னணி அரசாங்கம் தோட்டத்துறையில் இராணுவ முகாம்களை அமைக்கும் வேலையில் தொடர்ச்சியாக ஈடுபட்டுள்ளது. இவை அட்டனையும் அதைச் சுற்றியும் உள்ள பகுதிகளில் நீர்மின்சார திட்டங்கள் உள்ள பகுதிகளிலும் அமைக்கப்பட்டுள்ளன. நோட்டன் பிரிட்ஜ், கன்யோன், காசல்ரீ, லக்சபான, மஸ்கேலியா மின்வலுத் திட்டங்களைச் சார்ந்த பகுதிகள் இராணுவ முற்றுகைப் பிராந்தியங்களாக பெயர் சூட்டப்பட்டுள்ளதோடு அங்கு அமைக்கப்பட உள்ள முகாம்களில் 30 50 வரையிலான இராணுவத்தினர் நிலை கொள்ள இருப்பதாகத் தெரிய வருகின்றது.

இதன்படி நோட்டன் விமல சுரேந்திர நீர்த்தேக்கப் பிரதேசம் முற்றுகைப் பிரதேசமாக பிரகடன் செய்யப்பட்டு செப்டம்பர் 15ம் திகதியில் இருந்து அங்கு இராணுவம் நிலைகொண்டுள்ளது.

இந்த இராணுவ முற்றுகை பிரதேச பிரகடன நடவடிக்கைகளை நியாயப்படுத்தும் பொருட்டு அப்பகுதிகளில் பயங்கரவாத தாக்குதல் பயமுறுத்தல்கள் இருந்து கொண்டுள்ளதாகப் பிரச்சாரம் செய்யப்பட்டுள்ளது. கடந்த ஜூன் 1ம் திகதி அட்டன் பகுதியில் சென்னன் தோட்டத் தேயிலை தொழிற்சாலைக் குண்டுவெடிப்பும் ஆகஸ்ட் 8ம் திகதி அட்டனுக்கு அண்மையில் இடம்பெற்ற புகையிரப் பாதைக் குண்டுவெடிப்பும் "பயங்கரவாதிகளது தாக்குதல்" என அரசாங்க வெகுஜனத் தொடர்புச் சாதனங்களால் நடாத்தப்பட்ட பிரச்சாரம் இதற்குச் சாதகமாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. ஆனால் தோட்டத் தொழிலாளர்கள் மத்தியில் இதற்கு எதிர்மாறான கருத்து இருந்து கொண்டுள்ளது. தம்மை அடக்குமுறைக்கு பலியாக்கவும் இராணுவ பொலிஸ் அடக்குமுறையை உக்கிரமாக்கவும் இத்தகைய குண்டுவெடிப்பு சம்பவங்கள் அரசாங்க ஏஜன்டுகளால் திட்டமிட்டுச் செய்யப்பட்டதாக அவர்கள் சந்தேகிக்கின்றனர்.

சென்னன் தோட்டத்தில் இடம்பெற்ற குண்டுவெடிப்பு சம்பவம் தொடர்பாக சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட ஏழு தோட்டப்புற இளைஞர்கள் கடந்த இரண்டு மாதங்களுக்கு மேலாக கொழும்பு பயங்கரவாதத் தடுப்பு பிரிவில்

12 ம் பக்கம் பார்க்க

## கந்தப்பொளை ஹைபொரஸ்ட் தோட்டம்:

# பூங்காவில் படம் எடுத்த "குற்றத்துக்காக" தமிழ் ஆசிரியர் மூன்று ஆண்டுகளாக தடுப்புக் காவலில்

1995 டிசம்பர் 27ம் திகதி நுவரெலிய பொலிசாரினால் கைது செய்யப்பட்ட கந்தபொளை ஹைபொரஸ்ட் தோட்டத்தைச் சேர்ந்த செல்வநாயகம் றொபேட்சனுக்கு எதிராக விடுதலைப் புலிகளுடன் தொடர்பு கொண்டவர் என்ற குற்றச்சாட்டின் பேரில் தொடுக்கப்பட்ட வழக்கு விசாரணை செப்டம்பர் 4ம் திகதி ஐந்தாவது தடவையாக மீண்டும் ஒத்திப்போடப்பட்டுள்ளது.

1986ல் இருந்து மனநோயாளியாக இருந்து வரும் 32 வயதான இவர் கந்தப்பொளை ரிலாமுல்ல் தமிழ் மகாவித்தியாலய ஆசிரியர் ஆவார். நுவரெலியா பூங்காவில் படம் எடுக்கும் போது கைது செய்யப்பட்ட இவர் மறுநாள் கமரா [illegible] நிலையில் [illegible] விடுதலை [illegible] செய்யப்பட்டார். ஒரு மாதத்தின் பின்னர் 1996 ஜனவரி 24ம் திகதி றொபேட்சனும் அவரது சகோதரரும் பொலிசாரால் கைது செய்யப்பட்டனர்.

இவர்களிடம் இருந்து பறிமுதல் செய்யப்பட்ட கமரா புகைப்படச் சுருளைக் கொண்டு ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம், ஐ.ரீ.என்., ஜனாதிபதி மாளிகைகளை படம் பிடித்த பொலிசார் இதனை றொபேட்சனையும் அவரது சகோதரர் ஜோன்சனையும் விடுதலைப் புலிகளாக பட்டை நாமம் தீட்ட பயன்படுத்தியதாகச் சந்தேகிக்கப்படுகின்றது. மனநோயாளியான றொபேட்சனிடம் இருந்து பொலிசார் [illegible] விதத்தில் வாக்குமூலம் [illegible] கொண்டதாக சொல்லப்படுகின்றது.

ஐந்து மாதங்களின் பின்னர் விடுதலையான ஜோன்சன் மனநோயாளியானதோடு 1997 நவம்பர் 20ம் திகதி நஞ்சு குடித்து தற்கொலை செய்துகொண்டார். 10மாதங்கள் நானுஓயாவில் சிறைவைக்கப்பட்டு இருந்த றொபேட்சன் 1996 அக்டோபரில் போகாம்பரை சிறைக்கு மாற்றப்பட்டார். தொடர்ந்து சிகிச்சை பெற அவரால் முடியாது போனதால் அவர் பெரும் கஷ்டங்களுக்கு உள்ளாகியுள்ளார்.

தொழிலாளர் பாதை நிருபருடன் பேசிய றொபேட்சனின் தந்தை "மனநோயாளியிடம் வாய்முறைப்பாடு பெறுவது தவறானது. ஒரு அப்பாவி 2 வருடங்களாக சிறையில் வைக்கப்பட்டுள்ளார்" எனத் தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இனவாத யுத்தத்துக்கு 25 வருடங்கள்

விஜே டயஸ்

பாதம்-14

சிறிலங்கா சமசமாஜ கம்யூனிஸ்ட் கட்சிகளின் கூட்டரசாங்கத்தினால் 1972ல் தமிழர் எதிர்ப்பு இனவாதத்தை தூண்டி ஆரம்பிக்கப்பட்ட யுத்தத் திட்டம் அதில் இருந்து 11 ஆண்டுகளின் பின்னர் 1983 கறுப்பு ஜூலை மக்கள் படுகொலையுடன் ஒரு பூரண யுத்தமாக பரிணாமம் கண்டது.

இந்த இனவாத யுத்தத்துக்காக யூ.என்.பி. அரசாங்கம் ஐந்து முன்னணிகளைத் தொடக்கி வைத்தது.

1. 1978ம் ஆண்டில் யூ.என்.பி. அரசியலமைப்பு சட்டத்துக்கு ஆறாவது திருத்தத்தைக் கொணர்ந்து நிறைவேற்றியதன் மூலம் தமிழர் பிரதிநிதிகள் பாராளுமன்றத்தில் இருந்து வெளியேற்றப்பட்டனர்.

2. தேசிய பாதுகாப்பு அமைச்சினை நிறுவி இராணுவத்தைப் பலப்படுத்தியது.

3. அன்று 35 ஆண்டுகளைக் கடந்துவிட்டிருந்த சுதந்திர ஆட்சி முறை எனப்படுவதன் கீழ் முதலாளித்துவ அரசாங்கங்களால் வாழ்க்கைக்கு வழியற்றுச் செய்யப்பட்ட சிங்களக் குடும்பங்களை ஆயிரக்கணக்கில் மட்டக்களப்பு, திருகோணமலை, மன்னார் முதலிய மாவட்டங்களில் குடியேற்றியது.

4. இனவாத யுத்தத்துக்காக சமசமாஜ, கம்யூனிஸ்ட், நவசமசமாஜக் கட்சி முதலான தொழிலாளர் வர்க்கத் துரோகக் கட்சிகளின் ஆதரவைப் பெறும் பொருட்டு வட்டமேசை மகாநாட்டை ஆரம்பித்தது.

5. அமெரிக்கா முதலான ஏகாதிபத்திய நாடுகளதும் இந்திய காங்கிரஸ் முதலாளித்துவ அரசாங்கத்தினதும் ஆதரவை அணிதிரட்டியது.

இந்த ஒவ்வொரு அம்சமும் பற்றி விளக்குவது அவசியம் அது வருமாறு:

1. எல்லே குணவங்சவின் ஆலோசனைப்படி "நாட்டு மக்களுக்கு" உரை நிகழ்த்திய ஜனாதிபதி ஜயவர்தன கூறியது போல் இனவாத கறுப்பு ஜூலையின் தீச்சுவாலைகள் அணைந்து போவதற்கு முன்னதாக 1983 ஆகஸ்ட் 4ம் திகதி 6வது அரசியலமைப்புத் திருத்தச் சட்டம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. இந்தத் திருத்தச் சட்டத்தை பிரதமர் ஆர். பிரேமதாச சமர்ப்பித்தார். இந்தத் திருத்தச் சட்டம், தனிநாடு கோரும் அல்லது பிரச்சாரம் செய்யும் சகல தனிநபர்களையும் அரசியல் கட்சிகளையும் அமைப்புக்களையும் தடை செய்வதாக கூறியது. அங்ஙனம் ஈடுபடுபவர்களின் சொத்துக்கள் பறிமுதல் செய்யப்படும் எனவும் ஏழு ஆண்டுகள் அல்லது அதற்குக் கூடுதலான காலம் சிறைத் தண்டனை விதிக்கப்படுவர் எனவும் அரசியல் கட்சிகளும் அமைப்புக்களும் தடை செய்யப்படும் எனவும் அது கூறியது. மக்களால் தெரிவு செய்யப்படும் சகல பிரதிநிதிகளும் அலுவலர்களும், தொழில்சார் நிபுணர்களும் ஒற்றையாட்சி முறையைப் பாதுகாப்பதாக சத்தியப்பிரமாணம் செய்ய வேண்டும் என்பதும் அந்த அரசியலமைப்புத் திருத்தச் சட்டத்தில் அடங்கியிருந்தது.

ஜனநாயக அரசியல் உரிமைகளுக்கு குழிபறிக்கும் இந்த அரசியலமைப்புத் திருத்தச் சட்டத்தை நிறைவேற்றிக் கொள்ளும் அரசாங்கத்தின் அவசரத்தைக் காட்டும் வகையில் இம்மசோதா ஒரு அவசர மசோதாவாகப் பெயர் குறிப்பிடப்பட்டிருந்தது. அத்தோடு அந்த மசோதா சமர்ப்பிக்கப்பட்ட தினத்தில் சகல இடைக்கால விதிகளும் இரத்துச் செய்யப்பட்டு பாராளுமன்றம் இதை 13 மணித்தியாலங்களுக்குள் சட்டமாக்கிக் கொண்டது. பாராளுமன்றம் தனித்து சிங்கள இனவாத அமைச்சர்களதும், எம்.பி.க்களதும் கூச்சல்களால் நிறைந்து போயிருந்தது. தமிழர் விடுதலைக் கூட்டணி எம்.பீ.க்கள் பாராளுமன்ற விவாதத்தைப் பகிஷ்கரித்தனர். அன்றில் இருந்து அடுத்து வந்த ஆறு வருடங்களுக்கு அவர்கள் பாராளுமன்றத்துக்கு வரவில்லை.

சிங்கள, தமிழ் முதலாளித்துவக் கட்சிகள் பாராளுமன்ற விளையாட்டினுள் பங்கிட்டுக் கொண்டிருந்த சிங்கள தமிழ் தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்களை பிளவுபடுத்தி முதலாளித்துவ ஆட்சியைக் காக்கும் திட்டத்தை ஒரு முடிவுக்குக் கொணர்ந்து, இனவாத யுத்தத்துக்கு வழிவகுக்கும் திட்டம் யூ.என்.பி. அரசாங்கத்தினால் அன்று நடைமுறைக்கிடப்பட்டது.

தமிழ் குட்டி முதலாளித்துவ தீவிரவாத ஆயுத இயக்கங்களின் செல்வாக்கின் கீழ் இயலாக்கையாக தனிநாடு கோரிக்கைக்கு இயைந்து போன முதலாளித்துவ தமிழர் விடுதலைக் கூட்டணி ஆறாவது அரசியலமைப்புச் சட்டத் திருத்தத்தின் கீழ் ஒற்றையாட்சியைக் காக்கும் நடவடிக்கைக்கு இணங்கி சத்தியப் பிரமாணம் செய்து கொள்வதை நிராகரித்தது. ஆனால் அவர்கள் பாராளுமன்றத்தை பகிஷ்கரித்து, ஜனாதிபதி ஜயவர்தனாவுக்கும் யூ.என்.பி. அரசாங்கத்துக்கும் எந்த விதத்திலும் குறையாத ஏகாதிபத்தியச் சார்பு இந்திய இந்திரா காந்தியின் மத்திய அரசாங்கத்திடமும் எம்.ஜி. இராமச்சந்திரனின் தமிழ்நாடு மாநில அரசாங்கத்திடமும் சரணடைந்தனர்.

இதற்கிடையே "ஆறாவது அரசியலமைப்பு சட்டத் திருத்தத்தை நீக்கப் பிரச்சாரம் செய்" என்ற தலைப்பின் கீழ் தொழிலாளர் ஒடுக்கப்படும் மக்களுக்கு அறிக்கை வெளியிட்ட புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் அத்தகைய பிரச்சாரத்துக்கு குறுக்கே நிற்கும் துரோக அரசியல் கட்சிகளையும் அமைப்புக்களையும் அம்பலப்படுத்துவதில் ஈடுபட்டது. அந்த அறிக்கை பின்வருமாறு கூறியது:



ஜே.ஆர். ஜயவர்தன

"இந்த (ஆறாவது) அரசியலமைப்பு திருத்தம் தமிழ் தேசிய இனப்பிரச்சினை தொடர்பாக தொழிலாளர் வர்க்கம் எடுக்க வேண்டிய நிலைப்பாட்டை தடுத்துள்ளது மட்டுமன்றி, அது தொடர்பாக தொழிலாளர் வர்க்கமும் ஒடுக்கப்படும் மக்களும் பகிரங்கமான முறையிலும் ஜனநாயக ரீதியிலும் கலந்துரையாடி முடிவு எடுப்பதற்குள்ள உரிமையையும் நீக்கியுள்ளது.

"ஒற்றையாட்சி முறைக்கு தாம் என்றும் விசுவாசமாக இருப்பதாக இந்த அரசியலமைப்புத் திருத்த விவாதத்தில் தெரிவித்த ஸ்டாலினிச இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி எம்.பி. சரத் முத்தெட்டுவேகமை அந்தத் திருத்தத்துக்கு எதிராக வாக்களிக்கவில்லை. இது தொழிலாளர் வர்க்கத்தினதும் தமிழ் மக்களதும் உரிமைகளை ஒரேயடியாக காட்டிக் கொடுப்பதாக விளங்கியது.



லலித் அத்துலத்முதலி. காமினி திசாநாயக்க

"ஆறாவது அரசியலமைப்பு திருத்தச் சட்டத்துக்கு எதிரான பிரச்சாரத்துக்கு எதிராக நின்று கொண்டுள்ள சமசமாஜ, ஸ்டாலினிச கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களும் அவர்களுடன் கைகோர்த்துக் கொண்டுள்ள மத்தியவாதிகளும் முதலாளி வர்க்கம் திணிக்கும் இனவாத பொறிக்கிடங்கில் தொழிலாளர் வர்க்கத்தை தள்ளத் துடிக்கின்றனர்.

" ... தொழிலாளர் வர்க்கம் மார்க்சிச நிலைப்பாட்டின் அடிப்படையில் இந்த துரோகத்தை எதிர்த்து நிற்க வேண்டும். முதலாளித்துவ அரசின் விலங்குகளை உடைத்து ஒடுக்கப்படும் தேசிய இனங்களின் உரிமைகளை அணுவளவும் குறையாமல் பாதுகாக்க முன்நிற்பதன் மூலம் மட்டுமே தொழிலாளர் வர்க்கம் தனது அடிப்படை ஜனநாயக உரிமைகளைக் காக்க முடியும்.

"இங்கு 6வது அரசியலமைப்பு திருத்தச் சட்டத்தை நீக்கு! என தொழிற்சங்கங்கள் மற்றும் வர்க்க அமைப்புக்களுள் ஆரம்பிக்கும் பிரச்சாரம் தீர்க்கமானது என நாம் சுட்டிக்காட்டுகின்றோம். இது இனவாதத்துக்கு எதிரான பலம் வாய்ந்த அடியாகும். ஒடுக்கப்படும் தேசிய இனங்களுடன் கூட்டுக்கும் முதலாளித்துவ ஆட்சியை ஒழித்துக் கட்டவும் அணிதிரட்ட உள்ள ஒரே வழியாகும். இது சோசலிச இந்தியத் துணைக் கண்டத்துக்காக எடுக்கும் நடவடிக்கையாகும்." (கம்கறு மாவத்த 1983 செப்டம்பர் 20)

தமிழ் மக்களுக்கு பாதுகாப்பு வழங்கும்படி இந்திய முதலாளித்துவ ஆட்சியாளர்களின் துணையை நாடி நின்ற தமிழ் முதலாளித்துவ, குட்டி முதலாளித்துவ குழுக்களுக்கும் மற்றும் தீவிரவாதிகளுக்கும் எதிராக ட்ரொட்ஸ்கிஸ்டுகள் இந்தியத் துணைக் கண்டத் தொழிலாளர் ஒடுக்கப்படும் மக்கள் பக்கம் திரும்பினர். அது தொழிலாளர் வர்க்க அனைத்துலகவாத வேலைத்திட்டமாகும். அரசியல் அதிகாரத்தை தமது கைக்குள் கொணர்ந்து சோசலிச சமத்துவத்தை ஸ்தாபிதம் செய்வதன் மூலமே ஜனநாயக உரிமைகளை பாதுகாக்க முடியும்.



1972 அரசியலமைப்பு சட்டத்துக்கு முன்னோடியாக கூட்டப்பட்ட அரசியலமைப்பு நிர்ணய சபையில் யூ.என்.பி., சி.ல.சு.க. முதலாளி வர்க்க கட்சிகளுடன் சமசமாஜ தலைவர்கள்: ஜே.ஆர். ஜயவர்தன. கொல்வின் ஆர்.டி சில்வா. சிரிமா பண்டாரநாயக்க

## மேலதிக படைப்பிரிவு

2. இனவாத யுத்தத்தையும் தொழிலாளர் ஒடுக்கப்படும் மக்கள் எதிர்ப்புத் தாக்குதலையும் தொடுப்பதற்காக தேசிய பாதுகாப்பு அமைச்சை நிறுவி இராணுவ நடவடிக்கையில் இறங்குவதற்கு முன்னதாக யூ.என்.பி. அரசாங்கம் மேலதிகப் படைப்பிரிவுகளை அமைக்கும் வேலைத்திட்டத்தில் இறங்கியது. இந்தப் படைப்பிரிவு "தேசிய சேவை"யை ஆரம்பித்தல் என அழைக்கப்பட்டது. இந்தப் பணி அன்று இளைஞர் சேவை அமைச்சரும் இன்றைய யூ.என்.பி. தலைவருமான ரணில் விக்கிரமசிங்கவிடம் ஒப்படைக்கப்பட்டது.

இளைஞர் சேவை அமைச்சரிடம் 18வயது தொடக்கம் 55 வயது வரையிலான சகல "இளைஞர்களையும்" அணிதிரட்டும் பணி ஒப்படைக்கப்பட்டது. அது கட்டாய தேசிய சேவை விதிகளின் கீழ் செய்யப்பட்டது. அமைக்கப்படும் சேவைப் படைப்பிரிவுகள் ஊர்க்காவல் படையுடன் இணைக்கப்படும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



1983 ஜூலையில் இனவாதிகளின் தீயினால் கருகிக் கொண்டுள்ள பொரளை வர்த்தக நிலையம்

எனவும் தெரிவிக்கப்பட்டது.

இந்தத் தேசிய சேவையின் நோக்கங்களை அன்று "தவச" முதலாளித்துவ பத்திரிகை நிறுவனத்தின் "சன்" பத்திரிகை தூக்கிப்பிடித்துப் பேசியது. அதன் ஆசிரியத் தலையங்கம் பின்வருமாறு கூறியது: "பிரேரணை பெரிதும் பாராட்டுக்குரியது மட்டுமன்றி அர்த்தமுள்ள ஒரு கிருமிநாசினி. இதை நடைமுறைப்படுத்துவதை தாமதப்படுத்தக் கூடாது ஒழுங்குமுறையான நடைமுறையும் அரை இராணுவ யுத்த உபாய பயிற்சியளிக்கும் காலப்பகுதியின் பின்னர் மேலதிக படையணியானது கிளர்ச்சி, எழுச்சிகள், உள்நாட்டு யுத்தங்களில் கூட உரிய எதிர்ப்பை உண்மையில் வழங்கும்." (சன் 1983 செப்டம்பர் 02)

இந்தப் புதிய திட்டத்தைக் கிளர்ச்சிகள், எழுச்சிகள், உள்நாட்டு யுத்த நிலைமைகளில் பயன்படுத்தக் கூடிய ஒரு "கிருமிநாசினி"யாக முதலாளி வர்க்கம் புரிந்து கொண்டிருந்தது. அந்த வர்க்கத்துக்கு தொழிலாளர் ஒடுக்கப்படும் மக்கள் கிருமியாக விளங்கியது. அது உண்மையில் கிருமியாகுவது தமது உரிமைகளைக் காக்கும் கிளர்ச்சிகள், எழுச்சிகள், உள்நாட்டு யுத்தங்களுக்கு வெகுஜனங்களைத் தூண்டும் போதேயாகும். எதிர்ப்புரட்சி சக்திகளைக் கட்டவிழ்த்துவிட்டு அதை நசுக்க வேண்டும். யூ.என்.பி. பிரேரித்த ஆளும் வர்க்கத் திட்டத்தின் பின்னணியில் இருந்த மிலேச்சத் திட்டம் அதுவேயாகும்.

வளர்ச்சி கண்டுவரும் இந்த ஆபத்துக்களைப் பற்றி தொழிலாளர் ஒடுக்கப்படும் மக்களை எச்சரித்து அவசியமான அரசியல் தயாரிப்புக்களுக்காகப் போராடியது இன்றைய சோசலிச சமத்துவக் கட்சியின் முன்னோடியான புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் மட்டுமேயாகும். சமசமாஜ, ஸ்டாலினிச கட்சியின் துரோகிகள் யூ.என்.பி. அரசாங்கத்தின் பிற்போக்குத் திட்டத்திற்கு முழுமனே அங்கீகாரம் வழங்கும் வகையில் சட்டத்தையும் ஒழுங்கையும் காக்கப் பொலிஸ் இராணுவ படையணிகள் ஒழுங்கு முறையாகக் கையாளப்படுவதில்லை எனக் கூறிக் கொண்டனர். இதன் மூலம் எதிர்ப்புரட்சியைத் தூண்டும் வேலைத் திட்டத்துக்கு துணை போயினர். அது முதலாளித்துவ சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் ஊதுகுழலாகியது. யூ.என்.பி.க்கு எதிர்ப்புக் காட்டுவதாக வெளியில் காட்டிக் கொண்ட போதிலும் முதலாளித்துவ அரச இயந்திரத்தினை பலப்படுத்தும் பிரச்சாரத்தில் இவர்கள் ஒன்றிணைந்து கொண்டிருந்தனர்.

இந்தப் பிற்போக்கு பிரச்சாரத்தின் புண்ணியத்தினால் இராணுவ பலத்தைப் பலப்படுத்தும் நடவடிக்கைகளில் யூ.என்.பி.அரசாங்கம் இறங்கியது. பயங்கரவாதத் தடைச் சட்டத்தை இன்னும் பல விதிகளில் பலப்படுத்துவது அதன் மற்றொரு நடவடிக்கையாக விளங்கியது. முன்னர் பொதுஜன பாதுகாப்பு மசோதாவை நடைமுறைப்படுத்தி அவசரகாலச் சட்டத்தை பிறப்பித்ததன் பின்னர் மட்டுமே இராணுவத்துக்கு கையளிக்கப்படும் அடக்குமுறை அதிகாரங்கள் இதன் மூலம் நாட்டின் அன்றன்றாடைய சட்டமாக்கப்பட்டது.

புதிய சட்டதிட்டங்களின் கீழ் ஆயுதப் படைகள் நீதிமன்ற உத்தரவு இல்லாமல் எந்த ஒரு இடத்தினுள்ளும் நுழையவும் சோதனையிடவும் எந்த ஒரு நபரையும் கைது செய்யவும் போக்குவரத்து வாகனங்கள், கடற்பயண படகுகள், விமானங்களை நிறுத்திச் சோதனையிடவும் அதிகாரம் வழங்கப்பட்டது. பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபடும் இராணுவம் சாதாரண சட்டங்களில் இருந்து விடுபட்டு அந்தக் கொலைகாரத் தயாரிப்புக்களில் ஈடுபடவும் இதன் மூலம் அதிகாரம் கிடைத்தது. இந்தச் சட்டதிட்டங்களை சட்டப் புத்தகங்களில் வைத்துக் கொண்டு பொதுஜன முன்னணி அரசாங்கம் பட்டலந்த ஆணைக்குழு உட்பட்ட டயர் தீச்சுவாலைகளில் வெந்து இறந்தவர்களையிட்டு முதலைக் கண்ணீர் வடித்த படி நடாத்தி வரும் விசாரணைகளின் இரத்தம் தோய்ந்த பகிடிகளை தொழிலாளர்களும் ஒடுக்கப்படும் மக்களும் முதலாளித்துவ அமைப்பின் காட்டுமிராண்டித்தனத்தைக் கிள்ளி எறிவதற்கு அவசியமான அரசியல் தயாரிப்பின் அவசியமாகப் புரிந்து கொள்ள வேண்டும்.

சமசமாஜ கம்யூனிஸ்ட் தலைவர்களதும் அவ்வாறே ஏனைய குட்டி முதலாளித்துவ தீவிரவாதிகளதும் பிரச்சாரங்களதும் ஆதரவுடன் யூ.என்.பி.அரசாங்கம் தேசிய பாதுகாப்பு அமைச்சை நிறுவ நடவடிக்கை எடுத்தது. இதன் அமைச்சராக லலித் அத்துலத்முதலி நியமிக்கப்பட்டார்.

அவரின் நடவடிக்கைகள், தமிழ் மக்களுக்கு எதிரான இனவாத யுத்தத்தினை எதிர்ப்புரட்சி உள்நாட்டு யுத்தத்துக்கான முப்படைகளையும் பலப்படுத்தி வழிநடாத்த சுடச்சுட நடவடிக்கை எடுப்பதாக விளங்கியது.

## இராணுவத்தைப் பலப்படுத்தல்

இராணுவம் அமைச்சர் அத்துலத் முதலியின் பொறுப்பில் விடப்படும் போது காலாற்படையின் பலம் நிரந்தரப் படையாட்கள் 11000 ஆகவும் தொண்டர்படை 2000 4000க்கும் இடைப்பட்டதாகவும் விளங்கியது. இராணுவத்துக்குப் புதிதாக ஆட்களைத் திரட்ட அமைச்சர் நடவடிக்கை எடுத்தார். இதன்படி 1987ல் நிரந்தரப் படையின் எண்ணிக்கை 50000வரை அதாவது நான்கு மடங்குக்கும் மேலாக அதிகரித்தது. முதலாளித்துவ ஆட்சியாளர்களால் திக்கற்றுச் செய்யப்பட்ட கிராமப்புற ஏழைக் குடும்பங்களின் இளைஞர்கள் வேறு மார்க்கம் இல்லாது போன நிலையில் "இருந்தாலும் சரி இறந்தாலும் சரி" என நினைத்துக்கொண்டு இந்த அலுகோசு வேலைக்குத் திரண்டனர். இளைஞர்கள் மீது திணிக்கப்பட்ட இந்தத் தரித்திரம் பிடித்த நிலைக்கு எதிராக "இனவாத யுத்தத்துக்கு ஒரு ஆளோ ஒரு சதமோ வழங்க வேண்டாம்" எனக் குரல்கொடுத்தது ட்ரொட்ஸ்கிச புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் மட்டுமே. கடந்து சென்ற ஒவ்வொரு வாரத்திலும் இனவாத யுத்தத்தின் தோட்டக்களாகப் பயன்படுத்தப்பட்டு துண்டு துண்டாக சிதறுண்ட இளைஞர்களின் சடலங்கள் சவப்பெட்டிகளில் சீல் வைத்து கிராமங்களுக்கு வந்திறங்கிய போது ட்ரொட்ஸ்கிஸ்டுகளின் நிலைப்பாட்டின் பிழையற்ற தன்மை நிரூபிக்கப்பட்டது.

வடக்கு கிழக்கில் இருந்து இராணுவத்தை வாபஸ்பெறு! என்ற சுலோகம் தமிழ் மக்களின் ஜனநாயக உரிமைகளை நசுக்கும் இராணுவ நடவடிக்கைகளுக்கும் அவ்வாறே சிங்கள இளைஞர்களை இனவாத யுத்தத்தின் பலிகடாக்கள் ஆக்குவதற்கும் எதிராக புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் [illegible] முன் வைத்த [illegible] அணிதிரள்வுக்கான குரலாகியது. தொழிலாளர் வர்க்கம் அந்தச் சுலோகத்தை தனதாக்கிக் கொண்டு ஒடுக்கப்படும் மக்களிடையே பிரச்சாரத்தில் இறங்கியிருக்குமானால் அதனால் உருவான பலத்தின் மூலம் தனது வர்க்க அவசியங்களை இட்டுநிரப்ப மட்டுமன்றி ஒடுக்கப்படும் மக்களின் உதவியோடு தமது அரச அதிகாரத்தை ஸ்தாபிதம் செய்யவும் முடிந்திருக்கும். இதைத் தடுத்தது யார்? இந்தத் துரோகிகள் சகலரும் இனவாத யுத்தத்தின் காட்டுமிராண்டி பெறுபேறுகளுக்கும் அவ்வாறே யூ.என்.பி.அரசாங்கத்துக்கு பதிலீடாக பொதுஜன முன்னணி அரசாங்கத்தை காட்டி ஆட்சிக்கு கொணர்ந்து மக்களைக் கதியற்றுச் செய்து பாதுகாப்பற்ற நிலையை ஏற்படுத்தியதற்கும் பொறுப்புச் சொல்லியாக வேண்டும்.

3.வடக்கு கிழக்கு மாகாணங்களில் தமிழ் மக்களுக்கு எதிரான இராணுவ நடவடிக்கைகளுக்கான சாக்குப்போக்காக இனவாத ஆத்திரமூட்டல்களை சிருஷ்டிக்கும் பொருட்டு, அந்த இரண்டு மாகாணங்களிலும் புதிதாக சிங்கள மக்களைக் குடியமர்த்த கறுப்பு ஜூலை முடிவுற்றதும் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்டங்களை ஒன்றில் இருந்து மற்றையதைப் பிரித்து வைக்கும் வகையில் மகாவலித் திட்டத்துக்குரிய மதுறு ஓயா பகுதியில் சிங்களக் கிராமத்தை திணிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. இதில் முன்னணியில் நின்றவர் பேர்போன இனவாதியான திம்புலாகல சீலாலங்கார தேரோ. அரச அதிகாரிகளையும் பயமுறுத்தும் காடைத்தனங்களுக்குப் பேர்போனவரான அவர் கிழக்கு மாகாண "எஜன்ட் துரை"க்கும் மேலாக நின்று கொண்டிருந்தார்.

சீலாலங்கார தேரோவின் பலாத்காரக் குடியேற்றம் பற்றி யூ.என்.பி. அரசாங்கத்தின் உள்நாட்டு அமைச்சர் கே.டபிள்யூ.தேவநாயகமும் மட்டக்களப்பு அரசாங்க அதிபர் அந்தோனிமுத்துவும் முறைப்பாடுகள் செய்த போதிலும் மகாவலி அதிகார சபை அதையிட்டு எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. இது சம்பந்தமாக மகாவலி அதிகார சபையின் அன்றைய தலைவராக விளங்கிய பண்டிதரத்னவுக்கும் ஜனாதிபதி ஜயவர்தனவுக்கும் இடையே இடம்பெற்ற பேச்சுவார்த்தைகள் பிரசித்திபெற்றவை.

மகாவலி அதிகாரசபைக்கு சொந்தமான காணிகளில் பலாத்காரமாக குடியேறியவர்களை அப்புறப்படுத்தும்படி [illegible] பண்டிதரத்னவுக்கு உத்தரவிட்டார். ஆனால் கிடைத்த பதில்: "குடியேற்றங்கள் திம்புலாகல தேரோவின் தலைமையில் செய்யப்பட்டதால் அவர்களை வெளியேற்ற முடியாது."

இந்தப் பதிலால் ஆத்திரம் அடைந்த ஜயவர்தன கூறியதாவது: "மகாவலி அதிகார சபை தொழிற்படுவது திம்புலாகல தேரோவுக்கு அவசியமான விதத்திலாகின் நான் அவரை அதன் தலைவராக்குகின்றேன். நீங்கள் வீட்டுக்கு போகலாம்." எனக் குறிப்பிட்டார்.

அடுத்து ஜயவர்தன அந்தப் பணியை மாவட்ட அமைச்சர் போல் பெரேராவிடம் ஒப்படைத்தார். மகாவலி பிராந்தியத்துக்குச் சென்ற அவர் 20000க்கும் அதிகமானோர் மகாவலி பிராந்தியத்தில் குடிசைகள் அமைத்துக் கொண்டு பலாத்காரமாகக் குடியேறிக் கொண்டுள்ளதாக அறிக்கை செய்தார். அச்சமயத்தில் மகாவலி அதிகார சபையோ குடியேறி உள்ளவர்களின் எண்ணிக்கை 2000க்கும் குறைவானது என அறிக்கை செய்திருந்தது. இந்தப் பிரச்சினையைச் சிறுப்பித்துக் காட்டும் பொருட்டு இந்தப் பிழையான அறிக்கையின் பின்னணியில் மகாவலி அமைச்சர் காமினி திசாநாயக்க செயற்பட்டார் என்பதில் சந்தேகம் இல்லை. இந்தக் குடியேற்றவாசிகள் மகாவலி அதிகார சபைக்கும் மகாவலி ஒப்பந்தங்களில் ஈடுபட்டு இருந்த முதலாளிகளுக்கும் சொந்தமான லொறிகளில் ஏற்றிக் கொணர்ந்து இறக்கப்பட்டனர்.

இன்னும் இரண்டு பிரதேசங்களிலும் இந்தப் பலாத்கார சிங்களக் குடியேற்றங்களுக்கு இடமளிக்கப்பட்டது. அது திருகோணமலையையும் முல்லைத்தீவையும் பிரிக்கும் யான ஓயாப் பகுதியும் மன்னார் மாவட்ட மல்வத்து ஓயா பகுதியும் இதற்கென ஒதுக்கப்பட்டது.

இந்த விதத்தில் குடியேறத்தள்ளப்பட்ட எந்த ஒரு குடும்பமும் "சிங்கள மரபுகளை" காக்கும் உணர்வுகளால் தூண்டப்பட்டவை அல்ல. முதலாளித்துவ அமைப்பினால் இருக்க இடமற்றுச் செய்யப்பட்ட ஒரு நிலையிலேயே அவர்கள் இந்நிலைக்குத் தள்ளப்பட்டனர். இம்மக்கள் புதிதாகக் குடியேறியதைத் தொடர்ந்து தினமும் தமிழர் எதிர்ப்பு இனவாத விஷம் ஊட்டப்பட்டது. பொலிசாரும் இராணுவமும் திட்டமிட்டு நடாத்தி தமிழ் மக்களின் தலையில் பழியைக் கட்டியடித்த ஆத்திரமூட்டல்கள் மூலம் இம்மக்களை இனவாத யுத்தத்தின் கைத்தேங்காயாக்கும் வேலைத்திட்டம் நனவான முறையில் முன்னெடுக்கப்பட்டது.

**தொடரும்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சோ.ச.க. அங்கத்தவர்களை விடுத
# விடுதலை செய்யும் அ

*அவுஸ்திரேலியா*

## மெல்போர்ண் பகிரங்கக் கூட்டம் கைதைக் கண்டிக்கிறது

செப்டம்பர் 7ம் திகதி அவுஸ்திரேலிய சோசலிச சமத்துவக் கட்சியினால் மெல்போர்ண் டெட்னொங்கில் ஒழுங்கு செய்யப்பட்ட தொழிலாளர், இளைஞர்கள், வீட்டுப் பெண்களைக் கொண்ட கூட்டம் விடுதலைப் புலிகள் சோ.ச.க..அங்கத்தவர்களைக் கைது செய்ததை கண்டனம் செய்ததோடு அவர்களை உடனடியாக விடுதலை செய்யும்படி கோரும் பிரேரணையை ஒருமனதாக நிறைவேற்றியது.

இந்தக் கூட்டத்துக்கு எதிர்வரும் அவுஸ்திரேலிய பொதுத் தேர்தலில் விக்டோரியா மாநிலத்துக்கு அவுஸ்திரேலிய சோ.ச.க.வேட்பாளராகப் போட்டியிடும் பிலிப்ஸ் தலைமை தாங்கினார். இந்தக் கூட்டம் சோ.ச.க..அங்கத்தவர்களை விடுதலை செய்ய நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழு முன்னெடுக்கும் அனைத்துலகப் பிரச்சார இயக்கத்தின் ஒரு பாகமாக இடம்பெறுவதாக தோழி.பிலிப்ஸ் குறிப்பிட்டார். உலகின் நாலாபாகத்தில் இருந்தும் நூற்றுக்கணக்கான கடிதங்களும் பக்ஸ்களும் சோ.ச.க..அங்கத்தவர்களை விடுதலை செய்யக் கோரி விடுதலைப் புலிகளின் லண்டன் தலைமையகத்துக்கு அனுப்பப்பட்டுள்ளதாக தெரிவித்த பிலிப்ஸ் இலங்கையின் பல பகுதிகளிலும் அவ்வாறே இந்தியாவில் சென்னையிலும் இந்தப் பிரச்சார இயக்கத்துக்கு ஆதரவாக வெற்றிகரமான கூட்டங்களும் மறியல்களும் நடாத்தப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் உலக சோசலிச வெப் நிலையத்தின் ஆசிரியர் குழு உறுப்பினரான பீட்டர் சீமண்ட்ஸ் பேசுகையில் விடுதலைப் புலிகள் சோ.ச.க..அங்கத்தவர்களைக் கைது செய்ததை அடிப்படை ஜனநாயக உரிமைகளுக்கு எதிரான ஒரு தாக்குதல் எனக் கூறினார். ஒன்றுடன் ஒன்று முரண்பட்ட இரண்டு முன்னோக்குகளும் இங்கு மோதிக் கொள்வதாக அவர் குறிப்பிட்டார். விடுதலைப் புலிகளின் அரசியல் இலக்கு வடக்கு கிழக்கில் தனியான ஒரு முதலாளித்துவ குட்டி அரசை அமைப்பதாக உள்ளது எனவும் அது தமிழ் வெகுஜனங்களின் வேலைத்திட்டம் அல்ல எனவும் சீமெண்ட்ஸ் கூறினார்.

தமிழ்த் தொழிலாளர் வர்க்கத்தின் உழைப்பை இலாபமான முறையில் சுரண்டிக் கொள்ள அனைத்துலக முதலீட்டாளர்களுக்கு தமது சேவையை வழங்கும் குட்டி முதலாளித்துவ தாப்பினருக்கு சேவை செய்வதாக அது உள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

இலங்கை அரசாங்கம் தமிழ் மக்களுக்கு எதிராக நடாத்தி வரும் யுத்தத்தின் வரலாற்று மூலங்களை விளக்கிய அவர், விடுதலைப் புலிகள் எஞ்சியுள்ள சோ.ச.க. அங்கத்தவர்களையும் சல்லடை போட்டுத் தேடி வருவதாகத் தகவல் கிடைத்துள்ள ஒரு நிலையில் கைது செய்யப்பட்டுள்ள சோ.ச.க. அங்கத்தவர்களை விடுதலை செய்ய முன்னெடுக்கும் போராட்டத்தினை உக்கிரமாக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினார்.

இந்தக் கூட்டத்தின் பின்னர் பேசிய இலங்கையில் புகையிரத சேவை ஊழியராக விளங்கிய டெரிக் சொலமன்ஸ் பின்வருமாறு குறிப்பிட்டார்: "உங்களது அமைப்பின் முழு இலக்கும் பாராட்டுக்குரியது. பிரிவினைக்காகப் போராடும் விடுதலைப் புலிகளின் கருத்துக்களுக்கு முரணமான விதத்தில் நீங்கள் போராடுகின்றீர்கள். ஏதுவித குற்றமுமின்றி கைது செய்யப்பட்டுள்ளவர்களை விடுதலை செய்ய அனைத்துலக அங்கீகாரத்தைப் பெற நீங்கள் ஒன்றுபட்டு நிற்பது தெரிகின்றது. அவர்கள் (கைதானவர்கள்) குற்றவாளிகள் அல்லர். அவர்களை அரசாங்கமோ அல்லது விடுதலைப் புலிகளோ எதற்காக கைது செய்ய வேண்டும்? நீங்கள் நியாயமான இலக்குகளின் பேரில் போராடுகின்றீர்கள்."

இலங்கையில் இருந்து வந்து அவுஸ்திரேலியாவில் வாழும் ஒபாத பெரெய்ரா என்பவரும் இந்தப் பிரேரணைக்கு ஆதரவாக வாக்களித்தது ஏன் என்பதை விளக்கினார். "இது ஒரு நல்ல நோக்கிலானது. மக்கள் அதற்கு ஆதரவளிக்க வேண்டும். முதலாளித்துவ அரசை அமைப்பதே விடுதலைப் புலிகளுக்கு அவசியமாகியுள்ளது. அவர்கள் சாதாரண வெகுஜனங்களின் சார்பில் நின்றுவரவில்லை. உங்களது அமைப்புக்கு அவசியமாக இருப்பது வர்க்க அமைப்பு இல்லாத, சகலருக்கும் சமத்துவமான ஒரு நிலைமையை சிருஷ்டிப்பதே" என்றார்.

### நியூசவுத் வேல்ஸ் ஆசிரியர் சம்மேளனத்தின் பொதுச் செயலாளர் சோ.ச.க.அங்கத்தவர்களை விடுதலை செய்யும்படி கோருகின்றார்

அவுஸ்திரேலியாவின் நியூசவுத் வேல்ஸ் மாநிலத்தின் அரசாங்கப் பாடசாலைகளின் 60000 ஆசிரியர்களை அங்கத்தவர்களாகக் கொண்ட நியூசவுத் வேல்ஸ் சம்மேளனத்தின் பொதுச் செயலாளர் ஜோன் ஹெனசி கைது செய்யப்பட்டுள்ள சோ.ச.க..அங்கத்தவர்களை விடுதலை செய்யும்படி கோரி விடுதலைப் புலிகளுக்கு பின்வரும் கடிதத்தை அனுப்பி வைத்துள்ளார்:

1998 செப்டம்பர் 10

அன்பின் ஐயா,

நான் இந்தக் கடிதத்தை உங்களுக்கு இப்போது நியூசவுத் வேல்ஸ் ஆசிரியர் சம்மேளனத்தின் பொதுச் செயலாளர் பதவியை வகிக்கும் இப்பிரச்சினையையிட்டு அக்கறை கொண்ட ஒரு அவுஸ்திரேலிய பிரஜை என்ற வகையில் வரைகின்றேன்.

தொழிலாளர், மனித உரிமைகளையும் தமது ஜனநாயக உரிமைகளையும் தமிழ் மக்களின் ஜனநாயக உரிமைகளையும் அனுபவிக்கையில் கைது செய்யப்பட்டுள்ள சோ.ச.க. அங்கத்தவர்களின் அடிப்படை ஜனநாய உரிமைகளை பாதுகாக்க அவசியமான சகல நடவடிக்கைகளையும் எடுப்பதை உத்தரவாதம் செய்யும்படி நான் உங்களிடம் வேண்டுகின்றேன்.

சோ.ச.க.இலங்கையில் இடம்பெறும் யுத்தத்துக்கும் சிறப்பாக தீவின் வடக்கு கிழக்கில் தமிழ் மக்களுக்கு எதிராக இலங்கை அரசாங்கம் நடாத்திவரும் யுத்தத்துக்கு உறுதியான எதிர்ப்பைத் தெரிவித்துக் கொண்டுள்ளது.

அவுஸ்திரேலியாவுக்கு அது சிலோன் என அழைக்கப்பட்டு வந்த காலம் வரை நீண்ட உறவு இலங்கையுடன் இருந்துவந்துள்ளது. அவுஸ்திரேலியர்கள் அந்நாட்டு மக்களை மிகவும் உயர்ந்தவர்களாக கணிக்கின்றனர். சகலரும் ஜனநாயக உரிமைகளை அனுபவிக்கக் கூடிய ஒரு நிலைமையையும் இலங்கையில் ஒரு காலத்தில் இருந்தது போல் சமாதானம் நிறைந்த நாடாக மீண்டும் மிளிர்வதையும் உத்தரவாதம் செய்யும்படி நான் உங்களை வேண்டுகின்றேன்.

இப்படிக்கு,

அன்புள்ள,

ஜோன் ஹெனசி.

பொதுச் செயலாளர்.

### பிரித்தானிய தொழிற்சங்க சம்மேளன பேராளர்கள் விடுதலைப் புலிகளின் அடக்குமுறைகளை கண்டனம் செய்கின்றனர்


பிரித்தானிய தொழிற்சங்க காங்கிரசின்(TUC) வருடாந்த பொதுக் கூட்டத்தில் கலந்து கொண்ட 234 பேராளர்கள் சோ.ச.க..அங்கத்தவர்கள் விடுதலைப் புலிகளால் தடுத்து வைக்கப்படாது விடுதலை செய்யப்பட வேண்டும் எனக் கோரும் பெட்டிசத்தில் கையொப்பமிட்டுள்ளார்கள். பிரித்தானிய சோசலிச சமத்துவக் கட்சி அங்கத்தவர்களால் பிளாக்பூலில் நடைபெற்ற ரீ.யூ.சி. காங்கிரஸ் மகாநாட்டுக்கு வருகை தந்த பேராளர்களிடையே விநியோகிக்கப்பட்ட இந்தப் பெட்டிசம் லண்டனில் உள்ள விடுதலைப் புலிகளின் தலைமையகத்துக்கு

## உடப்பு கூட்டத்துக்கு பேராதரவு

தமிழீழ விடுதலை புலிகளால் கைது செய்யப்பட்ட சோ.ச.க..அங்கத்தவர்களை விடுதலை செய்யும் போராட்டத்தின் ஒரு பாகமாக செப்டம்பர் 11ம் திகதி உடப்பு பொதுச் சந்தை எதிரில் பிரச்சாரமும் அதைத் தொடர்ந்து பொதுக் கூட்டமும் நடைபெற்றது.

30 நிமிடங்களுக்கு மேலாக நடைபெற்ற இந்த மறியல் போராட்டத்தில் உடப்பு பகுதியைச் சேர்ந்த ஒடுக்கப்படும் தமிழ் மீனவர்களும் இளைஞர்களும் பெண்களும் ஆர்வத்துடன் பங்கு கொண்டனர்.

இங்கு இடம்பெற்ற பகிரங்கக் கூட்டத்தில் பேசிய செல்லையா இராஜ்குமார் ,விடுதலைப் புலிகளால் கைது செய்யப்பட்டுள்ள சோ.ச.க். அங்கத்தவர்களை விடுதலை செய்வதற்காக இடம்பெறும் அனைத்துலக பிரச்சார இயக்கத்துக்கு ஆதரவு வழங்குமாறு சகல தொழிலாளர்களையும் இளைஞர்களையும் வேண்டிக் கொண்டார். தெற்கில் பொதுஜன முன்னணி அரசாங்கமும் வடக்கில் தமிழீழ விடுதலைப் புலிகளும் சோசலிச வேலைத்திட்டத்துக்காகப் போராடும் சோ.ச.க..அங்கத்தவர்களுக்கு எதிராக நடாத்தி வரும் அடக்குமுறைகளை சுட்டிக்காட்டிய இராஜ்குமார், பொதுஜன முன்னணியும் விடுதலைப் புலிகளும் ஒன்றுடன் ஒன்று இணைந்து வெகுஜனங்களுக்கும் அதன் புரட்சிக் கட்சிக்கும் எதிராக செயற்படும் விதத்தை




உடப்புவில் மறியல் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள சோ.ச.க. அங்கத்தவர்களும் ஆதாவாளர்களும்

அவர் சுட்டிக்காட்டினார்.

செல்லையா இராஜ்குமார் விடுதலைப் புலிகள் அமைப்பின் சந்தேக நபராக பொய்க் குற்றஞ் சாட்டப்பட்டு ஒரு ஆண்டுக்கும் அதிகமான காலம் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டு இருந்த சோ.ச.க. அங்கத்தவராவார்.

அவர் நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழு அனைத்துலக் ரீதியில் நடாத்திய பலம் வாய்ந்த பிரச்சார இயக்கத்தின் காரணமாக

10ம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...தலைப் புலிகளின் கைதில் இருந்து
# ...னைத்துலகப் பிரச்சாரம்



சோ.ச.க. அங்கத்தவர்களை விடுதலை செய்யக் கோரி கம்பஹாவில் இடம் பெற்ற மறியல் (அக்டோபர் 23)

அனுப்பிவைக்கப்பட்டது.

**இந்தப் பெட்டிசம் பின்வருமாறு குறிப்பிடுகின்றது:**

"இலங்கையின் வடக்கில் கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள சோசலிச சமத்துவக் கட்சியின் அங்கத்தவர்களுக்கும் ஆதரவாளர்களுக்கும் எதிராகத் தொடுக்கப்பட்டுள்ள உங்களின் கைது செய்தல், பயமுறுத்தல் முயற்சிகளை உடனடியாக நிறுத்தும்படியும் கைது செய்யப்பட்டவர்களை உடன் விடுதலை செய்யும்படியும் நாம் வேண்டுகின்றோம்..."

இந்தப் பெட்டிசத்தில் கையொப்பம் இட்டவர்களுள் லண்டன் தீயணைக்கும் படையினரின் தொழிற்சங்க தலைவர் கென் கமரென், தேசிய தொடர்புச் சாதன ஊழியர் சங்க பொதுச் செயலாளர் ஜோன் பொஸ்டன், எம்.எஸ்.எப். என்ற தொழிற்சங்கத்தின் தேசிய அலுவலர் ஜீம் சீமன்ஸ் , தேசிய சுரங்கத் தொழிலாளர் சங்கத்தினதும் பிரித்தானிய சோசலிசத் தொழிற் கட்சியினதும் உப தலைவர் பிராங் கெவ் ஆகியோர் அடங்குவர். பிரித்தானியாவில் மாபெரும் தொழிற்சங்கமும் 1.4 மில்லியன் அங்கத்தவர்களைக் கொண்டதுமான யூனிசன் அமைப்பின் பேராளர்கள் பலரும் நிறைவேற்று கமிட்டி உறுப்பினர் றோஜர் டானிஸ்டர் உட்பட இந்தப் பெட்டிசத்தில் கையொப்பம் இட்டனர்.

பிரித்தானிய சோ.ச.க.வின் பிரதி தேசியச் செயலாளர் ஜூலி ஹைலண்டின் கையொப்பத்தைக் கொண்ட அறிமுகக் கடிதத்துடன் இந்தப் பெட்டிசம் விடுதலைப் புலிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. இந்தப் பெட்டிசத்துக்கு கிடைத்த கையொப்பங்களின் மூலம் பிரித்தானிய தொழிலாளர் வர்க்கத்தின் பரந்த தட்டினரின் ஆதரவை இது பிரதிநிதித்துவம் செய்வதாகக் குறிப்பிட்ட ஹைலண்டின் கடிதம் "நாம் பிரித்தானிய அனைத்துலக தொழிலாளர் வர்க்கத்தின் எதிரில் உங்களின் நடவடிக்கைகளை அம்பலப்படுத்துவதைத் தொடருவோம்" எனச் சுட்டிக்காட்டிக் கொண்டுள்ளது. அந்தக் கடிதம் இறுதியாக "இந்தக் கடிதம் கிடைத்ததை ஒப்புக் கொண்டு முடிந்த மட்டும் அவசரத்துடன் எமது கோரிக்கையயிட்டு அக்கறை காட்டுக." என்றுள்ளது.

## இந்திய ட்ரொட்ஸ்கிஸ்டுகள் மறியல் போராட்டம்

தமிழ்ழ விடுதலைப் புலிகளால் கைது செய்யப்பட்ட சோ.ச.க. அங்கத்தவர்களை விடுதலை செய்யக் கோரி இந்திய சோசலிச தொழிலாளர் கழகம் ஆகஸ்ட் 22ம் திகதி சென்னையில் பலம் வாய்ந்த மறியல் போராட்டத்தில் ஈடுபட்டது. சோசலிசத் தொழிலாளர் கழகம் நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவுடன் அரசியல் ஐக்கியபூண்டீட அமைப்பாகும். இந்த மறியல் நான்காம் இயக்கத்தின் அனைத்துலகக் குழுவும் உலக சோசலிச வெப் நிலையமும் இலங்கை சோசலிச சமத்துவக் கட்சி அங்கத்தவர்களை விடுதலை செய்யும்படி கோரி அனைத்துலக ரீதியில் நடாத்தும் பிரச்சார இயக்கத்தின் ஒரு பாகமாக அமைந்திருந்தது.

ஆகஸ்ட் 22ம் திகதி காலை 10மணி தொடக்கம் மாலை 1மணி வரை இடம்பெற்ற இம்மறியலில் 40க்கும் அதிகமானோர் கலந்து கொண்டதோடு இது இதுகாறும் சோ.தொ.க.இந்தியாவில் நடாத்திய சக்திவாய்ந்த பிரச்சார நடவடிக்கையாகவும் விளங்கியது.

இந்த மறியல் இடம்பெற்ற இடத்தைத் தாண்டிச் சென்ற ஆயிரக்கணக்கான மக்களின் கவனத்தை ஈர்ப்பதாக விளங்கியது. இதில் சோ.தொ.க..அங்கத்தவர்கள் ஆடை உற்பத்தி தொழிலாளர்கள், மோட்டார் வாகனத் தொழிலாளர்கள், இளைஞர்கள் வீட்டுப்பெண்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.சென்னையைச் சுற்றி அகதிகள் முகாம்களில் தங்கியுள்ள இலங்கைத் தமிழ் மக்களில் பலரும் இந்த மறியல் பிரச்சாரத்தில் சேர்ந்து விடுதலைப் புலிகள் இலங்கையில் தமிழ் சோ.ச.க..அங்கத்தவர்களைக் கைது செய்துள்ளதைக் கண்டித்ததோடு அவர்களை நிபந்தனையின்றி விடுதலை செய்யும் படியும் வேண்டினர். இது மறியலின் ஒரு சிறப்பு அம்சமாக விளங்கியது. அத்தோடு சுமார் 20 கிராமப்புற இளைஞர்களும் இந்த பிரச்சார இயக்கத்தில் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்க ஒரு புதிய அபிவிருத்தியாகவும் விளங்கியது.

மறியலில் ஈடுபட்டவர்கள் எழுப்பிய சுலோகங்களில் பின்வருவன முக்கிய இடம் பிடித்துக் கொண்டிருந்தன: விடுதலை புலிகள் கைது செய்த சோ.ச.க. அங்கத்தவர்களை விடுதலை செய்! விடுதலைப் புலிகளின் ஜனநாயக விரோத நடவடிக்கைகள் ஒழிக! சோசலிச அனைத்துலகத்துக்கான சோ.ச.க.போராட்டம் வாழ்க ! விடுதலைப் புலிகளின் முதலாளித்துவ தேசியவாத வேலைத்திட்டம் ஒழிய! உலகத் தொழிலாளர்களே ஒன்படுங்கள் ! உலக சோசலிச புரட்சி வாழ்க! இலங்கையின் இனவாத யுத்தத்தை நிறுத்து ! இலங்கை இந்திய முதலாளித்துவ அரசுகளின் பிற்போக்கு உறவுகள் ஒழிக! இந்தியத் துணைக்கண்ட சோசலிசக் குடியரசு ஒன்றியத்துக்காகப் போராடு !

மறியலைத் தொடர்ந்து இந்தப் பிரச்சார இயக்கத்தின் நோக்கத்தை தெளிவு படுத்தி சோ.ச.க.பொதுச் செ... ராமும் உரை நிகழ்த்தினர்.

## தொழிலாளர் அமைப்புக்கள், கலைஞர்கள், புத்திஜீவிகள் ஆதரவு

### கொழும்பு பல்கலைக் கழகம்

**வரலாற்று, அரசியல் விஞ்ஞானத் துறை பேராசிரியர்.அமல் ஜயவர்தன:**

"சோ.ச.க.இலங்கைத் தமிழ் மக்களின் உரிமைகளின் பேரில் உறுதியாகவும் முழுமையாகவும் நின்று வந்துள்ளது என்பது ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்றாகும். அத்தோடு அந்தப் பிரச்சார இயக்கத்தை எதுவித தடையும் இல்லாமல் முன்னெடுக்க அதற்கு இடமளிக்க வேண்டும்.

"தனிநபர்கள் பலாத்காரமான முறையில் கடத்திச் செல்லப்படுவதில் இருந்து பாதுகாப்பு அளிப்பது மனித உரிமைகளதும் சட்டரீதியான ஒரு ஆட்சியினதும் அடிப்படை கொள்கையாகும். நாம் அரசாங்கத்தையும் எதிர்தரப்பு குழுக்களையும் அரசியல் செயற்பாட்டாளர்களின் ஜனநாயக உரிமைகளை மீறுவதை நிறுத்தும்படி வேண்டுகின்றோம். இக்கட்டத்தில் தங்களின் தடுப்புக் காவலில் உள்ள சோ.ச.க.அங்கத்தவர்களை நிபந்தனையின்றி விடுதலை செய்யும்படி நாம் விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைமையை வேண்டுகின்றோம்."

**வரலாற்று , அரசியல் விஞ்ஞானத்துறை தலைவரும் அனைத்துலக உறவுகள் வேலைத்திட்டத்தின் இணைப்பாளருமான பேராசிரியர் ஜோர்ஜ் கூரே:**

"சோசலிச சமத்துவக் கட்சியின் அங்கத்தவர்கள் மூவர் விடுதலைப் புலிகளால் தடுத்துவைக்கப்பட்டுள்ளதாக தெரிய வந்தமை அதிர்ச்சி தருகின்றது. ஆரம்பம் தொடக்கம் தமிழ் மக்களின் உரிமைகளின் பேரில் தொடர்ந்து போராடிவரும் அரசியல் கட்சி என்ற வகையில் நான் சோசலிச சமத்துவக் கட்சியை அறிவேன்.ஆதலால் நான் இந்த நடவடிக்கையை வன்மையாகக் கண்டனம் செய்வதோடு சோ.ச.க. அங்கத்தவர்கள் மூவரையும் உடனடியாக விடுதலை செய்யும்படி வேண்டுகின்றேன்."

**சட்டத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் என்.பெரேரா:**

".... மற்றும் முக்கிய இலக்குகளோடு சோசலிச சமத்துவக் கட்சி இலங்கைத் தமிழ் மக்களின் உரிமைகளின் பேரில் போராடி வந்துள்ளது என்பது எனக்குத் தெரியும். ஆதலால் நான் மனிதாபிமான ரீதியிலும் அவர்கள் ஈடுபட்டுள்ள இலக்குகளின் பேரிலும் மேலும் தாமதியாது இந்த (சோ.ச.க.) அங்கத்தவர்களை விடுதலை செய்ய வேண்டும் எனக் கோரியே இக்கடிதத்தை எழுதுகின்றேன்."

**ஆங்கில பீட சிரேஷ்ட விரிவுரையாளர் துஷ்யந்தி மெண்டிஸ்:**

"...மற்றும் முக்கிய இலக்குகளோடு சோ.ச.க.இலங்கை தமிழ் மக்களின் உரிமைகளின் பேரில் போராடி வந்துள்ளது என்பது எனக்குத் தெரியும். ஆதலால் நான் மனிதாபிமான அடிப்படையிலும் அவர்கள் ஈடுபட்டுள்ள இலக்குகளின் பேரிலும் மேலும் தாமதியாது இந்த (சோ.ச.க) அங்கத்தவர்களை விடுதலை செய்ய வேண்டும் எனக் கேட்டே இக்கடிதத்தை எழுதுகின்றேன்."

**வெகுஜனத் தொடர்புச் சாதனத் துறையின் விரிவுரையாளர் எம்.கே.ஆர்.டேவிட்:**

"... கட்சியின் (சோ.ச.க.) அங்கத்தவர்கள் மூவர் விடுதலைப் புலிகளால் கைது செய்யப்பட்டுள்ளதாக எனக்கு தெரிய வந்துள்ளது. எல்லாவற்றுக்கும் முதலில் நான் இந்நடவடிக்கையை வன்மையாகக் கண்டனம் செய்கின்றேன். அதற்குக் காரணம் இந்தத் தடுத்து வைப்பு மனித உரிமைகளை மீறுவதாக நான் கருதுவதனாலாகும். இந்த மூன்று அங்கத்தவர்களையும் மற்றும் சகல அரசியல் கைதிகளையும் தாமதிக்காது விடுதலை செய்யும்படி நான் உங்களிடமும் அதையிட்டு அக்கறை கொண்ட சகலரிடமும் வேண்டுகின்றேன்."

**குடிசன அறிவியல் துறையின் பேராசிரியர் டபிள்யூ.ஜே.டி சில்வா:**

"இது சோசலிச சமத்துவக் கட்சியின் மூன்று அங்கத்தவர்களை தடுத்து வைத்திருப்பதற்கு எதிராக எதிர்ப்புத் தெரிவிக்கவும் அவர்களை விடுதலை செய்யவும் வேண்டுவதாகும்."

**வரலாற்று, அரசியல் விஞ்ஞான துறையின் பேராசிரியர் ரீ.லெயிட்டன்:**

"இது இலங்கை சோசலிச சமத்துவக் கட்சியைச் சேர்ந்த மூன்று அங்கத்தவர்களை தடுத்து வைத்திருப்பதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கவும் அவர்களை விடுதலை செய்யும்படி கோரும் வேண்டுகோளாகும்."

**சிங்களத் துறையின் தலைவர் பேராசிரியர் திஸ்ஸ ஜயவர்தன:**

"எனது உறுதியான நம்பிக்கை என்னவெனின் இந்தக் குறிப்பிட்ட கட்சியின்(சோ.ச.க.).அங்கத்தவர்கள் இனக்குழு ஐக்கியத்திற்காகத் தொடர்ந்து செயற்பட்டு வருபவர்கள் என்பதாகும். தொடர்ந்தும் இக்கட்சி சகல இனக்குழுக்களதும் சமத்துவத்துக்காக தொழிற்படும். அந்த முக்கிய நோக்கிலான அதன் அர்ப்பணிப்பு பெரிதும் பாராட்டுக்குரியது. ஆதலால் விடுதலைப் புலிகள் மேலும் தாமதியாது இந்த அங்கத்தவர்களை விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்கும் என நான் எதிர்ப்பார்க்கின்றேன்."

**வரலாற்றுத் துறையின் கலாநிதி.நிரா விக்கிரமசிங்க:**

"இலங்கை சோசலிச சமத்துவக் கட்சியின் மூன்று அங்கத்தவர்கள் சுவரொட்டி ஒட்டும் வன்முறையற்ற பணியில் ஈடுபட்டமைக்காக உங்கள் அமைப்பின் காரியாளர்களால் கிளிநொச்சியில் கைது செய்யப்பட்டதால் என்னுள் ஏற்பட்ட மனக்குழப்பத்தை வெளியிடுவதற்காக நான் இதை எழுதுகின்றேன். இந்தக் கட்சி தொடர்ந்து இனச்சார்பற்ற கொள்கையை கடைப்பிடித்து வந்துள்ளதால் அவர்களை முடிந்தமட்டும் விரைவில் விடுதலை செய்வதன் மூலம் மனித உரிமைகளின் பேரிலான உங்களின் அர்ப்பணத்தை வெளிக்காட்டிக் கொள்ள வேண்டும் என்பதாகும்."

**வரலாற்று பீட பேராசிரியர் இந்திராணி முனசிங்க:**

"உங்களின் அமைப்பு இலங்கை சோசலிச சமத்துவக் கட்சியின் மூன்று அங்கத்தவர்களைக் கைது செய்துள்ளதாக நான் அறிகின்றேன். இக்கட்சி தமிழ் மக்களின் உரிமைகளுக்காகத் தொடர்ந்து போராடி வந்துள்ளது. அவர்களை உடனடியாக விடுதலை செய்யும்படி நான் உங்களிடம் வேண்டுகின்றேன்."

11ம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சோ.ச.க. அங்கத்தவர்களை விடுதலைப் புலிகளின் கைதில் இருந்து விடுதலை செய்யும் அனைத்துலகப் பிரச்சாரம்

## உடப்பு கூட்டத்துக்கு ...

9ம் பக்கத் தொடர்ச்சி

விடுதலை செய்யப்பட்டார்.

இதைத் தொடர்ந்து பொதுஜன முன்னணி அரசாங்கத்தினால் 1994ல் சிறைக்குள் தள்ளப்பட்டு சோ.ச.க.வும் அனைத்துலகக் குழுவும் முன்னெடுத்த அனைத்துலகப் பிரச்சார இயக்கத்தின் தாக்கம் காரணமாக விடுதலை செய்யப்பட்ட தோட்டப்புற அரசியல் கைதிகள் குழுவைச் சேர்ந்தவரும் சோ.ச.க. அங்கத்தவருமான சாந்தகுமார் பேசினார். அவர் தனது அனுபவத்தின் அடிப்படையில் பொதுஜன முன்னணி அரசாங்கம் இனவாத யுத்தத்தைப் பயன்படுத்தி தமிழ் இளைஞர்களுக்கு எதிராக முன்னெடுக்கும் அரச ஒடுக்குமுறையை விளக்கினார். சோசலிச சமத்துவக் கட்சியும் அதன் முன்னோடியான புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகமும் ஒடுக்கப்படும் தமிழ் மக்களின் ஜனநாயக உரிமைகளைக் காக்க முன்னெடுத்த போராட்ட வரலாற்றை விபரித்த சாந்தகுமார், தோட்டப் பகுதியில் தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்ட வேளையில் அனைத்து அமைப்புக்களும் வாயைமூடிக்கொண்டு இருந்தன. ஆனால் சோசலிச சமத்துவக் கட்சியோ பொய்க் குற்றச்சாட்டுக்களில் இருந்து இந்த தமிழ் தோட்டப்புற இளைஞர்கள் விடுதலை செய்யப்படும் வரை போராட்டத்தை முன்னெடுத்த விதத்தை கூட்டத்தினருக்கு விளக்கினார்.

சோசலிச சமத்துவக் கட்சியின் மத்திய குழு அங்கத்தவரான நந்த விக்கிரமசிங்க பேசுகையில் பின்வருமாறு குறிப்பிட்டார்: "விடுதலைப் புலிகள் சோசலிச சமத்துவக் கட்சி அங்கத்தவர்களை கைது செய்ததன் மூலம் அதனது நலன்கள் உழைக்கும் மக்களின் நலன்களுக்கு முற்றிலும் எதிரானது என்பதை காட்டிக் கொண்டுள்ளது.

" சோசலிச சமத்துவக் கட்சியின் தோழர்கள் முன்னெடுக்கும் நடவடிக்கைகள் விடுதலைப் புலிகள் அமைப்புக்கு குந்தகமாக இருப்பதாலேயே இத் தோழர்களைக் கைதா செய்ததாக விடுதலை புலிகள் தெரிவித்துள்ளது. இந்தத் தோழர்கள் முன்னெடுத்த வேலைத்திட்டம் என்ன? அவர்கள் இனவாத யுத்தக் கெடுபிடிகளில் இருந்து வன்னி மாவட்ட மக்களை விடுவிக்கவும் அவர்களின் ஜனநாயக உரிமைகளை ஸ்தாபிதம் செய்யவும் போராடினார்கள். சிங்கள முதலாளித்துவ இராணுவத்தின் ஆக்கிரமிப்பினை சிங்கள, தமிழ் தொழிலாளர் வர்க்கத்தினை சோசலிச வேலைத்திட்டத்தின் அடிப்படையில் அணிதிரட்டுவதன் மூலம் மட்டுமே தோற்கடிக்க முடியும் எனத் தெளிவுபடுத்தினார்.

"விடுதலைப் புலிகள் அமைப்பின் முதலாளித்துவ அரசியலை தோற்கடிக்காமல் தமிழ் ஒடுக்கப்படும் மக்களை இனவாத யுத்தத்தில் இருந்து விடுதலை செய்ய முடியாது என்பதை ஸ்தாபிதம் செய்ய இவர்கள் போராடினார்கள்."

இனவாத யுத்தத்துக்கு எதிராக அவர்கள் கடைப்பிடித்த சோ.ச.க.நிலைப்பாட்டை விளக்கிய விக்கிரமசிங்க, கைது செய்யப்பட்ட தருணத்தில் சோ.ச.க. அங்கத்தவர்கள் ஒட்டிக் கொண்டிருந்த சுவரொட்டியில் பொதுஜன முன்னணி அரசாங்கத்தின் அரசியல் தீர்வு பொதியின் மோசடி அம்பலமாக்கப்பட்டு இருந்ததாக அவர் குறிப்பிட்டார்.

விடுதலைப் புலிகள் எமது தோழர்களைக் கைது செய்யத் தள்ளப்பட்டது என்? முதலாளித்துவ வர்க்கத்தின் ஒரு பகுதியினர் என்ற வகையில் அவர்கள் முதலாளித்துவ பொதுஜன முன்னணி அரசாங்கத்துடன் நடாத்தத் தள்ளப்படும் பேச்சு வார்த்தைகளுக்கு எதிராக பொதுமக்களை அணிதிரட்ட சோ.ச.க.போராடியதேயாகும்.

'சண்டே லீடர்' பத்திரிகையில் வெளியான ஒரு பேட்டியில் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் அரசியல் பிரிவினைச் சேர்ந்த தமிழ்ச்செல்வம், தம்மை ஏமாற்றிய யூ.என்.பி. பொதுஜன முன்னணி இருதரப்பினருடனும் மீண்டும் பேச்சுவார்த்தை நடாத்த ஒரு மூன்றாம் தரப்பினரின் தலையீட்டின் மூலம் நம்பிக்கையை ஸ்தாபிதம் செய்ய வேண்டும் என தமிழ்ச்செல்வம் வெளியிட்டுள்ள கருத்தை விக்கிரமசிங்க சுட்டிக்காட்டினார். விடுதலைப் புலிகள் தொழிலாளர் ஒடுக்கப்படும் மக்களுக்கு எதிரான சக்தியாக அணிதிரண்டு கொண்டுள்ளது யாருடன் என்பது அம்பலமாகி உள்ளதாக விக்கிரமசிங்க கூறினார்.

தமிழ்ச்செல்வம் தமது நிஜ திட்டத்தை பின்வரும் விதத்தில் முன்வைத்திருந்தார்: "தென் இலங்கையின் சிங்கள மக்களுக்கு இருந்துவரும் அதே சுதந்திரம் வடக்கு கிழக்கு தமிழ் மக்களுக்கும் இருக்கவேண்டும்" எனக் கூறியுள்ளார்.

வாய் பொய் சொன்னாலும் நாக்கு பொய் சொல்வதில்லை.தெற்கில் சுதந்திரம் எனப்படுவதை ஒரு ஏகாதிபத்தியச் சார்பு நிலைமை என 1948ல் எமது முன்னோடியான ட்ரொட்ஸ்கிச அமைப்பான போல்ஷிவிக் லெனினிஸ்ட் கட்சி நிராகரித்தது. இந்தச் சுதந்திரம் எனப்படுவதின் கீழ் பல்வேறு முதலாளிகளும் வெகுஜன உரிமைகளை நசுக்கித் தள்ளி, அவர்களுக்கு எதிரான இரத்தம் தோய்ந்த தாக்குதல்களை தொடுத்து செயற்பட்ட விதத்தை விக்கிரமசிங்க தெளிவுபடுத்தினார்.

இக்கூட்டத்துக்கு தலைமை தாங்கிய சோ.ச.க. அங்கத்தவரான தயாரத்ன விடுதலைப் புலிகளால் கைது செய்யப்பட்ட சோ.ச.க. அங்கத்தவர்களை விடுதலை செய்ய அனைத்துலகக் குழுவும் உலக சோசலிச வெப் நிலையமும் இலங்கை சோசலிச சமத்துவக் கட்சியும் முன்னெடுக்கும் அனைத்துலகப் பிரச்சாரத்தை தெளிவுபடுத்தினார். அத்தோடு அந்தப் பிரச்சார இயக்கத்துக்கு உலகளாவிய ரீதியில் கிடைத்துவரும் ஆதரவையும் அவர் விபரித்தார்.

இந்தக் கூட்டத்துக்கு உடப்பு பகுதியைச் சேர்ந்த 150க்கும் அதிகமான தமிழ் ஒடுக்கப்படும் மீனவர்கள் வருகை தந்திருந்தனர். இப்பகிரங்கக் கூட்டம் கூட்டப்பட்டது சோ.ச.க.அங்கத்தவர்கள் பல கிழமைகளாக புத்தளம் பகுதியில் வாழ்ந்து வரும் தமிழ் ஒடுக்கப்படும் மக்கள், இனவாத யுத்தத்தினால் அகதிகளாக்கப்பட்டு மன்னார், முல்லைத்தீவு பகுதிகளில் இருந்து வந்து அகதி முகாம்களில் வாழும் தமிழ் முஸ்லீம் மக்கள், மதுரங்குளி, புத்தளம், உடப்பு பகுதிகளிலும் நடாத்திய அரசியல் நடவடிக்கையின் மூலமேயாகும் என்பது குறிப்பிடத்தக்கது. இந்தப் பிரச்சார இயக்கத்துக்கு இம்மக்கள் பகுதியினரிடம் இருந்து உதவி நிதியாக ரூபா.4000 திரட்டப்பட்டது. சோ.ச.க.வின் தொழிலாளர் பாதை, கம்கறு மாவத்த பத்திரிகைகள் மட்டுமன்றி சோ.ச.க.வினால் வெளியிடப்பட்ட 3000க்கும் அதிகமான தமிழ். சிங்கள துண்டுப் பிரசுரங்களும் விநியோகிக்கப்பட்டன.

புலிச்சிகுளம் அகதிகள் முகாமில் தங்கியுள்ள ஒரு முஸ்லீம் பெண் இந்தக் கைது செய்தல்கள் தொடர்பாக தமது எதிர்ப்பை தெரிவிக்கையில் பின்வருமாறு குறிப்பிட்டார்:

"இந்த முகாமில் 60க்கும் அதிகமான குடும்பங்கள் [illegible] 1991ல் மன்னார், முல்லைத்தீவில் இருந்து வந்தவர்கள். நாம் இந்த யுத்தத்தினாலேயே இவற்றில் வாழ நேரிட்டுள்ளது. 1993ல் இராணுவமும் விடுதலைப் புலிகளும் நடாத்திய நாசங்களால் எமது வீடுவாசல்கள் கூட அழிந்து போயின. நாம் உயிர் தப்புவதற்காகவே இங்கே வந்தோம். விடுதலைப் புலிகள் தமிழ்த் தேசிய இனத்தின் ஜனநாயக உரிமைகளுக்காகப் போராடும் சோ.ச.க. அங்கத்தவர்களை கைது செய்ததன் மூலம் அந்த அமைப்பு தமிழ் மக்களின் ஜனநாயக உரிமைகளுக்காகப் போராடவில்லை என்பதைக் காட்டிக் கொண்டுள்ளது." என்றார்.

மற்றொரு சில்லறை வியாபாரி சோ.ச.க.வுக்கு ஆதரவு தெரிவித்ததோடு தாம் கொழும்பு வந்து லொட்சுகளில் தங்கிய வேளையில் பொலிசாரினால் கைது செய்யப்பட்டதாகக் கூறினார். இந்தத் துன்புறுத்தல்களுக்கு முடிவு கட்டுவது எப்படி என அவர் சோ.ச.க.பிரச்சாரத்தில் ஈடுபட்டிருந்தவர்களிடம் கேட்டார். இனவாத யுத்தத்தை சூழ இடம்பெறும் அரச ஒடுக்குமுறைகளை விளக்கவும் அனைத்துலகப் போராட்டத்தின் அவசியத்தை அவருக்கு புரிய வைக்கவும் சோ.ச.க. அங்கத்தவர்களுக்கு இதன்மூலம் வாய்ப்புக் கிடைத்தது.

உடப்பு தமிழ் மீனவ இளைஞர் ஒருவர் இந்தக் கைதுக்கு தமது எதிர்ப்பைத் தெரிவிக்கையில் பின்வருமாறு குறிப்பிட்டார்:

"சோ.ச.க.வன்னி மாவட்ட அங்கத்தவர்களை கைது செய்ய விடுதலைப் புலிகளுக்கு என்ன உரிமை இருக்கிறது ? சோசலிச சமத்துவக் கட்சி மட்டுமே யுத்தத்தை எதிர்த்தும் இப்பகுதியில் தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்படுவதை எதிர்த்தும் பேசுகின்றது. இராஜ்குமாரை விடுதலை செய்ய இடம்பெற்ற போராட்டம் எனக்கு நன்கு தெரிந்த விடயமாகும். அந்தப் போராட்டத்தின் மூலம் இராஜ்குமாரை விடுதலை செய்விக்க முடிந்தது. விடுதலைப் புலிகள் சோ.ச.க. அங்கத்தவர்களை விடுதலை செய்ய வேண்டும்." எனவும் அவர் கூறினார்.

உடப்பு நகரசபை தொழிலாளர்களின் எதிர்ப்பை வெளிப்படுத்தும் வகையில் பேசிய ஒரு தொழிலாளி பின்வருமாறு கூறினார்: "நாம் சோசலிச சமத்துவக் கட்சி நடாத்தும் நடவடிக்கைகளை நன்கறிவோம். சோ.ச.க. மட்டுமே தமிழ் சிங்கள தொழிலாளர்களின் பிரச்சினை பற்றி பேசுகின்றது. இராஜ்குமார் போன்ற தமிழ் இளைஞர்களை பொலிஸ் கைதில் இருந்து விடுதலை செய்வது சாத்தியமானது சோ.ச.க.வின் போராட்டத்தின் பெறுபேறாகவேயாகும். தமிழ் சிங்கள மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்க தமிழர்களான எமக்கு எதிராக அரசாங்கம் நடாத்தும் அடக்குமுறைகளை நிறுத்த மக்களை அணிதிரட்டக் கூடிய கட்சி இக்கட்சி மட்டுமே."

## சர்வதேச செஞ்சிலுவைச் சங்க விசாரணைக்கு விடுதலைப் புலிகள் இன்னமும் பதில் இல்லை

தமிழீழ விடுதலைப் புலிகளால் கைது செய்யப்பட்டுள்ள தமிழ் தேசிய இன சோசலிஸ்டுகளில் ஒருவரான சுதர்சன் இராஜேந்திரத்தின் தாயார் சிகாமணி இராஜேந்திரம் சர்வதேச செஞ்சிலுவைச் சங்க கொழும்பு தலைமை அலுவலகத்தில் தமது மகனையும் அவருடன் கூடவே கைது செய்யப்பட்ட சோ.ச.க. அங்கத்தவர்களையும் விடுதலை செய்யும்படி ஆகஸ்ட் 18ம் திகதி முறைப்பாடு செய்து கொண்டார்.

இந்த முறைப்பாடு சம்பந்தமாக சோ.ச.க.பொதுச் செயலாளர் விஜே டயஸ் ஆகஸ்ட் கடைப்பகுதியில் ஐ.சீ.ஆர்.சி. அதிகாரிகளிடம் விசாரணை செய்தார். இந்த விசாரணை செஞ்சிலுவைச் சங்க மல்லாவி அலுவலகத்தின் ஊடாக விடுதலைப் புலிகளுக்கு அறிவிக்கப்பட்ட போதிலும் அதற்கு எந்தவிதமான பதிலும் தமக்கு கிடைக்கவில்லை என அவர்கள் தெரிவித்தனர்.

இந்த விடயம் தொடர்பாக ஐ.சீ.ஆர்.சீ.விடுதலைப் புலிகளுடன் தொடர்பு கொண்டு பேசியுள்ள போதிலும் அதற்கு பதிலளிக்க விடுதலைப் புலிகளால் முடியாது போயுள்ளது. சோ.ச.க. அங்கத்தவர்களின் அரசியல் கருத்துக்களை நசுக்க இக்கைதுகள் இடம்பெற்றுள்ளதால் விடுதலைப் புலிகள் தலைமையினால் தமது நடவடிக்கையை நியாயப்படுத்த முடியாது போயுள்ளது என்பதை இது ஊர்ஜிதம் செய்துள்ளது.

## சோ.ச.க.அங்கத்தவர்களின் பேரில் அம்னாஸ்டி இன்டர்நஷனல் தலையீடு

அம்னாஸ்டி இன்டர்நஷனலல் அமைப்பு தமிழீழ விடுதலைப் புலிகளால் கைது செய்து தடுத்துவைக்கப்பட்டுள்ள சோசலிச சமத்துவக் கட்சி அங்கத்தவர்களின் சார்பில் "அவசர செயற்பாட்டுக்கான வேண்டுகோள்" ஒன்றை விடுத்துள்ளது.

'சித்திரவதை பற்றிய அச்சம்' எனப் பெயரிட்டுள்ள இந்த வேண்டுகோள் லண்டனில் உள்ள அம்னாஸ்டி இன்டர்நஷனல் அமைப்பின் ஆய்வு தலைமையகத்தால் செப்டம்பர் 11ம் திகதி விடுக்கப்பட்டுள்ளது.

தமிழ் பிரிவினை இயக்கத்தினால் இடம்பெறும அடக்குமுறை இயக்கத்தைப் பற்றி விபரிக்கும் இந்த வேண்டுகோள் பிராந்தியத்தில் உள்ள ஏனைய சோ.ச.க. அங்கத்தவர்களின் பாதுகாப்பையிட்டும் அச்சம் தெரிவித்துள்ளது. அவர்கள் தமிழ் தேசிய இனத்தினராக இருப்பதால் சோ.ச.க. அங்கத்தவர்கள் விடுதலைப் புலிகளின் துன்புறுத்தலுக்கு உள்ளாகும் சாத்தியம் இருந்து கொண்டுள்ளதையிட்டு அம்னாஸ்டி இன்டர்நஷனஸ் சுட்டிக்காட்டியுள்ளது.

பாதுகாப்பு படைகளின் அங்கத்தவர்கள், சிங்கள மீனவர்கள் உட்பட விடுதலைப் புலிகளின் சிறைக் கைதியாக இருந்த சிறிய எண்ணிக்கையினரை மீட்க செஞ்சிலுவைச் சங்கத்தின் அனைத்துலகக் குழு வெற்றி கண்டுள்ளபோதிலும் அரசியல் காரணங்களுக்காக கைது செய்யப்பட்டு தடுத்து வைககப்பட்டுள்ள தமிழ் சிறைக்கைதிகளை சந்திக்க அதற்கு வாய்ப்பு கிடைக்கவில்லை எனவும் அது குறிப்பிட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*கைது செய்து தடுத்து வைக்கப்பட்டுள்ள*

# தோட்டத் தொழிலாளர்கள் மீது மிருகத்தனமான சித்திரவதை

**சோ.ச.க.சட்டத்தரணி**

கண்டி போகாம்பரை சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள சோசலிச சமத்துவக் கட்சியின் ஆதரவாளர் சுப்பு உதயகுமார் உட்பட ஆறு அரசியல் கைதிகளின் பேரில் சட்ட நடவடிக்கைகளை ஒழுங்கு செய்வது ஆரம்பமாகியுள்ளது. செப்டம்பர் 28ம் திகதி சட்டத்தரணி கே.எஸ்.இரத்தினவேல் கைதிகளின் நிலைமைகளை ஆராய்வதற்காக சிறைச்சாலை சென்றிருந்தார்.

கைதிகளின் உறவினர்கள் கூட அவர்களை பார்வையிடுவது தடைசெய்யப்பட்டுள்ள ஒரு நிலைமையில் அவர்களை தடுத்து வைப்பதை எதிர்த்தும் விடுதலை செய்யும்படி கோரியும் ஆட்கொணர்வு மனு தாக்கல் செய்யப்பட உள்ளது. இந்தச் சட்ட நடவடிக்கை தடுத்து வைக்கப்பட்டுள்ள தோட்டப்புற இளைஞர்களை விடுதலை செய்யும் போராட்ட இயக்கத்தின் ஒரு பாகமாகும்.

கைது செய்யப்பட்டவர்களின் தகவல்களில் இருந்து அவர்கள் நானாவிதமான சித்திரவதைகளுக்கு உள்ளாகி வருகின்றனர். கைதிகளின் கால் பெருவிரல்களில் சீலைத் துண்டுகளால் கட்டி அவர்களை தலைகீழாகத் தொங்கவிட்டு தாக்குவது தெரிய வந்துள்ளது. இந்தச் சித்திரவதைகள் இருட்டறைகளில் பூட்டி வைத்தே இடம்பெற்றுள்ளன. இதனால் இருட்டைக் கண்டதும் பயந்து கிடுநடுங்கும் அளவுக்கு ஒரு சிறைக் கைதி உளவியல் ரீதியில் பாதிக்கப்பட்டுள்ளார்.பொலிசார் இந்தக் கைதிகளை சித்திரவதைகளுக்கு உள்ளாக்கி தமக்கு வேண்டிய பாணியிலான ஒப்புதல் வாக்குமூலங்களில் கையொப்பம் இட நெருக்கியதாகத் தெரிகின்றது.

இந்த இளைஞர்கள் அட்டன் சனொன் தோட்ட பக்டரிக்கு குண்டு வைத்தனர் என்ற பொய்க் குற்றச்சாட்டின் மீது கைது செய்யப்பட்டவர்கள் ஆவர். கண்டி போகாம்பரைச் சிறையில் தடுத்துவைக்கப்பட்டுள்ளவர்களின் பெயர் வருமாறு :

எ.லோகேஸ்வரன், எஸ் .பெனடிக்ட், சுப்பு உதயகுமார், ஜீ .சரவணகுமார், பீ.சந்திரன், எஸ்.லோகநாதன்.

## சோசலிச சமத்துவக் கட்சி அங்கத்தவர்கள் ....

1ம் பக்கத் தொடர்ச்சி

நின்றுவந்துள்ள சோசலிச சமத்துவக் கட்சியின் அங்கத்தவர்கள் விடுதலைப் புலிகளினால் ஒடுக்குமுறைக்கு உள்ளாகியுள்ள இந்த கவலை தரும் சம்பவம், விரைவானதும் நீதியானதுமான ஒரு முடிவுக்கு இட்டுச் செல்லப்பட வேண்டும்" எனக் கூறினார்.

இந்தச் சம்பவத்தின் கவலைக்குரிய சம்பவம் என்னவென்றால் தாம் சோசலிச சமத்துவக் கட்சி அங்கத்தவர்களை தடுத்து வைத்திருந்ததை விடுதலைப் புலிகள் பகிரங்கமாக ஒப்புக் கொள்ளாததேயாகும். விடுதலைப் புலிகள் அந்த விதத்தில் மௌனம் சாதித்தது இலங்கையின் சோசலிச சமத்துவக் கட்சியின் சகோதர கட்சிகளான நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் எனைய கட்சிகள் மட்டுமன்றி சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம், உலகம் புராவும் உள்ள தொழிலாளர், மனித உரிமைகள் அமைப்புக்கள், ஜனநாயக உரிமைகளையிட்டு அக்கறை கொண்ட நபர்கள் விடுதலைப் புலிகளுக்கு அனுப்பிய ஆட்சேப கடிதங்கள், விசாரணைகளுக்கும் மத்தியிலாகும். விடுதலைப் புலிகளின் அந்த அசட்டை சோ.ச.க.வுக்கு எதிரான அதன் ஒடுக்குமுறை நடவடிக்கைகளும் வடக்கில் இருந்துவரும் யுத்த நிலைமைகளுக்கும் மத்தியில் கிளிநொச்சியில் இருந்து தகவல்களைப் பெறுவதை பெரிதும் கஷ்டமான ஒரு பணியாக்கியது.

சம்பந்தனும் நகுலேஸ்வரனும் ஜூலை 26ம் திகதி மாலை சுவரொட்டியை ஒட்டிக் கொண்டிருக்கையில் கைது செய்யப்பட்டதோடு சுதர்சன் ஆகஸ்ட் 2ம் திகதி அவரது வீட்டில் வைத்து கைது செய்யப்பட்டார். பின்னர் ஆகஸ்ட் 31ம் திகதி இராஜரத்தினம் இராஜவேல் கைது செய்யப்பட்டார்.

சோ.ச.க..அங்கத்தவர்கள் விடுதலைப் புலிகளால் தடுப்புக்காவலில் இருந்து விடுதலை செய்யப்பட்டுள்ளதாகக் கிடைத்த அறிக்கை சோ.ச.க.வும் நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவும் அவ்வாறே அவர்களை விடுதலை செய்ய நாம் முன்னெடுத்த அனைத்துலக பிரச்சார இயக்கத்துக்கு ஆதரவு வழங்கிய உலகம் பூராவும் உள்ள தொழிலாளர்கள், மனித உரிமைகள் அமைப்புக்கள், ஜனநாயக உரிமைகளைக் கௌரவிக்கும் சகலருக்கும் மகிழ்ச்சி தருவதாகும். எமது தோழர்களை விடுதலைப் புலிகள் விடுதலை செய்ய இலங்கையினுள்ளும் அனைத்துலகிலும் நாம் நடாத்திய பிரச்சார இயக்கத்துக்கு பரந்த ஆதரவைத் திரட்டிக் கொள்ள முடிந்தது. மனித உரிமைகள் அமைப்புக்கள், தொழிற்சங்கங்கள், அரசியல் ரீதியில் நனவானவர்களும் ஜனநாயக உரிமைகளையிட்டு அக்கறை கொண்டவர்களுமான நூற்றுக் கணக்கானவர்கள் சோ.ச.க..அங்கத்தவர்கள் கைது செய்யப்பட்டதற்கு எதிர்பபு தெரிவித்ததோடு அவர்களை உடன் விடுதலை செய்யும்படி கோரி அறிக்கைகள் வெளியிட்டனர். இந்த அமைப்புக்கள், தனிநபர்களிடையே அம்னாஸ்டி இன்டர்நஷனல், மனித உரிமைகள் கண்காணிப்பு நிலையம், தொழிலாளர்களை ஆயிரக்கணக்கில் பிரதிநிதித்துவம் செய்யும் பிரித்தானிய, அவுஸ்திரேலிய தொழிற்சங்க பேராளர்கள், தலைவர்கள், பிரித்தானிய தொழிற் கட்சி எம்.பீ.க்கள் அத்தோடு இனங்களுக்கிடையே நீதிக்கும் சமத்துவத்துக்குமான இயக்கம்(மேர்ஜ்) சமூக விஞ்ஞானிகள் சங்கம், பல்வேறுபட்ட தொழிற்சங்கங்கள், பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், பிரசித்திபெற்ற கலைஞர்கள் அடங்குவர்.

அத்தோடு சோ.ச.க..அங்கத்தவர்களை விடுதலை செய்யுமபடி விடுதலைப் புலிகளைக் கோரும் பெட்டிசத்தில் ஆயிரக்கணக்கான மக்கள் கையெழுத்திட்டுள்ளனர். இந்தப் பிரச்சாரத்தின் ஒரு பாகமாக இலங்கையில் சோ.ச.க. கூட்டங்கள் மறியல்களை கொழும்பு, களுத்துறை, நீர்கொழும்பு, உடப்பு, கண்டி , பண்டாரவளை, கேகாலை, அம்பலாங்கொடை மொரட்டுவை, கம்பஹா, அட்டன் முதலிய நகரங்களிலும் நடாத்தியது. இந்தப் பிரச்சார இயக்கத்தின் பேரில் தொடுக்கப்பட்ட ரூபா.50000 உதவிநிதிக்கு ரூபா.40000 திரண்டுள்ளது. பிரச்சார இயக்கத்துக்கு உதவி வழங்கிய சகலருக்கும் எமது நன்றி உரித்தாகட்டும்.

எவ்வாறெனினும் எமது தோழர்கள் நால்வரும் நிச்சயமாக விடுதலையானார்கள் என்பதையும் விடுதலைப் புலிகளின் தடுப்புக் காவலில் எந்த ஒரு சோ.ச.க..அங்கத்தவரும் இல்லை என்பதையும் நிச்சயப்படுத்துவது இன்னமும் இடம்பெற வேண்டியுள்ளது. இந்நிலையில் சோ.ச.க.வும் நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவும் உலக சோசலிச வெப் நிலையமும் சோசலிச சமத்துவக் கட்சிக்கு எதிரான அடக்குமுறையை நிறுத்துமாறும் சோ.ச.க..அங்கத்தவர்களை விடுதலை செய்ததை பகிரங்கமாக ஊர்ஜிதம் செய்யுமாறும் அந்த அங்கத்தவர்களுடன் தொடர்புகள் ஏற்படுத்திக் கொள்வதற்கு சோ.ச.க.பிரதிநிதிக்கு வாய்ப்பு அளிக்குமாறும் விடுதலைப் புலிகளை நெருக்கும் பிரச்சார இயக்கத்தை தொடர்ந்து முன்னெடுக்கும். எமது இந்த பிரச்சார இயக்கத்துக்கு உங்களின் ஆதரவை வேண்டுகின்றோம்.

## தொழிலாளர் அமைப்புக்கள், கலைஞர்கள், புத்திஜீவிகள் ஆதரவு ....

9ம் பக்கத் தொடர்ச்சி

**கல்விப் பீடத் தலைவர் கலாநிதி.டபிள்யூ.ஏ.குலரத்ன:**

"நான் சோசலிச சமத்துவக் கட்சி உறுப்பினர் மூவரைத் தடுத்து வைத்துள்ளதை வன்மையாக எதிர்ப்பதோடு அவர்களை உடனடியாக விடுதலை செய்யும்படி வேண்டுகின்றேன்."

**சமூகவியல் பீட கலாநிதி சசங்க பெரேரா:**

"தமிழ் மக்களின் உரிமைகளின் பேரில் கணிசமான அளவு காலமாக போராடிவரும் சோசலிச சமத்துவக் கட்சியின் மூன்று அங்கத்தவர்களை உங்கள் அமைப்பு தடுத்து வைத்திருப்பதற்கு எதிரான எனது பலத்த எதிர்ப்பைத் தெரிவிக்க இதை எழுதுகின்றேன். இந்நபர்களின் மனித உரிமைகள் உங்களால் மீறப்படுவதால் அதிர்ச்சிக்குள்ளான ஒரு பிரஜை என்ற வகையில் நீங்கள் அவர்களை உடனடியாக விடுதலை செய்ய வேண்டும் என வேண்டுகின்றேன்."

**சமூகவியல் பீட விரிவுரையாளரும் மாணவ ஆலோசகருமான சந்திரசிரி கிரிஅல்ல:**

"சோசலிச சமத்துவக் கட்சியின் தமிழ் தேசிய இன அங்கத்தவர்கள் மூவர் உங்கள் அமைப்பினால் கைது செய்யப்பட்டுள்ள செய்தி கேட்டு நான் அதிர்ச்சி அடைந்தேன். நான் அறிந்ததன் படி அவர்களின் இலக்கு தமிழ் மக்களின் அபிலாசைகளுடன் மோதிக் கொள்வது அல்ல என நான் நினைக்கின்றேன். ஆதலால் நீங்கள் அவர்களை முடிந்தமட்டும் விரைவாக விடுதலை செய்வதைக் காண நான் விரும்புகின்றேன்."

**வரலாற்று, அரசியல் விஞ்ஞான பீட விரிவுரையாளர் கீர்த்தி ஆரியதாச:**

"ஜனநாயகம், சமூக சமத்துவம், உலக சோசலிச புரட்சிக்காகப் போராடும் முற்போக்கு அரசியல் கட்சியான சோசலிச சமத்துவக் கட்சியின் மூன்று அங்கத்தவர்களும் விடுதலைப் புலிகளால் கைது செய்யப்பட்டதையிட்டு நான் கவலை கொண்டுள்ளேன். முடிந்த மட்டும் விரைவில் அக்கட்சியின் மூன்று அங்கத்தவர்களையும் விடுதலை செய்ய வேண்டும் என நான் வேண்டுகின்றேன்.

**சிங்கள பீடத்தின் விரிவுரையாளர்: திலக் வீரசேகர :**

"சோசலிச சமத்துவக் கட்சி தமிழ் தேசிய இனத்தின் உரிமைகளுக்காக நின்றுவரும் ஒரு அமைப்பாதலால் உங்கள் அமைப்பினால் கைது செய்யப்பட்ட அக்கட்சியின் அங்கத்தவர் மூவரையும் உடனடியாக விடுதலை செய்யும்படி வேண்டுகின்றேன்."

**சிங்கள பீடத்தின் உதவி விரிவுரையாளர் டபிள்யூ.எம்.எஸ்.பீ.பெரேரா:**

"சோசலிச சமத்துவக் கட்சி தமிழ் மக்களின் உரிமைகளின் சார்பில் நின்றுவரும் ஒரு அமைப்பாகும். அக்கட்சியின் மூன்று அங்கத்தவர்களையும் விடுதலைப் புலிகள் கைது செய்துள்ளதால் அம்மூவரையும் விடுதலை செய்யும்படி இதன்மூலம் வேண்டுகின்றேன்."

**சிங்கள பீடத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் சரத் விஜேசூரிய:**

"உங்களது அமைப்பினால் கைது செய்யப்பட்டுள்ள சோசலிச சமத்துவக் கட்சியின் அங்கத்தவர்களை உடனடியாக விடுதலை செய்யும்படி வேண்டுகின்றேன்."

### அரசியல் கட்சிகளதும் மற்றும் அமைப்புக்களதும் வேண்டுகோள்

**லங்கா சமசமாஜக் கட்சி வெளியிட்டுள்ள பத்திரிகை அறிக்கை:**

"சோசலிச சமத்துவக் கட்சி இனவாதமற்ற, வகுப்புவாதமற்ற ஒரு அமைப்பு என்பதை லங்கா சமசமாஜக் கட்சி அறியும். தமிழ் மக்களின் கருத்துக்களுக்கு முரண்பட்டதாக நினைக்கக் கூடிய எந்த ஒரு நடவடிக்கையிலும் இம்மூவரும் ஈடுபட்டதாகக் கூற முடியாது. ல.ச.ச.க. இக்கைத்தலையும் தடுத்துவைப்பையும் கண்டிப்பதோடு இவர்களை விடுதலை செய்யும்படி வேண்டுகின்றது."

**நவசமசமாஜக் கட்சி**

"சோசலிச சமத்துவக் கட்சி அங்கத்தவர்களை விடுதலை செய்யும்படி கேட்டு நவசமசமாஜக் கட்சியினால் விடுதலைப் புலிகளின் லண்டன் அலுவலகத்துக்கு அனுப்பப்பட்ட கடிதத்தில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது : " உங்களது அமைப்பு அக்கட்சியின் அங்கத்தவர்கள் பலரைக் கைது செய்து அவர்களை விடுதலை செய்ய மறுத்துள்ளதாக சோசலிச சமத்துவக் கட்சி எமக்கு அறிவித்துள்ளது. அவர்கள் தமிழ் மக்ளின் விடுதலைப் போராட்டத்துக்கு எதிராக எதும் தவறு செய்துள்ளதாக நம்புவதற்கு எதுவித காரணமும் இல்லாததால் அவர்களை உடனடியாக விடுதலை செய்யும்படி நாம் வேண்டுகின்றோம்."

**ஐக்கிய சோசலிசக் கட்சி**

ஐக்கிய சோசலிசக் கட்சி விடுதலைப் புலிகளுக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் "சிங்கள இனவாத ஆட்சியாளர்களுக்கு எதிராக கொள்கைப்பிடிப்பான நிலைப்பாட்டில் நின்று தொழிற்படும் சோசலிச சமத்துவக் கட்சி அங்கத்தவர்களுக்கு வடக்கு பிராந்தியத்தில் ஜனநாயக ரீதியில் அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபட உள்ள உரிமையை உங்கள் அமைப்பு மீறியுள்ளதை இந்நடவடிக்கை காட்டுகின்றது. .. ஆதலால் உடனடியாக சோசலிச சமத்துவக் கட்சி அங்கத்தவர்களான திருஞானசம்பந்தன், நகுலேஸ்வரன், சுதர்சன் ஆகியவர்களை விடுதலை செய்து ஜனநாயக உரிமைகளை கௌரவிக்கும்படி உங்கள் அமைப்பிடம் வேண்டுகின்றோம்."

**இனங்களுக்கிடையே நீதிக்கும் சமத்துவத்துக்குமான இயக்கம் (மேர்ஜ்) வெளியிட்டுள்ள பத்திரிகை அறிக்கை:**

"சோசலிச சமத்துவக் கட்சி தமிழ் மக்களின் உரிமைகள் தொடர்பான உறுதியான நிலைப்பாடு தொடர்பாக புகழ்பெற்றதோடு இப்போது இடம்பெற்றுவரும் இனவாத யுத்தத்தையும் வன்மையாகக் கண்டனம் செய்கின்றது.

அடக்குமுறைக்கு உள்ளாகியுள்ள இந்தத் தனிநபர்களின் உயிர்ப்பாதுகாப்பையும் அவர்கள் மிலேச்ச துன்புறுத்தல்களுக்கு உள்ளாகமாட்டார்கள் என்பதையும் உறுதிசெய்யும்படி நாம் இந்த காணாமல் போயுள்ளமைக்கு பொறுப்பானவர்களிடம் வேண்டுகின்றோம்.

மனித இனத்தின் அடிப்படைக் கொள்கைகளதும் பொதுச் சிந்தனை விதிகளதும் பாதுகாப்புக் கிட்ட வேண்டிய இந்த தமிழ் சிவில் பிரசைகளை உடன் விடுதலை செய்யும்படி நாம் வேண்டுகின்றோம்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### ஜேர்மன் பொதுத் தேர்தல்:

# பொன்னில் ஆட்சி அதிகாரத்தில் மாற்றம்

ஜேர்மனியில் நடைபெற்ற சமஷ்டி தேர்தலில் அதிபர் ஹெல்மட் கோலும் அவரின் தலைமையிலான கிறிஸ்தவ ஜனநாயகக் கட்சியும் படுதோல்வி அடைந்துள்ளது. 16 ஆண்டுகள் எதிர்க்கட்சியில் இருந்து வந்த ஸ்குரூடரின் சமூக ஜனநாயகக் கட்சி (SDP) அதிகாரத்தைக் கைப்பற்றிக் கொண்டுள்ளது.

கிறிஸ்தவ ஜனநாயகக் கட்சியும் அதன் சகோதர கட்சியான கிறிஸ்தவ சமூக யூனியன் கட்சியும் 35 சதவீத வாக்குக்களை மட்டுமே பெற்றுக் கொண்டுள்ளன. இந்தக் கட்சிகளின் வரலாற்றில் இது ஒரு படுமோசமான பெறுபேறாகும். 1953ல் இருந்து இவை 40வீதத்துக்கும் அதிகமான வாக்குக்களைப் பெற்று வந்துள்ளதோடு 50 வீதத்துக்கும் அதிகமான வாக்குக்களைப் பெற்ற சந்தர்ப்பங்களும் உண்டு.

சமூக ஜனநாயகக் கட்சிக்கு கிடைத்துள்ள 41 வீத வாக்குக்கள் 1970பதுகளில் இக்கட்சி வில்லி பிராண்ட், ஹெல்மட் ஸ்கிமிட்டின் தலைமையில் பெற்றுக் கொண்ட ஆதரவை எட்டிக் கொண்டுள்ளது. 1972ம் ஆண்டுக்குப் பின்னர் சமூக ஜனநாயகக் கட்சி இப்போது பாராளுமன்றத்தில் பெரும் கட்சியாகியுள்ளது. கிறிஸ்தவ ஜனநாயகக் கட்சிகும் கிறிஸ்தவ சமூக யூனியனுக்கும் எதிரான அதனது வாக்குக்கள் ஒருபோதும் இந்த அளவுக்கு முன்னணியில் இருந்ததில்லை.

ஜேர்மனியில் ஒரு வாக்களருக்கு இரண்டு வாக்குக்கள். அதில் ஒன்று பாராளுமன்ற தொகுதிக்கு தேர்ந்தெடுக்கப்படும் நேரடி வேட்பாளருக்கு உரியது. மற்றையது கட்சி பட்டியலுக்கு உரியது. தேர்தல் பிரித்தானியாவில் இடம்பெறும் வகையில் நடைபெறுமானால் சமூக ஜனநாயகக் கட்சி இன்னும் பெருமளவிலான வாக்குக்களை வெற்றி கொண்டிருக்கும். கிறிஸ்தவ ஜனநாயகக் கட்சி அதன் தொகுதிகளில் அரைவாசியை ச.ஜ.க.விடம் இழந்துள்ளது.

இந்த ஜேர்மன் பாராளுமன்றத்தில் கிறீன்ஸ் கட்சி 7 வீதத்தையும் சுதந்திர ஜனநாயகவாதிகள் 6 வீதத்தையும் ஜனநாயக சோசலிச கட்சி 5 வீதத்தையும் கொண்டுள்ளன. இந்த ஜனநாயக சோசலிசக் கட்சி முன்னர் கிழக்கு ஜேர்மனியில் ஆட்சியில் இருந்த ஸ்டாலினிச கட்சியின் ஒரு வாரிசாகும். இந்த ஜனநாயக சோசலிசக் கட்சி பாராளுமன்றத்தில் பிரதிநிதித்துவத்தைக் கொண்டிருக்கும் அளவுக்கு வாக்குக்களைப் பெறுமா என்பதில் சந்தேகம் நிலவியது. அவர்களின் வாக்குக்கள் சிறிதளவு அதிகரித்தது. அதனால் அவர்கள் 5 வீத 'தடையை' முதல் தடவையாகத் தாண்டியுள்ளார்கள். கடந்த பொதுத் தேர்தலில் போன்று கிழக்கு ஜேர்மனியில் அவர்கள் நான்கு நேரடி பிரதிநிதித்துவ ஆணையையும் வெற்றி கொண்டுள்ளனர்.

அதிதீவிர வலதுசாரி கட்சிகள் தேர்தலில் வீழ்ச்சி கண்டுள்ளன. சக்சனி, அன்கார்ட் மாநில சட்ட சபையில் 13 வீத வாக்குக்களை பெற்றுக் கொண்டிருந்த ஜேர்மன் மக்கள் யூனியன்(  ) வாக்குக்கள் 3 வீதத்துக்கு வீழ்ச்சி கண்டுள்ளது. ஜேர்மன் மக்கள் யூனியனுக்கும் தேசிய ஜனநாயகக் கட்சி குடியரசுக் கட்சி போன்ற நவ பாசிசக் கட்சிகளுக்குமான மொத்த தேசிய வாக்குக்கள் 3 வீதத்தையே எட்டிப் பிடித்தன.

இன்னும் நான்கு வாரங்களில் இடம்பெறவுள்ள புதிய பாராளுமன்றக் கூட்டத்தில் ஸ்கூருடர் புதிய சமஷ்டி அதிபராக தேர்ந்தெடுக்கப்படுவார். அவருக்கு அறுதி பெரும்பான்மை இல்லாது போயுள்ளதால் அவர் முதலில் ஒரு கூட்டரசாங்கத்தை அமைக்கும் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டாக வேண்டும். முதல் தடவையாக கிறீன்ஸ் கட்சி புதிய "சிவப்பு பச்சை" சமஷ்டி அரசாங்கத்தில் ஒரு அமைச்சரவை பிரதிநிதித்துவத்தை ஈட்டிக்கொள்ளும் சாத்தியம் இருந்து கொண்டுள்ளது. இதனால் 21 ஆசனங்களின் பெரும்பான்மையை பெற்றுக் கொள்ள முடியும். அத்தோடு ஜனநாயக சோசலிச கட்சியின்(  ) ஆதரவையும் திரட்டிக் கொள்ளும் வாய்ப்பு இருந்து கொண்டுள்ளது.

எண்ணளவில் பார்க்கும்போது சமூக ஜனநாயகக் கட்சியினதும் தாராண்மை வாதிகளான சுதந்திர ஜனநாயகவாதிகளதும் கூட்டரசாங்கத்துக்கான ஒரு சாத்தியமும் இருந்து கொண்டுள்ளது. அவ்வாறே சமூக ஜனநாயகக் கட்சியினதும் கிறிஸ்தவ ஜனநாயக யூனியனதும் ஒரு மாபெரும் கூட்டரசாங்கத்துக்கான சாத்தியமும் கூட இருந்து கொண்டுள்ளது. ஸ்குரூடர் தாம் அத்தகைய ஒரு சாத்தியத்துக்கு எதிவிதத்திலும் எதிரானவன் அல்ல என்பதை வெளிப்படுத்தியுள்ளார். எவ்வாறெனினும் தேர்தலின் பின்னர் கிறிஸ்தவ ஜனநாயக யூனியனதும் கிறிஸ்தவ சமூக யூனியனதும் சுதந்திர ஜனநாயகவாதிகளதும் தலைவர்கள் இதற்கான சாத்தியத்தை நிராகரித்துள்ளதோடு சமூக ஜனநாயகக் கட்சி, கிறீன்ஸ் கட்சியுடன் ஒரு ஆட்சியை அமைக்க வேண்டும் என வலியுறுத்திக் கொண்டுள்ளனர். தேர்தலில் எற்பட்ட படுதோல்வியின் பின்னர் தாம் அத்தகைய மாபெரும் கூட்டரசாங்கத்தை அமைப்பதில் பங்குகொள்வது தமது சொந்தக் கட்சிகள் மேலும் சிதறுண்டு போகக் காரணமாகிவிடலாம் என அஞ்சுகின்றனர்.

எவ்வாறெனினும் இந்தத் தேர்தல் முடிவுகள் பாராளுமன்ற சட்டசபை ஆட்சிக் காலத்தில் மற்றொரு தேர்தலுக்கு அழைப்பு விடுக்காமல் அரசாங்கச் சேர்க்கையை மாற்றிக் கொள்ளும் சாத்தியத்துக்கு இடமளிக்கின்றது. உண்மையில் ஹெல்மட் கோல் தான் ஒரு தேசிய தேர்தலின் பெறுபேறுகளினால் அதிகாரத்தில் இருந்து தள்ளப்பட்ட முதலாவது ஜேர்மன் அதிபராவார். மற்றும் வேளையில் கூட்டரசாங்க பங்காளிகள் தமது ஆதரவை விலக்கிக் கொண்டதன் பெறுபேறாகவே எனையோர் அதிகாரத்தை இழக்க நேரிட்டது.

## தோல்விக்கு காரணம்

இந்த ஜேர்மன் பொதுத் தேர்தல் ஜேர்மன் சமஷ்டி குடியரசின் வரலாற்றில் ஒரு திருப்புமுனையை பிரதிநிதித்துவம் செய்கின்றது. 16 வருடகால ஆட்சியின் பின்னர் ஹெல்மட் கோல் தேர்தலில் தோல்வி கண்டமைக்கு சமூக சேவை உதவி வெட்டுக்கள், பரந்த அளவிலான வேலையின்மை, வாழ்க்கைத் தரத்தின் வீழ்ச்சி ஆகியன சனத்தொகையின் பரந்த தட்டினரைப் பாதித்ததே காரணம். பழைய ஜேர்மன் ஜனநாயகக் குடியரசின்( கிழக்கு ஜேர்மனி)பயங்கரமான சமூக நிலைமைகள் "ஐக்கியத்தின் அதிபர்" ஹெல்மட் கோலை வெளியே தள்ளியுள்ளன.

சமூக ஜனநாயகக் கட்சி மக்களில் பெரும்பான்மையினரால் முன்னைய அரசாங்கத்துக்குப் பதிலான ஒரே சாத்தியமான பதிலீடாக கணக்கெடுக்கப்பட்டதாலேயே ஆட்சிக்கு வந்துள்ளது. அத்தோடு சமூக நீதிக்கு கிறிஸ்தவ ஜனநாயகக் கட்சியைக் காட்டிலும் பெரிதும் பலம் வாய்ந்ததாக இது நோக்கப்பட்டுள்ளதும் ஒரு வரலாற்றுக் காரணமாகும். பிரித்தானியாவில் டொனி பிளேயரும் அமெரிக்காவில் பில் கிளின்டனும் நடாத்திய தேர்தல் பிரச்சாரப் பாணியில் தேர்தல் பிரச்சாரத்தை முன்னெடுத்த போதிலும் இடம் பெற்றுள்ளது.

சமூகப் பிரச்சினைகள் பல வாக்காளர்களில் ஒரு பெரும் பாத்திரத்தை வகித்ததனாலேயே கிழக்கு ஜேர்மனியின் மிகவும் ஒடுக்கப்படும் தட்டினரின் ஒரு பிரதிநிதியாக காட்டிக் கொண்டதாலேயே ஜனநாயக சோசலிசக் கட்சி(  ) தனது வாக்குக்களின் எண்ணிக்கையைக் கூட்டிக் கொள்ள முடிந்துள்ளது. மறுபுறத்தில் சிறிய தொழில்களின் நண்பராகக் காட்டிக் கொண்ட கிறீன்ஸ் வாக்குக்களை இழந்துள்ளது.

ஒரு தெளிவான தேர்தல் முடிவுகளுக்கிடையேயும் ஜேர்மனி ஒரு கடுமையான சமூக, அரசியல் கிளர்ச்சி காலப்பகுதிக்கு முகம் கொடுக்கின்றது. ஒரு ஸ்குரூடர் அரசாங்கம் தொழிலாளர் அதில் வைத்துள்ள எந்த ஒரு எதிர்பார்ப்பினையும் இட்டுநிரப்ப முடியாது. அதனது வேலைத்திட்டத்தை ஹெல்மட் கோல் அரசாங்கத்தின் வேலைத்திட்டத்தில் இருந்து வேறுபடுத்த முடியாது. உண்மையில் அது "பொருளாதார நவீனமயமாக்க" கொள்கையை உக்கிரமாகவும் தொடர்ந்தும் கடைப்பிடிக்கும். சமூக சேவை செலவின வெட்டுக்கள் சம்பள வெட்டுக்களைக் கடைப்பிடிக்கும். செல்வந்தர்களுக்கு குறைந்த அளவிலான வரி விதிப்புடன் இணைந்த விதத்தில் தொழில் நிலைமைகள் வீழ்ச்சி அடையும்.

இந்தத் தேர்தலுக்கு முன்னதாக ஆளும் கிறிஸ்தவ ஜனநாயகக் கட்சியும் கிறிஸ்தவ சமூக யூனியன் கட்சியும் அரசியல் ரீதியில் ஸ்தம்பித்துப் போயின. இக்கட்சிகளின் அங்கத்தவர்களிடையேயான மோதுதல்களின் காரணமாக இதன் கொள்கைகளுக்கு எதிராக கிளம்பிய எதிர்ப்பை இதனால் சமாளிக்க முடியாது போய்விட்டது. பாராளுமன்றத்தின் மேற்சபையில் சமூக ஜனநாயகக் கட்சி கொண்டிருந்த பெரும்பான்மைப் பலத்தில் இது தங்கி இருந்தது. செலவின வெட்டுக்களையும் ஜனநாயக உரிமைகள் மீதான தாக்குதல்களையும் இதன் ஆதரவுடனேயே அமுல் செய்தது.

சமூக ஜனநாயகக் கட்சி கிறீன்ஸ் கூட்டரசாங்கம் அத்தகைய ஒரு பிரச்சினையை எதிர்நோக்காது. எனெனில் அவை இரண்டு சபைகளிலும் பெரும்பான்மை பலத்தைக் கொண்டுள்ளன. ஸ்குரூடர் அரசாங்கத்தின் முதல் நடவடிக்கை ஒரு கோர்ப்பரேட் அமைப்பான "வேலைக்கான கூட்டு" ஒன்றை அமைப்பதேயாகும். இதில் தொழிற்சங்கங்கள், தொழில் அதிபர்கள், அரசாங்கம் என்பன இடம்பெறும்.

புதிய அரசாங்கத்தின் கொள்கையை தீர்மானம் செய்வதில் அனைத்துலக நிகழ்வுகள் முக்கிய பங்கு கொள்ளும். தமது தேர்தல் வாக்குறுதிகள் நிதிவல்லமையினால் நிர்ணயம் செய்யப்படுவதாக ஸ்குரூடர் கூறிவந்துள்ளார். சமூக ஜனநாயக் கட்சியும் கிறீன்சுகளும் வழங்கியுள்ள சமூக சீர்திருத்த வாக்குறுதிகள் விரைவில் அனைத்துலக பொருளாதார நெருக்கடிக்கு பலியாகும். வெளிநாட்டுக் கொள்கையை பொறுத்தமட்டில் இக்கட்சிகள் தமது முன்னோடிகளையே தொடர்ந்தும் கடைப்பிடிப்பதாக கூறியுள்ளன. கொசோவாவில் நேட்டோ தலையீட்டுக்கான தயாரிப்புக்கள் பெரிதும் பூர்த்தியாகிவிட்டன. இரண்டாம் உலக யுத்தத்தின் பின்னர் இடம்பெறும் ஜேர்மனியின் முதல் இராணுவ நடவடிக்கையாக இது விளங்கும்.

சோசலிச கொள்கைகளின் அடிப்படையில் இன்றைய சமூக, பொருளாதார நெருக்கடிக்கு தீர்வுகாண இத்தேர்தலில் போட்டியிட்ட ஒரே கட்சி ஜேர்மன் சோசலிச சமத்துவக் கட்சியே(  ). ஆறு மாநிலங்களில் அதற்கு 6273 வாக்குக்கள் கிடைத்துள்ளது. சக்சனியிலும் அன்கால்டிலும் அதற்கு 2395 வாக்குக்கள் கிடைத்தன. இந்த மாநிலம் பழைய ஜேர்மன் ஜனநாயகக் குடியரசின் கைத்தொழில் பிராந்தியம் என்பதும் இப்போது வேலையின்மை இங்கு உக்கிரம் கண்டுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது. சோசலிச சமத்துவக் கட்சிக்கு கிடைத்த வாக்குக்கள் எண்ணிக்கையில் சிறிதாக இருந்த போதிலும் அவை சோசலிச கொள்கையின் பேரில் நனவான முறையில் வழங்கப்பட்டவை.

# தோட்டத்துறையில் இராணுவ முகாம்கள்

5ம் பக்கத் தொடர்ச்சி

தடுத்துவைக்கப்பட்டனர். செப்டம்பர் 6ம் திகதியில் இருந்து இவர்கள் கண்டி போகாம்பரை சிறையில் தடுப்புக் காவலில் உள்ளனர். இரண்டு மாத கால விசாரணையின் பின்னரும் கூட இந்த இளைஞர்களை குற்றவாளிகளாக்கும் சாட்சியங்களை சோடிக்க பொலிசாரால் முடியாது போயுள்ளதை இதை எடுத்துக் காட்டுகின்றது.

எனினும் ஆகஸ்ட் 28ம் திகதி அட்டன் பொலிசாரால் கைது செய்யப்பட்ட இளைஞர்கள் வசிக்கும் சித்திரவத்தை தோட்டத்தில் (ஸ்ரத்டன்) நடந்த பாதுகாப்புக் குழுக் கூட்டத்தில் குண்டு வெடிப்புடன் தொடர்பான யாரோ இந்தத் தோட்டத்தில் இருந்திருக்க வேண்டும் எனவும் அவர்களை கண்டுபடிக்க முடியாது இருப்பதால் அட்டன் பகுதியில் இராணுவ முகாம் அமைப்பதைத் தவிர வேறெதுவும் செய்ய முடியாதிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. அரசாங்கம் தற்போது அட்டன் பகுதியில் இராணுவ முகாம்களை அமைக்கும் தயாரிப்புக்களில் ஈடுபட்டுள்ளதை இது அம்பலமாக்குகின்றது.

அரசாங்கமும் ஆளும் வர்க்கமும் கலக்கம் அடைந்துள்ளதற்கு வெறுமனே விடுதலைப் புலிகளின் ஊடுருவல் மிரட்டல் மட்டும் காரணம் அல்ல. வடக்கு கிழக்கு பிரிவினைவாத இயக்கத்தில் ஈடுபட்டுள்ள விடுதலைப் புலிகள் தோட்டத் துறைக்குள் ஊடுருவல் செய்ய முயலலாம். ஆனால் அரசாங்கமும் ஆளும் வர்க்கமும் தோட்டப்புறத்தில் வெடித்துக் கிளம்பும் நிலைமைகளையிட்டே பெரும் பீதி அடைந்துள்ளது.

இந்த ஆண்டு பெப்பிரவரியில் தோட்டத் தொழிலாளர் ஆறு இலட்சம் பேர் கலந்து கொண்ட வேலைநிறுத்தம் தொழிற்சங்கத் தலைமைகளால் காட்டிக் கொடுக்கப்பட்டதன் பின்னர் கூட மேலும் இரண்டு நாட்கள் நீடித்தது குறிப்பிடத்தக்கது. இது தமக்கோர் எச்சரிக்கை என ஆளும் வர்க்கம் கணித்துக் கொண்டுள்ளது. இதேசமயம் இலங்கைத் தொழிலாளர் காங்கிரசும் செல்லச்சாமியின் இலங்கைத் தேசிய காங்கிரசும், தோட்டத் தொழிற்சங்கக் கூட்டுக் குழு என்பவையும் வேலையற்ற தோட்ட இளைஞர்களிடையே வளர்ச்சி கண்டுவரும் தீவிரவாத நிலைமைகளையிட்டு ஜனாதிபதிக்குத் தனித்தனியாக அறிக்கைகள் சமர்ப்பித்துள்ளதாக வெகுஜனத் தொடர்புச் சாதனங்கள் தெரிவிக்கின்றன.

தொழிற்சங்க அதிகாரத்துவங்களின் ஆதரவுடன் பயங்கரவாதத் தாக்குதல் பற்றிய நச்சுப் பிரச்சாரங்களின் மூலம் அரசாங்கம் தோட்டப்புறத்தில் இராணுவ முகாம்களை தொடர்ச்சியாக அமைப்பதற்கான முயற்சிகளில் இறங்கியுள்ளது. இது இளைஞர்களை பயமுறுத்தி அடக்கி ஒடுக்குவதற்கேயாகும்.

இந்நிலைமையில் சென்னன் தோட்ட பக்டரிக்கு குண்டு வைத்த பொய்க் குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டுள்ள சோ.ச.க.ஆதரவாளர் சுப்பு உதயகுமார் உட்பட்ட எட்டு அரசியல் கைதிகளையும் விடுதலை செய்ய சோ.ச.க.வுடன் இணையுமாறு நாம் வேண்டுகின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாகிஸ்தான்

# இஸ்லாமியமயமாக்கத்தின் மூலம் ஷெரீப் அரசாங்கம் அடக்குமுறை ஆயுதத்தை தூக்க முயற்சி

பாகிஸ்தானில் நெருக்கடிக்குள் தள்ளப்பட்டுள்ள நவாஸ் ஷெரீப்பின் அரசாங்கம் ஷாரியா சட்டமுறையை நாட்டின் அதிஉயர்ந்த சட்டமாக்கும் மசோதாவை செப்டம்பர் 4ம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தது. இதை நடைமுறைக்கு விடுவதன் மூலம் ஆழமான பொருளாதார அரசியல் சமூக நெருக்கடியில் இருந்து ஆட்டம்கண்டு போன தனது ஆட்சியை காப்பாற்ற வாய்ப்பு கிடைக்கும் என ஷெரிப் அரசாங்கம் நினைக்கின்றது. பாகிஸ்தானின் அணுஆயுத பரிசோதனைகளைத் தொடர்ந்தும் உலக நாணயச் சந்தையின் நெருக்கடியினாலும் பாகிஸ்தான் மீது விதிக்கப்பட்ட தடைகளினால் ஆளும் வர்க்கத்தின் நெருக்கடி உக்கிரம் கண்டுள்ளது. முதலாளித்துவ எதிர்ப்பாளர்கள் மட்டுமன்றி ஷெரிப் அரசாங்கத்தின் அமைச்சரவை உறுப்பினர்கள், வெளிநாட்டு முதலீட்டாளர்களும் புதிய மசோதாவுக்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

ஆகஸ்ட் 28ம் திகதி பாராளுமன்ற கீழ்ச்சபையான தேச சபையில் உரையாற்றிய நவாஸ் ஷெரீப் இந்தப் புதிய சட்டமுறையின் இலக்கை தெளிவுபடுத்தினார். நாட்டின் முகாமைத்துவ நிலைமையையிட்டு தாம வெறுப்படைந்து போயுள்ளதாகக் கூறிய ஷெரீப் இந்திய அரசாங்கத்தின் அணுஆயுத பரிசோதனை பற்றியும் குறிப்பிட்டார். அத்தோடு உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் தனது அரசாங்கத்தைக் கவிழ்க்க சதி இருந்து வருவதாகவும் அவர் கூறியுள்ளார்.

1997 பெப்பிரவரியில் ஆட்சிக்கு வந்த ஷெரிப் அரசாங்கம் அதே ஆண்டு ஆகஸ்டில் தீவிரவாத தடைச்சட்டத்தை அமுலுக்கு கொணர்ந்தது. எதிர்ப்பாளர்களை அடக்குவதற்கான அடுத்த நடவடிக்கையாக கடந்த மேயில் அணுஆயுத பரிசோதனை நடவடிக்கையில் ஈடுபட்டது சமூகப் பிரச்சினைகளில் இருந்து பாகிஸ்தான் தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்களின் கவனத்தை திசை திருப்புவதற்காக இந்திய எதிரிக்கு எதிராக சோவினிசத்தை கட்டவிழ்த்துவிட அதைப் பயன்படுத்தியது. மே28ம் திகதி அணுவாயுத பரிசோதனை இடம்பெற்ற இரண்டு மணித்தியாலங்களுள் அரசாங்கம் அவசரகாலச் சட்டத்தை அமுலுக்குக் கொணர்ந்தது.

ஷெரீப்பின் இந்தப் புதிய இஸ்லாமியமயமாக்கம் காலம் சென்ற பாகிஸ்தான் இராணுவ சர்வாதிகாரி ஜெனரால் ஷியா ஹக்கின் அரசியல் அமைப்பு மாற்றத்தை முன்னெடுப்பதாகும். அரசியல் அமைப்பின் 2பீ பிரிவுக்கு பதிலாக 15வது திருத்தமாக சேர்க்கப்பட்டுள்ள சிபார்சு குரானையும் சுன்னாவையும் நாட்டின் முக்கிய சட்டமாக் அமுலுக்கு கொணரும். இதன் மூலம் அரசாங்கம் சரியானதை ஏற்பதாகவும் பிழையானதை தடைசெய்வதாகவும் கூறிக் கொள்ள முடியும்.

இந்தத் திருத்தங்களின் நிஜ உள்நோக்கத்தை மூடிமுறைக்கும் பொருட்டு அதில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.: "இதில் அடங்கும் எந்த ஒரு பகுதியும் தனியாட்களின் சட்டங்களையோ மத சுதந்திரத்தையோ முஸ்லீம் அல்லாதவர்களின் சம்பிரதாயங்களையோ பாதிக்க மாட்டாது" எனச் சொல்லப்பட்டுள்ளது. ஆனால் இம்மசோதா இவை அனைத்தையும் அடியோடு நிராகரிக்கும் விதத்தில் கூறுவதாவது அரசியல் அமைப்பிலோ எந்த ஒரு சட்டத்திலோ எந்த ஒரு நீதிமன்றத்திலோ எடுக்கும் தீர்மானத்தையும் மசோதாவின் உள்ளடக்கும் கணக்கில் எடுக்காது.

அதேசமயத்தில் அரசியல் அமைப்பை திருத்த அவசியமான மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை பலம் சமமாக்கப்படும் என இம்மசோதாவின் உள்ளடக்கம் குறிப்பிடுகின்றது. ஷரியா சட்டத்தினை நடைமுறைக்கிடுவதில் சிக்கலாகும் எந்த ஒரு பகுதியும் அகற்றப்படும் எனவும்



ஆகஸ்ட் 28ம் திகதி பாராளுமன்றத்தில் எம்.பீ.க்களுடன் பேசும் பிரதமர் நவாஷ் ஷெரீப்

பிரதமர் ஷெரிப் குறிப்பிட்டுள்ளார்.

பொதுவில் நோக்குமிடத்து எந்த ஒரு சட்டத்தையும் நடைமுறைக்கிடவும அதனை விரைவுபடுத்த தொடர்பு சாதனங்களுக்கு வாய்ப்பூட்டுப் போடவும் சரியானதை ஏற்று பிழையானதை தடைசெய்யத் தீர்மானம் செய்யவும் இம்மசோதா பிரதமருக்கு அதிகாரம் வழங்கியுள்ளது. இஸ்லாமிய சட்டவதிகளுக்கு அமைய ஒரு நாளைக்கு ஐந்து தடவைகள் தொழுவதாக பலாத்காரம் பிரயோகிக்கவும் இஸ்லாமிய வரி அறவிடவும் இதனால் முடியும்.

பிற்போக்கு இஸ்லாமியமயமாக்கத்தின் கீழ் ஒடுக்குமுறை ஆயுதத்தை தூக்கும நடவடிக்கைகள் பாகிஸ்தானின் பொருளாதார நெருக்கடியினால் உருவான வங்குரோத்து நிலைமையில் இருந்து எழுந்ததாகும். இது பெருமளவுக்கு ரூஷ்ட நெருக்கடிக்கு சமமானது.

பாகிஸ்தான் 32 பில்லியன் டாலர் வெளிநாட்டுக கடனை திருப்பிச் செலுத்துவதை கைவிடும் நிலையில் இருநது கொண்டுள்ளது. கையிருப்பில் வெளிநாட்டு செலாவணியாக 700மில்லியன் டாலர்கள் மட்டுமே எஞ்சியுள்ளது. மூன்று வாரங்களுக்கான இறக்குமதிகளுக்கு மட்டுமே இதனால் ஈடுகொடுக்க முடியும். அணு ஆயுதப் பரிசோதனைகளைத் தொடர்ந்து தூண்டிவிடப்பட்ட குளப்பங்களால் அவசரகாலச் சட்டத்தின் கீழ் அரசாங்கம் வெளிநாடுகளில் 9 பில்லியன் டாலர்களுக்கான கணக்குவழக்குகள் நிறுத்தப்பட்டுள்ளதோடு பாகிஸ்தான் நாணயத்தை டாலருக்கு ரூபா.46வீதம் மாற்றிக் கொள்ள முடியும். இதனை "நடுவீதி கொள்ளை" என பாகிஸ்தான் சஞ்சிகை ஒன்று குறிப்பிட்டுள்ளது.

உலக நாணய சந்தையின் நெருக்கடியும் அமெரிக்காவும் யப்பானும் விதித்துள்ள பொருளாதாரத் தடையும் பாகிஸ்தான் நெருக்கடியை உக்கிரமாக்கியுள்ளது. மே மாதத்தில் டாலருக்கு ரூபா.46 ஆக இருந்த பெறுமதி ஆகஸட் மாதத்தில் டாலருக்கு ரூபா. 63 ஆக வீழ்ச்சி கண்டுள்ளது. 1997 அக்டோபரில் 2000 புள்ளிகளாக இருந்த பங்குச் சந்தை பெறுமானம் 1998 ஆகஸ்டில் 777 புள்ளிவரை வீழ்ச்சிகண்டுள்ளது. நடைமுறை நிதி ஆண்டுக்கான கடன்களையும வட்டியையும் திருப்பிச் செலுத்த 5.5 பில்லியன் டாலர்கள் அவசியம்.

ஆண்டு முழுவதும் தடை உள்ள போதிலும் நாட்டுக்கு கிடைக்கும் பணத்தில் 87 பில்லியன் டாலர்கள் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதாக ஐரோப்பிய வங்கியொன்றின் பொருளாதார ஆய்வாளர் ரொயிட்டர் செய்தி சேவைக்கு தெரிவித்துள்ளார்.

தடையைச் சாட்டாகக் கொண்டு சர்வதேச நாணய நிதியம் இந்த ஆண்டு ஜூனில் 1.5 பில்லியன் டாலர் கடனை நிறுத்தி உள்ளது. அத்தோடு வெட்டு நடவடிக்கைகளை நடைமுறைக்கிடவும் ஷெரீப் அரசாங்கத்துக்கு ஆலோசனை கூறியுள்ளது. இதனால் ஏற்படக் கூடிய எதிர்விளைவுகளைப் பற்றிய அச்சத்தினால் அரசாங்கம் சர்வதேச நாணய நிதியத்தின் திட்டத்தை நடைமுறைக்கிடுவதை காலம் தாழ்த்தியுள்ளது. அத்தோடு அரபு நாடுகளின் இஸ்லாமிய கிராமிய அபிவிருத்தி வங்கியிடம் ( ) நிதி கேட்டுள்ளது. ஐ.டீ.பீ.யிடம் இருந்து கிடைக்குமென எதிர்பார்க்கப்படும் 1.5பில்லியன் டாலர்கள் அடுத்த கட்டத்தில் கடன் மீளக்கொடுப்பனவை கைவிடுவதை தடுக்கும் என நம்பப்படுகின்றது.

ஆனால் பெரும் சிக்கலில் மாட்டிக் கொண்டுள்ள ஷெரீப் அரசாங்கத்துக்கு மேலும் நிதி வேண்டியுள்ளது. இந்நிலையில் அரசாங்கம் சர்வதேச நாணய நிதியம் செப்டம்பர் நடுப்பகுதியில் நடாத்த உள்ள நிதி வழங்கும் அமைப்புக்களின் கூட்டத்துக்கு தயாராகி வருகின்றது. ஆயின் இந்த நிதியைப் பெற்றுக் கொள்ள சர்வதேச நாணய நிதியம் குறிப்பிட்டுள்ளது போல் மேலதிக வரி விதிப்பையும் அத்தியாவசிய பொருட்களின் விலை அதிகரிப்பையும் நடைமுறைக்கிட வேண்டும். இதனால் அவலநிலைக்குள்ளான தொழிலாளர், ஏழை விவசாயிகள், ஒடுக்கப்படும் மக்களுக்கு கிடைக்க இருப்பது மிலேச்ச தாக்குதல்களேயாகும். நூற்றுக்கு 62.2 வீதமாக உள்ள பாகிஸ்தானின் படிப்பறிவற்றவர்களின் எண்ணிக்கை அந்நாட்டின் சமூக நிலைமையை தெளிவுபடுத்துகின்றது.

## நெருக்கடி பற்றிய அச்சம்

த நஷனல் என்ற பாகிஸ்தான் பத்திரிகை(ஜூலை 11) யின் எழுத்தாளர் அகமட் ரசீட் எழுதுகையில் வெளிநாட்டு கடன் மீளக்கொடுப்பனவினால் மக்களின் சேமிப்புக்கள் அடித்துச்செல்லப்படும எனவும் அவர்கள் நெருக்கடிக்குள் தள்ளப்படுவர் எனவும் தெரிவித்துள்ளார். கடனை திருப்பிக் கொடுக்காதவர்கள் மகிழ்ச்சியாக இருந்தாலும் இந்நாட்டின் சமூக நிலை வீழ்ச்சியடைந்துள்ள நிலையில் வீதிகளில் மக்கள் கிளர்ச்சியில் இறங்கும் நிலைமை ஏற்கனவே உருவாகியுள்ளது என்றுள்ளார்.

கராச்சி நகரின் வங்கி நிலையத் தலைவர் இந்தியாவும் பாகிஸ்தானும் அணு ஆயுத பரிசோதனையின் பின்னைய நெருக்கடி பறறிக் கருத்து தெரிவிக்கையில் இரண்டு நாடுகளின் அரசியல் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு

முதலிடம் வழங்காவிட்டால் உங்களின் அணுச் சக்தியுடன் நீங்கள் நரகத்துக்கு ஓடுங்கள் எங்களுக்கு சாப்பிடத் தாருங்கள் என மக்கள் கேட்கும் நாள் தோன்றியுள்ளது. அன்று சகல அரசுகளும் தூக்கி வீசப்படும் என்றுள்ளார். கடந்த ஜூலையில் ஆயிரக்கணக்கான மக்கள் அத்தியாவசிய பொருட்களின் விலை உயர்வை எதிர்க்க லாகூரில் கூடினர். மக்கள் விரோத அரசாங்கத்தால் உருவாக்கப்பட்டுள்ள ஒடுக்குமுறை மதவாத, இனவாத, குழுவாத ஒடுக்குமுறைச் சட்டம் இந்திய எதிர்ப்பு அமைப்புக்களாலும் நடைமுறைக்கிடப்பட்டிருந்தது. ஆனால் சர்வதேச நாணய நிதியத்தின் திட்டத்தை நடைமுறைப்படுத்த மக்களின் வாழ்க்கை நிலைமையை மேலும படுகுழியில் தள்ளுவதை விட வேறு வழி ஷெரிப் அரசாங்கத்துக்கு கிடையாது.

ஐக்கிய இராஜ்ஜியம் ச.நா.நி.யின் திட்டத்தை நடைமுறைக்கிடும்படி நிர்ப்பந்திக்கும் ஜூலையில் செனட் சபையில் உரையாற்றிய ஐக்கிய இராச்சியத்தின் உதவிச் செயலாளர் கார்ள் இன்டர்பேத் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்: பாகிஸ்தான் சர்வதேச நாணய நிதியத்திடம் இருந்தும் அபிவிருத்தி வங்கிகளில் இருந்தும் நிதிகளை நம்பியிருக்கும் நாடாகும். வெளிநாட்டு முதலீடுகள் மூழ்கிப் போயுள்ள நிலையில் பாகிஸ்தான் விரைவில் வெளிநாட்டுக் கடன்களைக் கைவிட வேண்டியுள்ளது. நாட்டின் நெருக்கடியைத் தீர்ப்பதற்கு அவசியமான நடவடிக்கையை எடுப்பதற்கு பாகிஸ்தானால் முடியாதுள்ளது. சர்வதேச நாணய நிதியத்தின் வரம்பெற்ற பிரதமராக சொல்லப்படுபவரால் அந்நாடு பெரும் மந்த நிலைக்குள் தள்ளப்பட்டுள்ளது. முதலாளித்துவத்தின் பலம் வாய்ந்த பகுதியினர் இம்மசோதாவுக்கு எதிராக இருப்பதோடு வெளிநாட்டு முதலீட்டாளர்கள் நாட்டைவிட்டு வெளியேறிக் கொண்டு இருப்பதோடு புதிய முதலீட்டாளர்கள் வராது போவார்களோ என எண்ணி பயந்து போயுள்ளார்கள்.

சிறுபான்மை மத அமைப்புக்களும் எதிர்ப்பைக் காட்டிக் கொண்டுள்ளதோடு முக்கிய எதிர்க்கட்சியான பெனாசீர் பூட்டோவின் முதலாளித்துவ பாகிஸ்தான் மக்கள் கட்சி நெருக்கடியை அதிகரிக்கும் வகையில் எதிர்படுக்காட்டப் போவதாக தெரிவித்துள்ளது.

பாகிஸ்தான் ஆளும் வாக்கம் கடந்த ஆண்டில் சுதந்திரத்தின் 50 ஆண்டு நிறைவைக் கொண்டாடியது. பிரித்தானிய காலனித்துவ ஆட்சியாளர்கள் சோவியத் ஸ்டாலினிச அதிகாரத்துவத்தின் ஆதரவுடன் இந்து முஸ்லீம் முதலாளி வர்க்கத்துடன் இணைந்து 1947ல் இந்தியாவை மத ரீதியில் பிரித்து ஏகாதிபத்தியத்துக்கு எதிரான போராட்டத்தை நாயமாக்கியது. இப்பிரிவினை மதவாத குழப்பத்தை தூண்டி, கோடிக்கணக்கான மக்ளை படுகொலை செய்ய வழிவகுத்தது. தமது வர்க்க நலனை காக்கவும் மக்களை ஒடுக்கவும அதற்கான ஆயுதமாக இருபக்க ஆளும் வர்க்கமும் சோவினிசத்தை தூண்டிவிட்டன. குளிர்யுத்த காலத்திய இந்திய தேசிய காங்கிரஸ் சோவியத் ரூஷ்யாவுடன் இணைப்பை ஏற்படுத்தியது. பாகிஸ்தான் அமெரிக்க அரசுகளுடன் உறவை ஏற்படுத்திக் கொண்டு அதற்கு கீழ்ப்படிந்தது.

பாகிஸ்தான் ஒன்றுடன் ஒன்று 1000 மைல்களால் பிரிக்கப்பட்ட நிலையில் கிழக்கு மேற்கு பாகிஸ்தான் என்ற இரண்டு பிரிவாக உள்ளது. மேற்கு பாகிஸ்தான் வளத்தில் பற்றாக்குறையால் நஷ்டத்தில் உள்ளது. சுதந்திரத்தின் பின்னர் கடந்து சென்ற காலங்களில் பெரும் பகுதியில் பாகிஸ்தான் இராணுவ ஆட்சியில் இருந்து வந்துள்ளது. பாகிஸ்தான் இந்திய ஆளும் வர்க்கங்கள் அணு ஆயுத பரிசோதனைகளின் பின்னர் முழுத் துணைக்கண்டத்தையும் மீண்டும் யுத்தத்தினுள் தள்ளிவிட முயற்சிக்கின்றன. இவை சோவினிசத்தை தூண்டி சமூக பிரச்சினைகளை கீழ்ப்படுத்த இதை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மார்க்சிச இலக்கியங்களை நீங்களும் வாசியுங்கள்!



## லியொன் ட்ரொட்ஸ்கியும் 20ம் நூற்றாண்டில் சோசலிசத்தின் தலைவிதியும்

டேவிட் நோர்த்



## சோசலிச சமத்துவக் கட்சியின் முன்நோக்கு

பொது மக்கள் முகம் கொடுக்கும் சகல பிரச்சினைகளும் அவர்கள் ஈடுபட்டுள்ள சகல போராட்டங்களும் முன்நோக்கு, தலைமை பற்றிய அரசியல் பிரச்சினையை உக்கிரமான முறையில் தோற்றுவிக்கின்றது. இந்தச் சவாலுக்கு முகம் கொடுக்க, அனைத்துலகக் குழுவின் தலைமையிலான நான்காம் அகிலத்தினால் மட்டுமே முடியும். அனைத்துலகக் குழுவின் கிளைகளால் புதிய கட்சிகளை ஸ்தாபிதம் செய்வதானது. முதலாளித்துவ முறைக்கு எதிராக தவிர்க்க முடியாத விதத்தில் போராட்டத்துக்குக் கிளம்பும் மக்களுக்கு சமூக சமத்துவத்தையும் நீதியையும் ஜனநாயக சுதந்திரத்தினையும் கொண்ட மாற்று வேலைத்திட்டத்தின் அடிப்படையில் ஆட்சி பற்றிய முன்நோக்கில் வழிகாட்டுவதற்கே.

விலை ரூபா 40.00



## முதலாளித்துவத்தின் மரண ஓலமும்

நான்காம் அகிலத்தின் பணிகளும்

இடைமருவு வேலைத்திட்டம்

நான்காம் அகிலத்தின் ஸ்தாபக மகாநாட்டில் நிறைவேற்றப்பட்டது.

விலை ரூ. 15.00




## இலங்கையில் ட்ரொட்ஸ்கிசமும் திரிபுவாதமும்

## சமசமாஜ வரலாற்று ஏட்டிலிருந்து

கீர்த்தி பாலசூரிய

விலை ரூ. 15.00



## அடிப்படைக் கொள்கைகளுக்கும், மூலோபாயத்துக்குமான 25 ஆண்டுக்கால உறுதியான போராட்டம்

விஜே டயஸ்


விலை ரூ. 10.00



## இலவசக் கல்வியை காப்பது எப்படி?

விஜே டயஸ்

விலை ரூ. 10.00



ஏகாதிபத்திய யுத்தத்துக்கும் காலனித்துவத்துக்கும் எதிரான போராட்டமும்

## பேர்ளின் உலக மகாநாட்டின் முன்நோக்கும்


விலை ரூ. 25.00



ஆகஸ்ட் சதியின் பின்னர்:

## சோவியத் யூனியன் எங்கே செல்கிறது?

விலை ரூ. 25.00



சோவியத் யூனியன் கலைக்கப்பட்டதன் பின்னர்

## மார்க்சிசத்துக்கான போராட்டமும் நான்காம் அகிலத்தின் பணிகளும்

டேவிட் நோர்த்

விலை ரூ. 5.00



## நிரந்தரப் புரட்சியும் சோசலிச அனைத்துலக வாதத்துக்கான போராட்டமும்

கீர்த்தி பாலசூரிய நினைவுப் பேருரை

டேவிட் நோர்த்

விலை ரூ. 8.00

தொழிலாளர் பாதை வெளியீடு, 90, 1 வது மாளிகாகந்த ஒழுங்கை, கொழும்பு 10. தொலைபேசி: 682220

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனவாத யுத்தத்துக்கு ஒரு சதமும் கொடுக்காதே!

1ம் பக்கத் தொடர்ச்சி

காட்டவில்லை....

" ..அதன்படி அரசாங்க நிறுவனங்களிலும் தனியார் நிறுவனங்களிலும் சேவையில் ஈடுபட்டுள்ள சகலரிடம் இருந்தும் அமைச்சரவை அமைச்சர்கள், பாராளுமன்ற அங்கத்தவர்கள் தொடக்கம் குறைந்தபட்சம் ஒரு கிழமை சம்பளத்தை ஒரேயடியாகவோ அல்லது கட்டண அடிப்படையிலோ தேசிய பாதுகாப்பு நிதிக்கு பங்களிப்பு செய்யும்படி வேண்டுகின்றோம்."

கட்டாய இராணுவ சேவையை ஞாபகப்படுத்தியபடி விடுக்கும் இந்தக் கோரிக்கை, உண்மையில் ஒரு மோசடி கொள்ளையடிப்பாகும். "ஒன்றில் யுத்தத்துக்கு பணம் கொடு அல்லது கட்டாய இராணுவ சேவையில் சேர்" என்பதே அரசாங்கத்தின் மிரட்டலின் அடிநாதமாக இருந்து கொண்டுள்ளது. அரசாங்கம் யுத்த சேவையை கட்டாயமாக்க பின்னடிப்பது "கொள்கை விடயம்" எனப்படுவதாக இது இருந்து கொண்டுள்ளதால் அல்ல. யுத்த சேவையில் சேர விண்ணப்பித்தோர் தொகை அரசாங்கம் எதிர்பார்க்கும் தொகையை எட்டியும் பார்ப்பதாக இல்லை. அரசாங்கத்தினதும் இனவாத வெறியர்களதும் யுத்தக்கூச்சல்களுக்கு மத்தியிலும் இந்த அறிக்கைக்கு எதிர்ப்புக் கிளம்பியுள்ளதால் யுத்த சேவையை கட்டாய சேவையாக்கின் மக்களின் எதிர்ப்பு வெடித்துக் கிளம்பும் என அரசாங்கம் நடுங்குகின்றது.

ஐந்து இலக்கச் சம்பளமும் அலவன்சும், சுகபோக வாகனங்களும், மாளிகைகளும் இன்னும் பல சலுகைகளும் கொண்ட அமைச்சர்களும் , எம்.பீ.க்களும் இதைக் கடைப்பிடிப்பார்கள் என அரசாங்கம் வெட்கமின்றிக் கூறியுள்ளது. இதனை அரசாங்கம் அன்றன்றாடைய வாழ்க்கையை ஓட்டத் தன்னும் முடியாதுள்ள தொழிலாளர்களுக்கே கூறுகின்றது. சம்பளத்தில் நான்கில் ஒரு பங்கை வெட்டுவதற்கு இதை அமைச்சர்களும் எம்.பீ.க்களும் கடைப்பிடிப்பார்கள் என அரசாங்கம் எச்சரிக்கின்றது. சம்பளத்தில் அற்பசொற்பம் கூட்டும்படி கோரிக்கை விடுத்தாலோ யுத்தத்துக்கு செலவிட வேண்டியுள்ளதாகச் சீறுகின்றது.

செப்டம்பர் 24ம் திகதியுடன் வவுனியாவில் இருந்து கிளிநொச்சி வரையிலான யாழ்ப்பாணப் பாதையை கைப்பற்றும் "ஜயசிக்குறு" இராணுவ நடவடிக்கைக்கு 500 நாட்கள் நிறைவு பெறுகின்றது. விடுதலைப் புலிகளின் கோட்டையாகக் கொள்ளப்படும் மாங்குளம் நகரத்தையும் அதை அண்டிய பகுதிகளையும் முற்றுகையிட்டு எட்டு மாதங்களுக்கு மேலாகின்றது. அரசாங்கம் விடுதலைப் புலிகளின் எதிர்ப்பை உடைப்பதில் வெற்றி பெறாததைப் போலவே விடுதலைப் புலிகளும் அரசாங்கத்தின் முற்றுகையை தகர்த்து எறிய முடியாது உள்ளது.

பொதுஜன முன்னணி அரசாங்கத்தின் இலக்கு, திறைசேரி நிதிகளை தின்று ஏப்பமிடுவதற்கு மட்டும் நின்றுவிடாது தொழிலாளர்களின் சம்பளத்தையும் கொள்ளையடித்து விழுங்குவதாக உள்ளது. அந்த விதத்தில் என்ன செலவுதான் ஏற்பட்டாலும் விடுதலைப் புலிகளின் எதிர்ப்பை முறியடித்து , விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தைக்கான நிலைமைகளை சிருஷ்டிப்பதே அரசாங்கத்தின் திட்டம்.

இந்தப் பொம்மலாட்டத்தின் பின்னணியில் ஏகாதிபத்திய ஆட்சியாளர்களும் சர்வதேச மூலதனமும் இருந்து கொண்டுள்ளன. அயர்லாந்தின் பின்னர் இப்போது ஸ்பானிய அரசாங்கம் அந்நாட்டு பாஸ்க் பிரிவினைவாதிகளுடன் சமரசத்துக்கு செல்ல வேண்டும் என ஐரோப்பிய ஆட்சியாளர்கள் வலியுறுத்தி வருகின்றார்கள். பாஸ்கு பிரிவினைவாதிகளும் யுத்தம் நிறுத்தம் செய்து உடன்படிக்கை செய்து கொள்ள ஆயத்தமாகி வருகின்றார்கள். இலங்கையின் சந்திரிகா குமாரதுங்க அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் அத்தகைய ஒரு "சமரசத்துக்கு" செல்லும்படி சிபார்சு செய்துள்ளனர். அதன் மூலம் அனைத்துலக மூலதனத்தின் சுரண்டலுக்கான நிலைமைகளை உருவாக்கி தரவேண்டும் என்பதே அவர்களது வேண்டுகோள்.

இத்தகைய ஒரு நிலைமையிலேயே விடுதலைப் புலிகள் "மூன்றாவது தரப்பினரின்" தலையீட்டுடன் அரசாங்கத்துடனான பேச்சுவார்த்தைகளுக்கான நிலைமைகளை சிருஷ்டித்து தரும்படி ஏகாதிபத்தியவாதிகளை திரும்பத் திரும்ப வேண்டிக் கொண்டுள்ளது. இலங்கை ஜனாதிபதி ஐக்கிய நாடுகள் சபையில் பேசும் போது தமது நிலைப்பாட்டை பின்வருமாறு எடுத்துரைத்தார்: விடுதலைப் புலிகளும் பயங்கரவாதமும் தனிநாட்டுக்கான இரத்தம் தோய்ந்த அழைப்பை கைவிடுமானால் எஞ்சியுள்ள சகல இனக்குழு பிரச்சினைகளையும் தீர்க்கும் தீர்வின் பேரில் பேச்சுவார்த்தைகளில் 'கலந்து கொள்ள ஏனைய இலங்கையருக்குள்ள வாய்ப்பு விடுதலை புலிகளுக்கும் திறந்துள்ளது."

ஏகாதிபத்தியவாதிகளின் தலையீட்டுடன் சிங்கள, தமிழ் முதலாளி வர்க்கங்களிடையே இடம்பெறும் கொடுக்கல் வாங்கல்கள் மூலம் தமிழ்த் தேசிய இனத்தின் தேசிய ஜனநாயக உரிமைகளை ஊர்ஜிதம் செய்ய முடியாது. அதேநாடு அத்தகைய கொடுக்கல்வாங்கல்களின் நிஜ இலக்கு வடக்கிலும் தெற்கிலும் தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்களுக்கு எதிராக சிங்கள தமிழ் முதலாளித்துவ பிற்போக்கு சக்திகளை அணிதிரட்டி சர்வாதிகார ஆட்சிக்கான நிலைமைகளை உருவாக்குவதேயாகும்.

சிங்கள முதலாளி வர்க்கத்தின் சிங்கள இனவாத அரசியலும் தமிழ் முதலாளித்துவ விடுதலைப் புலிகளின் பிரிவினைவாத அரசியலும் இத்தகைய ஒரு கொடுக்கல் வாங்கலுடன் நிறைவு பெற்றுவிடும் என எந்த ஒரு தொழிலாளியோ ஒடுக்கப்படும் மக்களோ நம்பிக்கை வைக்க முடியாது. இந்த முதலாளி வர்க்கங்களின் அரசியலானது அனைத்துலக மூலதனத்துடன் சேர்ந்து தத்தமது சுரண்டலுக்கான சலுகைகளை காப்பாற்ற தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்களைப் பிளவுபடுத்தி நசுக்கித் தள்ளுவதேயாகும்.

இந்தப் பிற்போக்கு யுத்தம் மறுபுறத்தில் அரசாங்கத்தின் பெரும் பிரமுகர்களதும் இராணுவ பொலிஸ் பெரும் புள்ளிகளதும் சாக்குகளை நிரப்பும் வர்த்தகமாகியுள்ளது. யுத்தத்தினால் இடம்பெறும் மக்கள் படுகொலை இரத்தக் களரியை மட்டும் அல்லாது யுத்தத்தின் மூலம் இடம் பெறும சுரண்டலையும் மூடி மறைக்க அரசாங்கம் இராணுவ செய்தித் தணிக்கையை திணித்துள்ளது. சிம்பாபே நாட்டில் இருந்து மோட்டார் தருவிக்கும் ஊழலிலும் விமானக் கொள்வனவிலும் சீனாவுடன் சமீபத்தில் இடம்பெற்ற ஆயுதக் கொள்வனவிலும் அரசாங்க, இராணுவ உயர் புள்ளிகள் கோடிக் கணக்கில் கமிசனும் லஞ்சமும் பெற்றுக் கொண்டுள்ளதாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது. யுத்தக் கொடுக்கல் வாங்கல்களில் ஊழல்கள் இன்னும் "கொஞ்சம்" இருப்பதாக ஜனாதிபதி பகிரங்கமாக ஒப்புக் கொண்டுள்ளார்.

பொதுமக்களின் நிதியைத் தின்று ஏப்பமிட்டும் இலட்சக் கணக்கில் மக்களை அகதிகளாக்கியும் ஆயிரக் கணக்கில் மக்களை பலிகொண்டும் இனவாத காட்டுமிராண்டித் தனத்தை திணிக்கும் இந்த யுத்தம் யாருடையது? இந்த யுத்தம் முதலாளிகளின் சுரண்டல் அவசியங்களையும் சலுகைகளையும் கட்டிக் காக்கும் யுத்தமாகும். இது தொழிலாளர் ஒடுக்கப்படும் மக்களின் யுத்தம் அல்ல. "யுத்தம் தொடர்ந்து முன்செல்ல வேண்டும்" எனக் கூச்சலிடும் "பயங்கரவாத எதிர்ப்பு தேசிய ஐக்கிய முன்னணியும்" சரி சிங்கள ஆணைக்குழுவும் சரி மற்றும் இனவாதக் குழுக்களும் சரி ஏகாதிபத்தியச் சார்பு முதலாளிகளின் படுபிற்போக்கு , பாசிச கைத்தேங்காய்களாகும்.

சமசமாஜ, கம்யூனிஸ்ட் , நவசமசமாஜ கட்சிகளும் தொழிற்சங்கங்களும் ஒரு புறத்தில் இனவாத யுத்தத்துடனும் மறுபுறத்தில் அவர்கள் திணிக்கத் திட்டமிடும் பிற்போக்கு கொடுக்கல்வாங்கல்களுடனும் அணிதிரண்டு கொண்டுள்ளன. செப்டம்பர் கடைப்பகுதியில் லங்கா சமசமாஜக் கட்சி வெளியிட்ட அறிக்கையும் இப்போது நாடு பூராவும் இடம்பெற்றுவரும் பிரச்சார இயக்கமும் "தமிழீழ விடுதலைப் புலி பாசிஸ்டுகளுக்கு " எதிராக அரசியல் தீர்வினை நடைமுறைக்கிட பொதுஜன முன்னணி யூ.என்.பி.கூட்டைக் கட்டியெழுப்ப வேண்டும் " என நெருக்குகின்றது.

அரசாங்கம் யுத்தத்தில் மாட்டிக் கொண்டுள்ள ஒரு நிலைமையில் பரந்த மக்கள் குமுறல் இடம்பெறுமோ என கிடுநடுங்கும் சமசமாஜ தலைவர்கள் யூ.என்.பி.அரசாங்கத்துடன் தேசிய அரசாங்கத்துக்கும் கூட தயாராக வேண்டும் என பொதுஜன முன்னணி அரசாங்கத்தின் தலைவர்களையும் எச்சரிக்கிறார்கள். இந்த அறிக்கை வெளியிடப்பட்டதோடு இலங்கையின் பழைய அரசியல் கட்சித் தலைவர்களின் இந்த புத்திக் கூர்மையை வருணித்து ஐலண்ட் பத்திரிகை(22 9 98) முன்னணிக்கு பாய்ந்தமை தற்செயலானது அல்ல.

இதற்கிடையே யுத்தத்துக்கு பலத்த எதிர்ப்புத் தெரிவிக்கும் இலங்கை வங்கி ஊழியர் சங்கம், தேசிய பாதுகாப்பு நிதிக்கு சம்பளத்தில் இருந்து பணம் வெட்டிக் கொள்ள இடமளிக்க வேண்டாம் என அங்கத்தவர்களுக்கு சிபார்சு செய்கையில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளது: நீண்டகால மோதுதல்களை ஒரு முடிவுக்கு கொணர்ந்த அயர்லாந்து படிப்பினைகளையும் பங்களாதேஷ போராட்டத்தை தீர்த்து வைத்த அனுபவத்தையும் சுட்டிக் காட்டி.... அரசியல் தீர்வுக்காக... அரசாங்கத்துக்கும் தமிழீழம் விடுதலைப் புலிகள் அமைப்புக்கும் தொழிலாளர் வர்க்கம் பொதுமக்களுடன் சேர்ந்து தொடர்ச்சியான நெருக்குவாரம் கொடுக்கும் பிரச்சார இயக்கத்தை தொடுக்க வேண்டும் எனவும் இந்த சபை தீர்மானிக்கின்றது."

யுத்தச் சுமைக்கு எதிராகப் பொதுமக்களிடையே வளர்ச்சி கண்டுவரும் எதிர்ப்பினை முதலாளித்துவ அரசாங்கத்துக்கு நெருக்குவாரம் கொடுக்கும் இயக்கமாக திசை திருப்பும் ஒரு முயற்சியாக இது விளங்குகின்றது. அத்தகைய ஒன்று இறுதியில் ஏகாதிபத்தியவாதிகளின் தலையீட்டுடன் திணிக்கும் சமரசத்துக்கு பொதுமக்களை பிணைத்துப் போடும் ஒரு பொறியாக விளங்கும்.

இன்று ஒடுக்கப்படும் மக்கள் செய்ய வேண்டியது, இனவாத யுத்தத்தை வளர்த்தெடுத்த யூ.என்.பி.க்கும் பொதுஜன முன்னணிக்கும் பின்னால் அலைவது அல்ல. அவ்வாறே பிரிவினைவாத விடுதலைப் புலிகளைத் தொடர்வதும் அல்ல. தொழிலாளர் வர்க்கத்தின் முதலாளித்துவ எதிர்ப்பு வேலைத்திட்டத்தின் அடிப்படையில் பொதுமக்கள் இயக்கத்தை கட்டியெழுப்ப வேண்டும்.

× இந்த யுத்தம் எமது யுத்தம் அல்ல! யுத்தத்துக்கு ஒரு சதமோ அல்லது ஒரு ஆளோ, ஒரு கருவியோ வழங்காதே!

× வடக்கு கிழக்கில் இருந்து இலங்கை இராணுவத்தை வெளியேற்று!

× விடுதலைப் புலிகளின் பிரிவினைவாதத்தை நிராகரி!

× தமிழ் தேசிய இனத்தின் தேசிய ஜனநாயக உரிமைகளை காப்பாற்று!

இதில் எதையும் எந்த ஒரு முதலாளித்துவ அரசாங்கத்தினாலும் சாதித்துவிட முடியாது.

அவற்றை சிங்கள தமிழ் தொழிலாளர் வர்க்கம் ஒன்றிணைந்து ஒடுக்கப்படும் மக்களுக்கு தலைமை வழங்குவதன் மூலம் அமைக்கும் தொழிலாளர் விவசாயிகள் அரசாங்கத்தின் மூலமே சாதிக்க முடியும். அனைத்துலக சோசலிசத்தின் ஒரு பாகமாக இந்தியத் துணைக்கண்ட சோசலிச குடியரசு ஒன்றியத்தினை நோக்கிச் செல்வதன் மூலம் இலங்கை ஈழம் சோசலிச குடியரசு ஒன்றியத்தை அமைக்கும் மாற்று வேலைத்திட்டத்தினை சோசலிச சமத்துவக் கட்சி முன்வைக்கின்றது.

யுத்தத்துக்கும் யுத்தத்தின் ஊடாக வளர்ச்சி காணும் அடக்குமுறை ஆட்சிக்கும் முடிவு கட்டியும் பொதுமக்களின் வாழ்க்கை தரம், தொழில், நலன்புரி சேவைகளின் அழிவை நிறுத்தியும் தொழிலாளர் ஒடுக்கப்படும் மக்கள் சமாதானத்துடனும் சமத்துவத்துடனும் வாழக்கூடிய அனைத்துலக சோசலிச வேலைத் திட்டத்திற்காகப் போராட வேண்டும். இந்தப் போராட்டத்தின் முன்னணியில் நின்றுவரும் சோசலிச சமத்துவக் கட்சியில் சேர்ந்து இந்த வேலைத்திட்டத்தை ஊர்ஜிதம் செய்யத் தோள் கொடுக்குமாறு நாம் பொதுமக்களை வேண்டுகின்றோம்.

## வடக்கு-கிழக்கில் மக்கள் பட்டினி நிலைமைக்கு முகம் கொடுக்கும் ஆபத்து

2ம் பக்கத் தொடர்ச்சி

இம்மக்கள் இந்த முகாம்களில் அடைபட்டுக் கிடப்பது அரசாங்க இராணுவத்துகரும் விடுதலைப் புலிகளுக்கும் இடையேயான யுத்தத் தாக்குதல்களில். இருந்து உயிர் காத்துக் கொண்டவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. அரசாங்க இராணுவத்தின் விமானக் குண்டு வீச்சுக்கள், பீரங்கி, டாங்கி தாக்குதல்கள் காரணமாக ஏற்கனவே பல்லாயிரக்கணக்கான தமிழ் குடும்பங்கள் அழிந்து போயுள்ளன. அழிவுக்கு முகம் கொடுத்துள்ளது இந்த முகாம்களில் தங்கியுள்ள அகதிகள் ஒழுங்கு முறையான உணவு இல்லாமலும் நோய்க்கு மருந்து இல்லாமலும் நாகரீகமான வாழ்க்கைக்கு உரிய எந்த ஒரு சூழலும் இல்லாமலும் அடிமை முகாம்களுக்கு சமானமான இந்த அகதிகள் முகாம்களில் தள்ளப்பட்டுள்ளனர். அவர்கள் ஏகாதிபத்தியவாதிகளின் உதவியோடு இந்த பொதுஜன முன்னணி அரசாங்கம் கொண்டு நடாத்தும் இனவாத யுத்தத்தின் பலி கடாக்களாகியுள்ளனர்.

யுத்தத்தினால் காட்டுமிராண்டி நிலைமைக்கு முகம் கொடுத்துள்ள வடக்கு கிழக்கு தமிழ் ஒ[illegible] பாதுகாக்க தென் [illegible] ஒடுக்கப்படும் மக்கள் தமது கரங்களை நீட்ட வேண்டும் . இந்த யுத்தம் இலங்கைத் தொழிலாளர் ஒடுக்கப்படும் மக்களின் யுத்தம் அல்ல. மாறாக அவர்களின் எதிரிகளான, அவர்களின் உரிமைகளுக்கு எதிராகப் போராடும் முதலாளித்துவ அரசாங்கத்தினதும் ஆளும் வர்க்கத்தினதும் யுத்தமாகும். விடுதலைப் புலிகள் தமது முதலாளித்துவ வசதி வாய்ப்புக்களுக்காகச் செய்யும் இரத்தம் தோய்ந்த பேரம் பேசல்களின் மூலம் இந்த யுத்தத்தினதும் இனவாதக் காட்டுமிராண்டித் தனத்தினதும் [illegible] இருக்கின்றது. தமிழ் [illegible] ஒடுக்கப்படும் மக்களையும் காப்பதற்கான ஒரே வழி இனவாத யுத்தத்தினை நடாத்தி முழு மக்களதும் வாழ்க்கை நிலைமைகளை நாசமாக்கும் முதலாளித்துவ வர்க்க ஆட்சியை தூக்கி வீசுவதற்கு வடக்கு கிழக்கு தொழிலாளர்களுடன் தென்மாகாணங்களில் உள்ள தொழிலாளர் வர்க்கம் சோசலிசத்தினதும் அனைத்துலகவாதத்தினதும் ஐக்கியத்தைக் கட்டியெழுப்ப வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாளிகாவத்தை மக்களை பயமுறுத்த பொலிசாரும் காடையர்களும் நடவடிக்கை

ஆகஸ்ட் 26ம் திகதி மாளிகாவத்தை முதியோர் இல்லத்துக்குச் சமீபமாக இடம்பெற்ற பொலிஸ் துப்பாக்கி பிரயோகத்தினால் அப்பிரதேசத்தைச் சேர்ந்த 21 வயது இளைஞரான விஸ்ருல் என்ற முஸ்லீம் இளைஞர் ஆபத்தான நிலையில் கொழும்பு பெரியாஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இந்தப் பொலிஸ் துப்பாக்கி பிரயோகம் உள்ளடங்கலாக மாளிகாவத்தை பூராவும் கட்டவிழ்க்கப்பட்டுள்ள பொலிஸ் அடக்குமுறைக்கு எதிராக கடந்த செப்டம்பர் 4ம் திகதி சுமார் 150 மக்கள் மாளிகாவத்தை பொலிசுக்கு சமீபமாக எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.

இந்த துப்பாக்கிப் பிரயோகத்தை நேரில் கண்ட மாளிகாவத்தை குடியிருப்பாளர் ஒருவர் தொழிலாளர் பாதைக்கு கூறியதாவது: "இரவு 9.15 மணியளவில் டெனிம் களிசானும், நீளக் காற்சட்டையும் அணிந்த நால்வர் ஒருவரைத் துரத்தி துரத்தி கைத்துப்பாக்கியால் சுடுவதைக் கண்டேன். இந்தத் துவக்குச் சூடு இரவு பள்ளிவாசலுக்கு சென்று திரும்பிக் கொண்டிருந்த விஸ்ருலுக்கு பட்டது. விஸ்ருல் அரை மணித்தியாலம் நிலத்தில் விழுந்து கிடந்தார். துப்பாக்கிச் சூடு நடந்ததால் எவரும் வரவில்லை. பின்னர் அவரை கொழும்பு பெரியாஸ்பத்திரிக்கு கொண்டு சென்றனர். கலைத்துக் கொண்டு வந்தவரின் பெயர் அசித் எனத் தெரிகின்றது. அவரது காலிலும் சூடு பட்டிருந்தது. பொலிசார் அசித்தை இழுத்துக் கொண்டு போய் ஜீப்பில் போட்டனர்.

"விஸ்ருலின் நெஞ்சின் இடப் பக்கத்தில் சூடுபட்டிருந்ததோடு அந்த ரவையை அகற்ற முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிகின்றது."

கடந்த இரண்டு மாதங்களாக மாளிகாவத்தை பகுதி ஒரு யுத்தக் களமாக மாறியுள்ளது. பாதாள உலகின் இரண்டு கும்பல்களுக்கு இடையேயான மோதுதல்களால் இந்த கும்பல்களைச் சேர்ந்த சுமார் 20 பேர் இறந்துள்ளனர். கைக்குண்டுகள், கைத்துப்பாக்கிகள் சகிதம் இந்தக் கும்பல்களைச் சேர்ந்த 30க்கும் 40க்கும் இடைப்பட்ட கும்பல் இப்பிரதேச மக்களின் வீடுகளுக்குள் புகுந்து தமது எதிரிகளை சல்லடைபோட்டுத் தேடி வருவதாகத் தெரிகின்றது. இவர்கள் குண்டுகளை வீசியபடி இங்ஙனம் நுழையும் போது மக்கள் நடுக்கம் எடுத்தபடி வீடுகளின் கதவுகளைப் பூட்டிக் கொள்கிறார்கள்.

இந்தக் கும்பல்கள் நடாத்தும் தாக்குதல்கள் அல்லது கொலைகளை பற்றி எந்த ஒரு சாட்சியமும் வழங்க மக்கள் அஞ்சுகின்றனர். அப்படி சாட்சியம் கொடுத்தால் சாட்சி கொடுத்தவர்கள் அடுத்துப் பலியாக வேண்டி நேரிடுகின்றது.

மாளிகாவத்தை மக்கள் ஒரு புறத்தில் பாதாள உலகின் கும்பல்களின் பயங்கரங்களுக்கும் மறுபுறத்தில் பொலிசாரினதும் இராணுவத்தினதும் அடக்குமுறைகளுக்கும் பலிகடாக்களாகியுள்ளனர். குண்டர் கும்பல்களை அடக்குவதாகக் கூறிக்கொண்டு இரவுக் காலங்களில் தொடர்ந்து இடம்பெறும் வீடு சோதனைகளுக்கு இம்மக்கள் ஆளாகியுள்ளனர். இரவு 10 மணிக்குப் பின்னர் வீதியில் பயணம் செய்பவர்களின் அடையாள அட்டைகளை பொலிஸ் அதிகாரிகள் சோதனையிடுகின்றனர். சிவில் உடையில் நடமாடும் பொலிஸ் அதிகாரிகள் இரவில் பயணம் செய்யும் இளைஞர்களிடம் ஆயுதம் கோரி பயமுறுத்தி வருவதாக தொழிலாளர் பாதைக்கு தகவல் கிடைத்துள்ளது. கடந்த இரண்டு மாதங்களாக இராணுவ அதிரடிப் படையினர் பல தடவைகள் மாளிகாவத்தை பகுதி வீடுகளைச் சோதனையிட்டதாக தெரிகின்றது.

இந்த நிலைமையினால் மாளிகாவத்தை பகுதியில் பொதுமக்களின் வாழ்க்கை நடவடிக்கைகள் சங்கடமாகியுள்ளது. இரவு 10மணிக்குப் பின்னர் எவரும் வீதியில் நடமாடமுடியாதுள்ளது. முன்னர் இரவு 12 மணி வரை திறந்திருந்த கடைகள் இப்போது இரவு 10 மணிக்கே கதவடைப்புச் செய்து கொள்கின்றன. மாளிகாவத்தை பகுதியில் உத்தியோகப்பற்றற்ற ஊரடங்குச் சட்டம் அமுலில் இருந்து கொண்டுள்ளது.

மாளிகாவத்தை பிரதேச மக்களைப் போன்றே ஏனைய பகுதிகளில் வாழும் தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்களும் இந்த அரசினதும் காடையர் கும்பல்களதும் அடக்குமுறை நடவடிக்கைகளின் அபிவிருத்தியை தீர்க்கமான ஒரு விடயமாக மனங்கொள்ள வேண்டும்.

நவீன தன்னியக்க ஆயுதங்கள் இந்தக் கும்பல்களுக்கு கிடைத்தது எப்படி? அவர்கள் அந்த ஆயுதமும் கையுமாக வெளிவெளியாக அடக்குமுறை நடவடிக்கைகளில் ஈடுபடுவது யாரின் அதிகாரத்தோடு? அரச பொலிஸ், இராணுவம், விசேட அதிரடிப்படைகளின் தாக்குதல்கள் ஜனநெருக்கடியான வீதிகளில் நடாத்தும் துப்பாக்கிப் பிரயோகங்கள், கைது செய்தல்கள் ஆகியவை எல்லாம் இடம்பெறுவது பொதுமக்களை அடக்கித் தள்ள அல்லவா?

## பகிரங்கக் கூட்டம்

- சோ.ச.க. அங்கத்தவர்களை விடுதலை செய்த்தை விடுதலைப் புலிகள் ஊர்ஜிதம் செய்ய வேண்டும்!
- சோ.ச.க. ஜனநாயக உரிமைகளை காப்பாற்று!

வெள்ளவத்தை மாநகர சபை சந்தை முன்றலில்

அக்டோபர் 11ம் திகதி

மாலை 3 மணிக்கு

சோசலிச சமத்துவக் கட்சி

இளம் சோசலிஸ்டுகள்

## மார்க்சிசமும் இருபதாம் நூற்றாண்டின் பிரச்சினைகளும்

### ஒன்பது விரிவுரைகள்

1. லியொன் ட்ரொட்ஸ்கியும் இருபதாம் நூற்றாண்டின் சோசலிசத்தின் தலைவிதியும்
2. பூகோளமயமாக்கமும் வரலாற்று அர்த்தமும் புரட்சிகரத் தன்மையும்
3. சீர்திருத்தவாதமும் புரட்சியும்-போர்ண்ஸ்டீனிற்கு எதிரான போராட்டமும் வரலாற்று முன்நோக்கும்
4. கிழக்கு ஐரோப்பாவில் ஸ்டாலினிசம்: ஜேர்மன் ஜனநாயகக் குடியரசின் எழுச்சியும் வீழ்ச்சியும்.
5. நிரந்தரப் புரட்சி--இந்தியாவிலும் சீனாவிலும் அதன் படிப்பினைகள்.
6. நிரந்தரப் புரட்சி-காஸ்ட்ரோவாதமும் குட்டி முதலாளித்துவ தேசியவாதமும்
7. தொழிற்சங்கங்களின் 150 ஆண்டுகள்- ஒரு மார்க்சிச மதிப்பீடு
8. கலை, கலாச்சாரம், சோசலிசம்
9. சோசலிச சமத்துவமும் புரட்சிக் கட்சியின் வேலைத்திட்டமும்

**கட்டுநாயக்க -குரண கம்கரு செவன மண்டபம்**

6. செப்டம்பர் 06 மாலை 4மணிக்கு

**மொரட்டுவை சொய்சாபுர சனசமூக மண்டபம்**

7. செப்டம்பர் 06 மாலை 4மணிக்கு
8. செப்டம்பர் 20 மாலை 4மணிக்கு
9. அக்டோபர் 4 மாலை 4மணிக்கு

**கம்பஹா சுஹத மாவத்தை சனசமூக மண்டபம்**

6. செப்டம்பர் 20 மாலை 2மணிக்கு
7. அக்டோபர் 25 மாலை 2மணிக்கு
8. நவம்பர் 22 மாலை 2மணிக்கு
9. டிசம்பர் 20 மாலை 2மணிக்கு

**சோசலிச சமத்துவக் கட்சி மாத இதழ்**

**தொழிலாளர் பாதை**

**சந்தாதாரர் ஆகுங்கள்**

சந்தா (தபால் கட்டணம் உட்பட)

| | |
|---|---|
| இதழ் 3 | ரூ.27 |
| இதழ் 6 | ரூ.54 |
| இதழ் 12 | ரூ.108 |
| இதழ் 24 | ரூ.216 |

விபரங்களுக்கு:
தொழிலாளர் பாதை
முகாமையாளர்,
90, 1வது மாளிகாகந்த
ஒழுங்கை, மருதானை,
கொழும்பு 10
தொ.பே. 682220

## சோசலிச சமத்துவக் கட்சியில் சேருங்கள்

பெயர் . . . . . . . . . . . . . . . . . . . . . . .

முகவரி . . . . . . . . . . . . . . . . . . . . . .

கையொப்பம் . . . . . . . . . . . திகதி . . . . . . . .

இக் கூப்பனை அனுப்ப வேண்டிய முகவரி
பொதுச் செயலாளர்,
சோசலிச சமத்துவக் கட்சி
90, 1வது மாளிகாகந்த ஒழுங்கை,
மருதானை, கொழும்பு 10
தொ.பே. 682220

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

90, 1 வது மாளிகாகந்த ஒழுங்கை, கொழும்பு-10ல் வசிக்கும் தீபால் ஜயசேகர ஆகிய என்னால் 749, அவிசாவளை வீதி, வெல்லம்பிட்டியில் உள்ள லஸ்சன அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.